Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 30.00

ஜூலை 24 - 30, 2014

# வாரமலர் தினமுரசு

முரசு வாசகர்களுக்கு இனிய நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1076

## இலங்கை அரசின் இன்னொரு வியூகம்





## காஸா மண்ணில் தோற்றது ஐ.நா!

## குறிவைக்கப்படும் மலேசிய விமானங்கள்



# ॐ நந்தி சிவன் இடையே செல்லலாமா?

சிவாலயங்களில், நந்தி கொடி மரம், பலிபீடம் ஆகியவை ஒரே வரிசையில் இருப்பதை காணலாம். ஸ்ரீநந்தி தேவர் சிவபெருமானை கண்மணி ஒளியிலிருந்து தவறவிடாதவாறு பார்த்துக் கொண்டிருப்பவர். ஸ்ரீநந்திதேவர் இறைவனின் வாகனமாவார்.

தனது தவ வலிமையால் இறைவனுக்கு முதல் மாணவரானவர். திருக்கயிலையில் பொற்பிரம்பு ஏந்தி சகல ரிஷி-முனிவர் தேவர்களை ஒதுங்கி நிற்கச்செய்து சிவனாரின் ஆசியை பெற, வரிசைப்படுத்தும் பணிசெய்து போற்றப்படுபவர். இறைவன் அருளால் 'சுயசை' என்ற மனைவியை கொண்டவர்.

இராவணன் செய்த தவறால் கோபமுற்று, இலங்கை குரங்கினால் அழியவேண்டும் என சபித்தவர். ஸ்ரீபர்வத படிவம் பற்றி சிவபெருமானை தாங்கி நிற்பவர். திருமாலுக்கு சிவபெருமான்மியம் கூறியவர். பக்தர்கள் சிவாலய வழிபாடு கொள்ளும்போது ஸ்ரீநந்திதேவருக்கு குறுக்கே செல்லாமல் அவரை சுற்றி வலம்வந்து வணங்கி அவரது உத்தரவுபெற்ற பிறகுதான், சிவபெருமானை நாம் தரிசனம் செய்யவேண்டும்.

## ஆன்மீகம் — இயேசுவின் அன்பு

கடவுளைத் தொடர்ச்சியாக விடாமுயற்சியோடு தேடுவோர்க்கும், நல்லவராக வாழ முயற்சி செய்தும் பலவீனத்தில், மனித குறைபாடுகளில் தொடர்ந்து தவறிக் கொண்டிருக்கிறவர்களுக்கும், அதனால் சோர்வுற்றவர்களுக்கும் இயேசு இந்த நற்செய்தியைத் தருகிறார். அவருடைய அழைப்பு, "பெருஞ்சுமை சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள்" என்பதாகும்.

இந்த அழைப்பு உண்மையைத் திறந்த உள்ளத்தோடு தேடி, அதனால் சந்தித்த துன்பங்களினால், துயரங்களினால் களைப்படைந்தவர்களுக்கான அழைப்பு. நம்முடைய அறிவை கசக்கிப் பிழிந்தால் கடவுளை அடைந்துவிடலாம் என்று நினைத்தால் அது முற்றிலும் தவறு. மாறாக, இயேசுவின்மீது நமது பார்வையைத்திருப்பி, அவர்மீது நமது முழுமையான நம்பிக்கை வைத்தால் கடவுளை அடைந்து விடலாம்.

ஒரு பாரம்பரிய யூதருக்கு, மதம் என்பது அவன்மீது சுமத்தப்பட்ட சுமை. ஏனென்றால் சட்டம் என்றபெயரில் பல சுமைகளை பரிசேயர்களும், சதுசேயர்களும் பாமரர்களுக்கு நடுவில் விதைத்திருந்தனர். எனவே, ஒரு யூதனுக்கு மதம் என்பது முடிவில்லாத சட்டங்களைக் கொண்டது. "என் சுமை எளிதாயுள்ளது" என்று இயேசு சொல்வது வெறும் சுமையைக் குறிப்பது அல்ல. மாறாக, அன்புச்சுமையைக் குறிப்பது.

## நோன்புப் பெருநாளைக் கொண்டாடுவோம்

நற்செயல்கள் அனைத்திற்கும் மலக்குகள் மூலம் பிரதி பலனை வழங்குகிறேன். ஆனால் நோன்பு என்பது தூய்மையான எனக்காக வேண்டியே நோற்கப்படுவதனால் நோன்பின் பிரதிபலனை வழங்குகிறேன் என்று அல்லாஹ் அல்குர்ஆனில் கூறுகிறான்.

ஆம். நாம் அல்லாஹ்வுக்காக ரமழான் முழுவதும் நோன்பு நோற்று இதன் இதர கடமைகளையும் நிறைவேற்றி அதன்மூலம் அல்லாஹ்வின் அருளையும் மன்னிப்பையும் பெறவேண்டும்.

ரமழான் நோன்பு முற்பிரிவுகளைக் கொண்டது. முதற் பகுதி அல்லாஹ்வுடைய ரஹ்மத்தாகவும், இதன் நடுப்பகுதி பாவமன்னிப்பாகவும் இறுதிப் பகுதி நரக நெருப்பை விட்டும் விடுதலை பெறுவதற்காகவும் உள்ளது.

ரமழான் நோன்பில் "லைலத்துல் கத்ரு" என்ற ஓர் இரவு இருக்கிறது. இது மிகுந்த பரகத்துகளும் நன்மைகளும் பொருந்திய இரவாகும். இதனை ரமழான் நோன்பு வரும் கடைசிப் பத்து நாட்களில் ஒற்றைப்படையான ஓர் இரவில் தேடிக்கொள்ளுங்கள் என இறைதூதர் அவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள். எனவே நாம் ஒரு மாதகால நோன்பை பூர்த்தி செய்து ஈற்றில் "ஈதுல்" நோன்புப் பெருநாளைக் கொண்டாடுவோம்.

எம்.சீ.கலீல், கல்முனை - 05

## கவிதைப்போட்டி 1073




பாராட்டுக்குரியது

### பாசமலர்

பாசமலர் பாசமிது
பாசமதில் பேதமில்லை.
தங்கையவள்
அண்ணன் மடியில்...
மடிநோக அவன்
கைப்பிடியில்
தங்கையவள்
தூங்குகிறாள்
அண்ணனவன்
கண்விழித்துத்
தாங்குகிறான்.

ஏ.எம்.கமால்.
புத்தளம்.

## கவிதைப் போட்டி இல 1076



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 04.08.2014

கவிதைப் போட்டி இல. 1076 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### பாசப்பிணைப்பு

அன்புக்கு அன்னையாக
அணைக்கும் அண்ணனின்
முத்தத்தில் மூழ்கிதூக்கம்
கொள்ளும் அவன் தம்பி.
தூங்கினாலும் அவனுக்கு
துணையாக - தன்
பக்கத்திலே படுக்கச் செய்து
விழிப்போடு இருக்கும் - ஓர்
அண்ணனின் பாசப்பிணைப்பிது.

இளம்பிறை யோகன். புததளம்.

### உச்ச இலக்கணம்

உழைக்கச் சென்ற
பெற்றோரின்னும்
இல்லம் திரும்பவில்லை.
கைக்குழந்தையோ
சின்னவன் பொறுப்பில்
சின்னவனோ, ஆராரோ பாடி
கண்ணயர்ந்த கைக்குழந்தையை
அரவணைத்துப் படுத்திருப்பது
இரத்த பாசத்தின் உச்ச இலக்கணம்.

அ.சந்தியாகோ, கண்டி

### உரிமை

உருவம் பார்க்க முன்
அன்னையின் உயிரை
பறித்தான் இறைவன்
மண்டியிடுகிறேன்
இறைவா
என்னையும் பிரித்துவிடாதே
என் உயிரிடம் இருந்து.

பு.டிலக்ஷன். மட்டக்களப்பு.

### பிஞ்சுக் குழந்தைகளே!

வஞ்சமில்லா பிஞ்சுக் குழந்தைகள்,
பஞ்சுக்குஷனில், சாய்ந்து...
பிஞ்சு குஞ்சுகள் இரண்டும்...
ஒன்று தூங்க,
ஒன்று விழித்திருந்தது பார்க்க.
பார்ப்போரின் நெஞ்சங்கள்,
அன்பிலே, தஞ்சம்
அடையவில்லையோ?

ஜே.ஜேசுமணி. கண்டி.

### பாப்பா!

சின்ன சின்னப் பாப்பா!
என் செல்லக்குட்டி பாப்பா!
சொல்வதைக் கேள் பாப்பா
கண்ணைமூடி தூங்கு பாப்பா!
உன் தமையன்...
சொல்கிறேன் பாப்பா.

ஐவின். கண்டி.

## உங்கள் பக்கம்

### பஸ்தரிப்பு நிலையம் சீரமைக்கப்படுமா?

அம்பகமுவ பிரதேச சபைக்குட்பட்ட டிக்கோயா ஆதார வைத்திய சாலைக்கு அருகில் அமைந்துள்ள பஸ்தரிப்பு நிலையம் சீரற்ற நிலையில் காணப்படுவதனால் வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்கள் மற்றும் பயணிகள் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக பஸ் தரிப்பிடப் பகுதியில் குப்பை கழிவுகள் கொட்டப்படுவதால் பஸ்தரிப்பு நிலையம் துர்நாற்றம்வீசும் நிலையில் காணப்படுவதாகவும் பஸ்தரிப்பு நிலையத்தின் சுற்றுப்புற சூழல் சுகாதாரமற்ற நிலையில் காணப்படுவதாகவும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதனால் பஸ்தரிப்பிடத்திற்கு வரும் பயணிகள் சுகாதார சீர்கேட்டினால் தாம் மூக்கை மூடிக்கொண்டு நிற்கவேண்டிய நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

மேலும் பிரதான இப் பஸ்தரிப்பு நிலையத்தில் நாளாந்தம் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களும் ஏனைய பயணிகள் பயணத்தை மேற்கொள்கின்றனர்.

எனவே பொதுமக்களின் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்ட இவ் பஸ்தரிப்பு நிலையத்தை மீள்புனரமைக்க சம்பந்தபட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென தினமுரசின் உங்கள் பக்கமூடாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

எம்.அம்ருதன்,
அம்பகமுவ.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com

### அமைதியின் சொற்கள்

அமைதி என்பது மனிதனின்
அடிப்படைத் தேவை.
அது தனக்குள் இருந்து
உணரவேண்டிய ஒன்று.

- பிரேம் ராவத்




## வாசகர் சாலை

### காலத்தின் தேவை

காலமறிந்து செயற்படும் முரசுக்கு எனது வாழ்த்துக்கள். எப்போதும் நல்ல தகவல்களையே வழங்கிவருகிறாய்.

பாப்பா முரசு தகவல்களுக்கு ஒரு சபாஷ் போடுகிறேன்.

இவ்வாறான தகவல்களை வரவேற்கிறேன். மாணவர்களாகிய எமக்கு முரசின் ஊக்குவிப்பும் பாராட்டத்தக்கது. ஒவ்வொரு நாடுகள் முக்கிய தகவல்களை முரசு வழங்கவேண்டும்.

எம்.பூமிகா, யாழ்ப்பாணம்

### முரசின் முக்கிய பங்கு

முரசின் பக்கங்கள் அனைத்தும் பிரமாதம். கால்பந்து கட்டுரைகள் அருமை.

விளையாட்டு பக்கத்தில் தினமுரசு உள்ளூர் விளையாட்டு வீரர்களின் கட்டுரைகளை பிரசுரிப்பது இல்லையென்றே கூறவேண்டும். உள்ளூர் விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பு செய்வதற்கு முரசின் பங்கும் முக்கியமாகும்.

து.கபிலன். பதுளை

### வளர்ச்சியின் அவசியம்

பாமர மக்கள் முதல் படித்தவர்களையும் கவரும்வகையில் இருக்கிறது தினமுரசு. அரசியல் கட்டுரைகளின் நடுநிலைத்தன்மை சிறப்பு. எல்லா பக்கங்களிலும் அரசியலுக்கு ஒதுக்காமல் இன்னோரன்ன கட்டுரைகளையும் சேர்த்துக் கொள்ளலாம். இதனால் தினமுரசு இன்னும் வாசகர்கள் மத்தியில் சென்றடையும் வாய்ப்பு அதிகமுண்டு. முரசின் ஆசிரியர் இதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

முரசின் பக்கங்கள் சிறப்பாக உள்ளது. முரசு இன்னும் இன்னும் அற்புத வளர்ச்சியைக் காணவேண்டும். முரசு எனது வாழ்த்துக்கள்.

எம்.காமிலா.
புத்தளம்

## தமிழர்களது தலைவிதியை நிர்ணயிக்க

# தடுமாற்றமற்ற தலைமையை தேர்ந்தெடுக்க வேண்டும்



**அமைச்சரின் ஒருங்கிணைப்பாளர் வி.கே.ஜெகன்**



நாம் கற்றுக் கொண்ட பாடங்களிலிருந்து எதிர்கால சந்ததிக்கு மறுமலர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய வகையில் எமது இளம் சந்ததியை உருவாக்க அனைவரும் கைகோர்ப்போமானால் தமிழர்களது அனைத்துத் தேவைகளுக்கும் தீர்வு கண்டுகொள்ள முடியுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி-மட்டுவில் கிழக்கு பகுதி மக்கள் வாழ்வாதாரம் தொடர்பான நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய ஒருங்கிணைப்பாளர் வி.கே.ஜெகன் தொடர்ந்து கூறுகையில்,

அரசுடன் அணுகும் முறைகளைத் தவறாகப் பயன்படுத்துவதால்தான் தமிழ் மக்களுக்கு வரவிருக்கும் அனைத்து நன்மைகளையும் இழக்கநேரிடுகின்றது. இழப்புக்களையும் வலிகளையும் சுமந்தவர்கள் தமிழர்கள். இதனால் அரசியலில் ஒரு மாற்றத்தை கொண்டுவர வேண்டியுள்ளவர்களாக இருக்கின்றோம்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என்ற தனிமனிதர் திடமான முயற்சியால் இணக்க அரசியல்மூலம் எத்தனையாயிரம் திட்டங்களை உங்களுக்கு பெற்றுத் தந்துகொண்டிருக்கிறார். ஆனால் உங்களது வாக்குகளைப் பெற்றவர்கள் மக்களது அடிப்படைத் தேவைகளைக்கூட செய்யாது இருக்கின்றார்கள். அவர்களைத்தான் தமிழர்கள் தொடர்ந்தும் தமது பிரதிநிதிகளாக நியமிக்கின்றார்கள். இந்த நிலைமையை மாற்றியமைப்பதன் மூலம்தான் தமிழர்களது வாழ்வியலில் மாற்றங்களை கொண்டுவரமுடியும்.

உங்களுக்கானவற்றை செய்யாதவர்களை தள்ளிவைக்கும் நிலைக்கு நீங்கள் வரும்போதுதான் வாழ்வில் வளமுடையவர்களாக நீங்கள் ஒவ்வொருவரும் உருவாகமுடியும் என்பதோடு அடுதத தலைமுறைக்கு நாங்கள் அனைத்தையும் வென்று கொடுத்தவராக செல்லமுடியும் என்றார்.

## நாடாளுமன்ற உறுப்பினருக்கு பிணை

குருநாகல் பகுதியை சேர்ந்த ஒருவர் மீது தாக்குதல் நடத்திய ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நிமல் விஜேசிங்க என்றழைக்கப்படும் நில்வலா விஜேசிங்க பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மேலும் தெரியவருவதாவது, கடந்த 19ஆம் திகதி குறித்த கிராமசேவகரது பிரிவிலுள்ள பலாமரத்தை சட்டவிரோதமான முறையில் வெட்டிச் செல்வதாக தகவல் அறிந்த கிராமசேவகர் அவ்விடத்துக்குச் சென்றுள்ளார். இதன்போது அங்கிருந்தவர்கள் தாம் பாராளுமன்ற உறுப்பினர் நில்வலா விஜேசிங்கவின் ஆதரவாளர்கள் எனத் தெரிவித்துள்ளனர்.

இதன்பின்னர் பாராளுமன்ற உறுப்பினருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி, கிராமசேவகரை பேசுமாறு குறிப்பி[illegible]னர். எனினும் கிராமசேவகர் அதனை மறுத்துள்ளார். இந்நிலையில் சம்பவ இடத்திற்குவந்த பாராளுமன்ற உறுப்பினர் கிராமசேவகரை தகாத வார்த்தைகளால் திட்டியதோடு தாக்கியும் உள்ளார். இது தொடர்பான முறைப்பாட்டையடுத்தே அவரை பொலிஸார் கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மதுரையில் தவித்த பாட்டிக்கு உதவி!

கொழும்பைச் சேர்ந்த மேரிஜோசப்(70) என்பவர் கண் அறுவைச் சிகிச்சை செய்வதற்காக விமானம்மூலமாக மதுரைக்கு சென்றுள்ளார். அங்கு, அவர் எதிர்பார்த்ததைக் காட்டிலும் மருத்துவச் செலவு அதிகமானதால், கொண்டு வந்த பணம் செலவழிந்துவிட்டதாம்.

இந்நிலையில், உறவினர்களை தொடர்பு கொள்ள முடியாதநிலையில், உதவிகோரி மாநகரக் காவல் ஆணையர் அலுவலகத்தை அணுகியிருக்கிறார். அங்கிருந்து மேரி ஜோசப் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

# குறிவைக்கப்படும் மலேசிய விமானங்கள்

**ரிஷியின் தகவல்களுடன் தொகுப்பு ராஜூ**

**உக்ரேன்** - ரஷ்ய எல்லையில் மலேசிய பயணிகள் விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டு 298 உயிர்கள் காவுகொள்ளப்பட்ட அதிர்ச்சியில் இருந்து உலகம் இன்னும் மீளவில்லை. குறிப்பாக அடிக்கடி விமான பயணங்களில் ஈடுபடுகின்றவர்களின் கனவிலும் இதுதொடர்பான செய்திகள்தான் வந்து கொண்டிருக்கின்றது.

இந்நிலையில் விமானத்தை சுட்டு வீழ்த்தியவர்கள் யார்? என்ற கேள்விதான் முக்கியமானதாக மாறியிருக்கின்றது. சுட்டு வீழ்த்திய ஏவுகணை எங்கிருந்து புறப்பட்டது எனறவிடயம் தெரிந்துவிட்ட நிலை யில், "ஏவுகணையை ஏவியது யார்?" என்ற கேள்வி[illegible]கிடைக்கக கூடிய பதில், இராஜதந்திர ரீதி[illegible]க பல சிக்கல்களை ஏற்படுத்தக் கூடியது.

சரி. ஏவுகணை ஏவப்பட்டது உக்ரேனில் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சி யாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் என்று வைத்துக் கொள்வாம். ஏவப்பட்டது SA-11 ரக ஏவுகணை என்றும் எடுத்துக் கொள்வோம்.

இந்த SA-11 ஏவுகணை சிஸ்டத்தில் இருந்து ஒரு ஏவுகணையை துல்லியமாக குறிவைத்து மேலே அனுப்புவது கொக்கு சுடுவது போன்றோ அல்லது ஈக்குவானம் விடுவது போன்ற சமாச் சாரமல்ல. இதற்கு திறமையான பயிற்சி தேவை.

அப்படியான பயிற்சி பெற்றவர்கள், உக்ரேனில் உள்ள கிளர்ச்சியாளர்களிடையே உள்ளார்களா என்று ஆராய்வதைவிட வேறு ஒரு கோணத்தில் யோசித்து பார்ப்போம்!

SA-11 சிஸ்டத்தில் இருந்து ஒரு ஏவுகணையை மேலே அனுப்ப, எந்தனை பேர் கொண்ட படைப்பிரிவு தேவை?

கண்ட்ரோல்களை இயக்க நன்றாக விடயம் தெரிந்த ஒரேயொரு நபரும், அவருக்கு உதவியாளர்களாக இரண்டே இரண்டு பேரும் போதும்!

உதவியாளர்கள் ஒன்றும் விஞ்ஞானிகளாக இருக்க வேண்டியதில்லை. கண்ட்ரோலில் உள்ளவர் சொல்வதை அப்படியே கிளிப்பிள்ளை மாதிரி செய்யக்கூடிய ஆசாமிகள் போதும்.

மொத்தத்தில், SA-11 சிஸ்டத்தில் இருந்து ஏவுகணை ஏவுவதில் நிபுணத்துவம் உள்ள ஒற்றை ஒன் இருந்தால், மற்ற ஆட்கள் இருவரை லோக்கலில் பிடித்துக்கொள்ளலாம்.


ஏவுகணை கிளம்பிய இடம், உக்ரேன்-ரஷ்யா எல்லையில் உள்ளது. எல்லைப் பகுதி கிளர்ச்சியாளர்களின் கண்ட்ரோலில் உள்ளது. எல்லைக்கு மறுபுறத்தில் இருந்து ரஷ்ய இராணுவ நிபுணர் ஒருவரை இந்தப் பக்கம கொண்டுவருவது ஒன்றும் பெரிய விடயமில்லை.


(21 ஆம் பக்கம் பார்க்க)

**இப்படத்தில் இருப்பதுதான் சுட்டுவீழ்த்தப்பட்ட விமானம். இது புறப்படுவதற்கு தயாரான நிலையில் ஆம்ஸ்ரடாம் விமான நிலையத்தில் பயணிகளை ஏற்றிக் கொண்டிருக்கின்ற வேளையில் எடுக்கப்பட்டது. இப்படத்தை எடுத்தவர் வேறு யாருமில்லை. இதே விமானத்தில் பயணித்து உயிரிழந்த பயணிகளில் ஒருவரேயாவார்.**

**இவ்விமானத்தில் ஏறச் செல்லும்பொழுது தனது கைத்தொலைபேசியூடாக விமானத்தை கிளிக் செய்த குறித்த பயணி அதனை தனது பேஸ்புக்கில் தரவேற்றம் செய்து கருத்தையும் வெளியிடுகிறார்.**

**"இந்த விமானமும் மாயமாகிவிடுமோ தெரியாது. எதற்கும் ஒருமுறை பார்த்து வைத்துக் கொள்ளுங்களேன்" என்று. குறித்த பிரயாணியின் உள்ளுணர்வு சொல்லியதன்படி இந்த விமானம் காணாமல் போய்விட்டது. ஆனால் மாயமாக அல்ல... சாம்பலாக...!**





வாரமலர்
# தினமுரசு

த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## கூட்டமைப்பின் கூத்தில் மோடி நடிக்கமாட்டார்!!

இந்திய மத்திய அரசில் மன்மோகன் சிங் அரசு இல்லாமல் போனால் இலங்கை தமிழ் மக்களின் பிரச்சினைக்கு விடிவு காலம் ஏற்பட்டுவிடும். பி.ஜே.பி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தால் இலங்கை தமிழர்களுக்கு தனியான ஆட்சி நிர்வாகத்தை பெற்றுத் தந்துவிடும். இப்படியெல்லாம் தமிழ்க் கூட்டமைப்பினர் இலங்கையில் உள்ள தமிழ் மக்களை நம்பச் செய்தார்கள்.

தென் இந்தியாவில் சீமான் உட்பட புலிகள் ஆதரவாளர்களும் இதே பாணியிலான பிர சாரத்தையே முன்னெடுத்தார்கள். இறுதி யுத்தத்தில் இலங்கை அரசுக்கு உதவிசெய்த காங்கிரஸ் ஆட்சியைக் கவிழ்த்து பழிதீர்க்க வேண்டும். காங்கிரஸ் ஆட்சியில் பங்காளியாக இருந்த கலைஞர் தமிழ் மக்களின் அழிவை தடுத்துநிறுத்த காங்கிரஸ் தலைமையை வற்புறுத்தவில்லை. ஆகவே தமிழகத்தில் கலைஞரின் வெற்றியையும் தடுக்கவேண்டும் என்று அவர்கள் உணர்ச்சி பேசினார்கள்.

இறுதியில் மத்தியில் காங்கிரஸ் ஆட்சி கவிழ்ந்தது. தமிழ் நாட்டில் கலைஞர் ஒரு ஆசனங்களைக்கூட வெற்றி கொள்ள முடியாமல் தோற்றுப்போனார். சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்திக் கொண்ட ஜெயலலிதா அமோக வெற்றியடைந்தார். ஆனாலும் பிரதமர் மோடி தமிழக ஆசனங்களின் தேவைக்கு இடமில்லாமலே பெரும்பான்மை வெற்றிபெற்று ஜெயலலிதாவின் வெற்றியை யும் செல்லாக்காசாக மாற்றினார்.

இப்போது தமிழ் மக்களின் பிரச்சினைகளை எடுத்துச் சொல்லவும், அதற்கு தீர்வுநோக்கி மத்திய அரசை வற்புறுத்தவும் யாரும் இல்லை. அந்தக் கதவுகள் மூடப்பட்டுவிட்டன.

தமிழகத்தின் சீமான் போன்றவர்கள் தமது சொந்த வேலைகளில் இறங்கிவிட்டார்கள். இலங்கையில் கூட்டமைப்பு இந்திய தொடர்பு கள் அறுந்து தமிழக பிரமுகர்களையும், மோடி யின் நெருக்கமானவர்களையும் தேடிக் கொண்டிருக்கின்றது. மோடிக்கு அனுப்புவதாக கூட்டமைப்பு அனுப்பும் கடிதங்கள்கூட சரியான முகவரிக்கு போய்ச் சேரவில்லை.

மோடி பதவியேற்ற காலத்திலிருந்து அவரை சந்திப்பதற்கு ஒரு வாய்ப்புக் கேட்டு கோரிக்கை மேல் கோரிக்கை அனுப்பிக் கொண்டு இருக் கின்றார்கள். தேடிவந்த வாய்ப்பை தவற விட்டதற்கான தண்டனை இதுதான்.

தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற் கான நல்ல வாய்ப்புக்களை கூட்டமைப்பு தவறவிட்டதையும், மோடியின் பதவியேற்பு விழாவுக்கு வட மாகாண முதலமைச்சருக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்த வாய்ப்பை தவறவிட்டதையும், பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்குச் சென்று மாகாண சபையை முழுமையாக அமுல்படுத்துமாறு பேசுமாறு இந்தியத் தரப்பால் கொடுத்த அறிவுறுத்தலை தட்டிக்கழித்ததையும், இந்தியாவை மீறியபடி அமெரிக்காவையும், ஐ.நா. மனித உரிமைப் பேரவையையும் கையாள முயன்ற கூட்டமைப்பின் முட்டாள்தனத்தையும் மோடி அரசாங்கம் சகித்துக் கொள்ளவில்லை என்பது தெளிவாகின்றது.

மோடி தலைமையிலான அரசு இலங்கை அரசுக்கு நெருக்கமாகவும், பாதுகாப்பாகவும் இருக்கும் என்று கூறியிருப்பதைப் பார்க்கும்போது, கூட்டமைப்பினர்மீது மோடி அரசு அவநம்பிக்கையுடன் உள்ளது தெரிகின்றது. இந்த யதார்த்தத்தையாவது கூட்டமைப்பு புரிந்துகொள்ளுமா?

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.



இந்தியாவின் இந்த நிலைப்பாடு இலங்கைக்கு இன்னும் தன்னம்பிக்கையைக் கொடுப்பதாகவே அமைந்துள்ளது என்பதால் இலங்கையின் சர்வதேசம் நோக்கிய காய்நகர்த்தல்கள் நவநீதம்பிள்ளை போன்றவர்களுக்கு பின்னடைவுகளை ஏற்படுத்துவதாகவே அமையும்.

# இலங்கை அரசின் இன்னொரு வியூகம்

இலங்கை அரசாங்கம் சர்வதேசத்தை கையாள் வதில் நன்கு தேர்ச்சியடைந்து வருகின்றது. இராஜதந்திர ரீதியாக யுத்தத்திற்குப் பின்னர் இலங்கை அரசானது சர்வதேசத்துடன் நேர்த்தியான உறவுகளைப் பேணவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

மேற்குலக நாடுகளுடன் உறவுகளை பலப்படுத்துவதை விடவும், இலங்கை ஆசியப் பிராந்தியத்திலுள்ள நாடு களுடனான உறவுகளை பலப்படுத்துவதில் கூடுதல் அக்கறை காட்டிச் செயற்பட்டுவருகின்றது.

அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய நாடுகள் என்ப வற்றை விடவும் ரஷ்யா, சீனா, இந்தியா போன்ற நாடுகளுடன் மிகநெருக்கமான உறவுகளை கொண்டுள்ளது. இதனால் இலங்கைமீது அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் சீற்றம் அடைந்துள்ளன.

நாடுகள் சபையுடனும், அதன் கிளை நிறுவனங்க ளுடனும்கூட இலங்கை சற்றுத் தூரமான இடை வெளியையே கொண்டிருக் கின்றது.

இலங்கைமீது போர்க் குற்றச்சாட்டையும், மனித உரிமை மீறல்கள் குற்றச் சாட்டையும் ஐக்கிய நாடு களின் மனித உரிமைகள் பேரவை சுமத்தியதையும், அப்படி குற்றச்சாட்டு மீதான விசாரணையை வலியுறுத்தி அமெரிக்கா பிரேரணையை கொண்டுவந்து நிறைவேற்றி யதையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நியாயக் குரலாக பார்ப்பதைவிடவும், இலங்கைமீதான மேற்குலகின் சொந்த நிகழ்ச்சி நிரலாகவே பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையில் இலங்கை அரசு ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் விசாரணைகள், அழுத்தங்களைக் கண்டு அஞ்சாமல், ஏட்டிக்குப் போட்டி யாக மாற்றுத் திட்டங்களை முன்வைத்து சவால்விடுகின்ற நிலைமையே தற்போது தோன்றியுள்ளது.

ஐ.நா சபையின் செயற்பாடுகள் உலக அரங்கில் தோல்வி கண்டுள்ளது. மிக அண்மையில் பலஸ்தீனத்தின் காஸாவில் இஸ்ரேலின் தாக்குதல்களால் அப்பாவி பொதுமக்கள் தொகை தொகையாக பலியாகிக் கொண்டி ருக்கையில், தமது பிரதிநிதிகளின் பாதுகாப்பை மட்டும் கவனத்தில் கொண்டு காஸாவை விட்டு வெளியேறியுள்ளது.

இதே நிலைமையே இலங்கை யின் வன்னியிலும் நடந்தது. யுத்தம் ஒரு மூர்க்கமான கட்டத்தை அடைந்துகொண்டிருந்த போது, மூன்று இலட்சத்திற்கும் அதிகமான அப்பாவி மக்கள் பயங்கரமான உயிர் ஆபத்தை எதிர்கொள்ளப் போகின்ற நேரத்தில் அங்கு நிலை கொண்டிருந்த ஐ.நா சபை பிரதிநிதிகள் தமது பாதுகாப்பை காரணம் கூறி வெளியேறினார்கள்.

அப்போது பொதுமக்கள் ஐ.நா. பிரதிநிதிகளை வெளியேற வேண்டாம் என்றும், தம்மை பாதுகாக்க ஏதாவது செய்யுமாறும் காலில் விழுந்து கெஞ்சினார்கள், வாசலில் கண்ணீர் சிந்தி அழுதார்கள். ஆனால் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாத ஐ.நா. பிரதிநிதிகள் வன்னியைவிட்டு வெளியேறினார்கள்.

வன்னியில் பெரும் மனித அழிவுகள் இடம்பெற்றன. சுமார் நாற்பதாயிரம் பொதுமக்கள் பலியானார்கள். ஐ.நா. இப்போது, போர்க்குற்றம், மனித உரிமை மீறல்களை தொடர்பில் பேசுகின்றது.

இப்போது காஸாவிலும் அதே மனிதப் பேரழிவுகள் இடம்பெறுகின்றன. ஐ.நாவோ, மனித உரிமைப் பேரவை அந்தப் பக்கமே திரும்பிப்பார்க்கவில்லை. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை பாலஸ்தீன படுகொலைகளை கணக்கிட்டுக் கொண்டிருக்கின்றார்.

இஸ்ரேல் அமெரிக்காவின் கைப்பிள்ளை என்பதால் ஐ.நா சபை எல்லாவற்றையும் மூடிக்கொண்டுள்ளது. உக்ரேனில் கிரிமியாப் பகுதியை ரஷ்யா தலையிட்டு விடுவித்தபோது, அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் துள்ளியெழும்பி, ரஷ்யாமீது அழுத்தங்களை கொடுத்தன.

பொருளாதாரத் தடைகள் தொடர்பில் கருத்துக் கூறின, இதற்குக்காரணம் உக்ரேன் மீதான அக்கறையோ, அன்போ அல்ல. உக்ரேன் பிராந்தியக் கடற்பரப்பில் அமெரிக்காவின் இராணுவ நிலைகள், எரிவாயு பரிமாற்ற தேவைகள், ரஷ்யாவை கட்டுப்படுத்தும் திட்ட முன்னெடுப்புக்கள் என்பனவே காரணமாக அமைந்தன.

ஆகவேதான் தற்போதைய உலகப்போக்கில் ஒரு நாட்டின் மீது இன்னொரு நாடு அக்கறை காட்டுவதையும், அழுத்தம் கொடுப்பதையும், பாதிக்கப்பட்ட மக்களின் நலன்சார்ந்த முன் னெடுப்பாக நம்பமுடியவில்லை.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் இலங்கைமீதான நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கை அரசு பிடிவாதமான நிலைப்பாட்டில் உள்ளது. ஐ.நா விசாரணையாளர் களை இலங்கைக்குள் அனுமதிக்கப் போவதில்லை என்று திட்டவட்டமாகக் கூறியதுடன், பாராளுமன்றத்தில் தனது நிலைப்பாட்டுக்கான பிரேரணையையும் நிறைவேற்றி உள்ளது.

அதன்பின்னர், விசாரணை யாளர்கள் இலங்கைக்கு வராமலே தமது விசாரணைகளை முன்னெடுப்பார்கள் என்று நவநீதம்பிள்ளை தனது இயலா மையை வெளிக்காட்டியுள்ளார்.

அடுத்தபடியாக, இலங்கை அரசு மூன்று சர்வதேச பிரதிநிதி களை நியமித்து நவநீதம் பிள்ளைக்கு பேரதிர்ச்சியைக் கொடுத்தது. இலங்கை ஜனாதிபதி யால் நியமிக்கப்பட்ட அந்த மூன்றுபேரும் சர்வதேச போர்க் குற்றங்கள் தொடர்பில் வழக்குத் தொடுநர்களாகவும், நீதிபதி களாகவும் இருந்தவர்களாவர். இக்குழுவின் தலைவராக அங் கோலா நாட்டின் சட்டத்தரணி டெஸ்மன் டீ சில்வாவும், உறுப்பினர்களாக இலண்டனைச் சேர்ந்த முன்னாள் நீதிபதி ஜெப்றி நைஸ், அமெரிக்காவைச் சேர்ந்த மூத்த சட்டத்தரணி டேவிட் கிறேன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது மனித உரிமை மீறல்கள் மற்றும் இறுதிப்போரில் நடந்தவைகள், காணாமல் போனோர் தொடர்பான விசாரணைக் குழுவுக்கு ஆலோசனை வழங்குகின்ற பணியை இந்த சர்வதேச பிரதி நிதிகள் செய்வார்கள் என்றும் இலங்கை அரசு கூறியுள்ளது.

ஏற்கெனவே இலங்கை அரசு நியமித்த விசாரணை ஆணைக்குழு நம்பகத்தன்மை அற்றது, சுயாதீனமற்றது என்று கூறிய அமெரிக்கா தற்போது அந்த விசாரணைக் குழுவுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்க இலங்கை அரசு நியமித்த சர்வதேச குழுவை வரவேற்றுள்ளது.

இவற்றைப் பார்க்கும்போது, இலங்கை அரசு ஐ.நா. மனித உரிமைப் பேரவையையும், அமெரிக்காவையும் கையாள்வதற்கு நன்கு தேர்ச்சியடைந்துவிட்டுள்ளது என்பது புலனாகிறது.

இதேவேளை இந்திய வெளி யுறவுக் கொள்கை விளக்கக் கலந்துரையாடல் ஒன்று கொழும்பில் நடைபெற்றது. அதில் மோடி அரசின் வெளி யுறவுக் கொள்கை வகுப்பாளர் களான ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியன் சுவாமி தலைமையில், பாரதீய ஜனதா கட்சியின் வெளியுறவுக் கொள்கைக்கான அமைப்பாளர் ஷேசாத்திரி சாரி, முன்னாள் மத்திய அமைச்சர் சுரேஸ் பிரபு, பிரபல பத்திரிகையாளர் மற்றும் அரசியல் ஆய்வறிஞர் சுபவன் தாஸ்குப்தா, மணிபால் உயர் கல்வி அக்கடமியின் பூகோள அரசியல் பேராசிரியர் மாதவன் நாளபட், ஆகியோரே மோடியின் கீழ் இந்தியா எனும் மையக் கருத்தில் உரையாற்றினார்கள்.

அதில் இலங்கை அரசுமீது பொருளாதாரத் தடைகளை சர்வதேசம் விதித்தாலும் இந்தியா, இலங்கையை பாது காக்கும் என்று அண்மையில் கொழும்பில் நடைபெற்ற மோடி அரசின் சர்வதேசக் கொள்கை வகுப்பாளர்கள் குழுவினர் பகிரங்கமாக கூறியுள்ளனர். அதேபோல் இலங்கைக்கு தண்டனை வழங்குவதற்கோ, உள்விவகாரங்களில் தேவையற்ற தலையீடுகளைச் செய்வதற்கோ எடுக்கப்படும் எந்த முயற்சிகளுக்கும் இந்தியா உடன்படாது, ஆதரவு வழங்காது என்பதையும் அவர்கள் திட்டவட்டமாக கூறி யுள்ளதோடு, இலங்கையில் இன அழிப்பு என்று எதுவும் நடக்கவில்லை என்றும், ஐ.நா. பிரேரணையிலும் அப்படியான குற்றச்சாட்டு இலங்கைமீது சுமத்தப்படவில்லை. ஆகவே இலங்கையை எதற்காக தண்டிக்கவேண்டும் என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்தியாவின் இந்த நிலைப்பாடு இலங்கைக்கு இன்னும் தன்னம்பிக்கையைக் கொடுப்பதாகவே அமைந்துள்ளது என்பதால் இலங்கையின் சர்வதேசம் நோக்கிய காய் நகர்த்தல்கள் நவநீதம்பிள்ளை போன்றவர்களுக்கு பின்னடைவு களை ஏற்படுத்துவதாகவே அமையும்.



## கள்ளச் சாவி செய்யும் ஆசாமி காட்சிக்கு வருகிறார்!

(மே – ஒக்டோபர் 1854)

# முதலாவது பிரமாண்ட ரயில் கொள்ளை



எட்வேர்ட் பியார்ஸ், ட்ரெயின் கொள்ளையடிக்க முடிவுசெய்து விட்டார் என்று எழுதியிருந்தோம் அல்லவா? ட்ரெயினில் கொள்ளை யடிக்க நினைத்தது பயணிகளின் உடைமைகளை அல்ல. அவர் கண் வைத்திருக்கும் கொள்ளையுடன் ஒப்பிட்டால், பயணிகளின் உடைமைகள் தூசு.

'எட்' கண்வைத்திருந்த பொருள், ட்ரெயினின் கடைசிப் பெட்டியில் பயணிக்கும் தங்க பாளங்கள்.

அந்த நாட்களில், பிரான்சில் முகா மிட்டிருந்தது பிரிட்டிஷ் இராணுவம். பிரிட்டிஷ் இராணுவத்தினருக்கு வழங்கப்படவேண்டிய சம்பள பணம், லண்டனிலிருந்து தங்கமாக அனுப்பி வைக்கப்படும். தங்கத்தை பிரிட்டிஷ் அரசின் சார்பாக அனுப்புவது ஒரு பிரபலமான பிரிட்டிஷ் வங்கி.

அனுப்பப்படும் தங்க பாளங்கள் பாதுகாப்பான இரும்புப் பெட்டிகளில் வைக்கப்படும். அவை சீல் செய்யப் பட்டபின், வங்கியிலிருந்து ரெயில்வே ஸ்டேஷனை நோக்கிக் கிளம்பும்.

ஆயுதம் தரித்த காவலர்கள் பாது காப்புடன், குதிரை வண்டியில் அனுப்பப்படும்.

குதிரை வண்டி ஒவ்வொரு முறையும் ஒரே பாதையில் பயணிப்பதும் இல்லை, ஒரே நேரத்தில் கிளம்புவதும் இல்லை. பாதுகாப்பு காரணங்களுக் காக புறப்படும் நேரமும், பாதையும் மாற்றப்பட்டுக் கொண்டிருக்கும்.

ரயில்வே ஸ்டேஷனுக்கு தங்கம் கொண்டு செல்வதற்காக மொத்தம் 10 காவலர்கள். எல்லோருமே விசுவாசமானவர்கள். ஆயுதம் தரித்தவர்கள்.

மொத்தத்தில் தங்கம் வங்கியில் இருந்து கிளம்பி, ரெயில்வே ஸ்டேஷ னுக்கு வரும் வழியில் கொள்ளை அடிப்பது, சாத்தியமே இல்லை. முயற் சித்தால் மூக்குடைய வேண்டியிருக்கும்.

தங்கம் ரெயில்வே ஸ்டேஷனுக்குள் நுழைந்த உடனே, அதை பாதுகாப்பாக கொண்டுவந்து சேர்த்த பாதுகாப்பு நிறுவனத்திடமிருந்து, தங்கத்தின் பாதுகாப்பு கடமை, பிரிட்டிஷ் ரெயில்வே இலாகாவிடம் வருகிறது.

ரெயில்வே இலாகாவும் பாதுகாப்புக் காக பக்கா ஏற்பாடுகளை செய்திருந்தது.

தங்கம் செல்லவேண்டிய ரயிலின் கடைசிப் பெட்டியில், பெரிய இரும்பு லொக்கர் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த இரும்பு லொக்கர், சுப் என்ற நிறுவனத்தின் தயாரிப்பு. அந்த நாட்களில் சுப் இரும்பு லொக்கர்கள் சர்வதேச அளவில் புகழ்பெற்றவை.

அதுவும், ரயிலில் இருப்பது, அவர்கள் வழமையாக மற்ற வாடிக்கையாளர் களுக்காக தயாரிக்கும் இரும்பு லொக்கர் அல்ல.

பிரிட்டிஷ் ரயில்வேயின் சிறப்பு வேண்டுகோளின் பேரில், பிரத்தியேக மாக தயாரிக்கப்பட்ட இரும்பு லொக்கர்.

லொக்கர் அமைக் கப்பட்ட இரும்புத் தகடுகள் கால் அங்குலத் தடிப்புள்ள டெம்போட் ஸ்டீலால் ஆனவை. பெட்டிக்கும் பெட்டியின் மூடிக்கும் இடையேயுள்ள இணைப்புக்கள் எதுவுமே பெட்டிக்கு வெளியே இல்லை. எல்லா இணைப்புக்களுமே பெட்டிக்கு உட்புறமாக இருக்கும்படி அமைக்கப் பட்டுள்ளன.

இதனால் பெட்டி மூடப்பட்டால் சாவிகளால் திறக்கப்படுவதுதான் ஒரே வழி. பெட்டிக்கும் கதவுகளுக்கும் இடையே பொருத்தப்பட்டுள்ள இணைப்புக்கள்மூலம் திறக்கமுடியாது.

சரி. பெட்டியை திறக்க முடியா விட்டால் போகட்டும் என்று பெட்டியையே தூக்கிச் சென்றுவிட்டால்? அதுவும் முடியாது.

காரணம் ஒவ்வொரு பெட்டியும் 250 பவுண்டு எடை கொண்டவை. பெட்டியின் எடையே அவ்வளவு அதிகம். அத்துடன் உள்ளேயுள்ள தங்கத்தின் எடையும் சேர்ந்து கொண்டால், அதை ரெயினில் இருந்து தூக்கிச் செல்வது பற்றி நினைத்துக்கூட பார்க்கமுடியாது.

அதுவும் அப்படியா? கள்ளச் சாவி போட்டுத் திறக்கலாமே?

அதிலும் ஒரு சிக்கல்.

இந்த இரும்புப் பெட்டிக்கு இருப்பது 4 சாவிகள். 4 சாவிகளையும் போட்டுத் திறந்தால்தான் இரும்புப் பெட்டியின் கதவுக் திறக்கும்.

ரெயினிலுள்ள இரும்புப் பெட்டிக் குள் தங்கம் வைக்கப்பட்டவுடன் பெட்டி பூட்டப்பட்டு, நான்கு சாவிகளும் வெவ்வேறு இடங்களில் வைக்கப்படும். இரண்டு சாவிகள் ஸ்டேஷனிலுள்ள ரெயில்வே அலுவலகத்தில் வைக்கப் படும். ஒரு சாவி தங்கத்தை அனுப்பும் வங்கியின் உரிமையாளர் திரு. ட்ரென்ட்டிடம் கொடுக்கப்படும். மற்றுமோர் சாவி வங்கியின் உயரதிகாரி ஹென்ரி கோவரிடம் கொடுக்கப்படும்.

(தொடரும்...)

# புலிகளின் வதை முகாமில்

வதை 123

மணியம்



"சங்கானைக்கென் வணக்கம்
சரித்திரத்தில் உன் நாமம்
மங்காது யாழகத்து
மண்ணில் பல காலம்.
எச்சாமம் வந்து
எதிரி நுழைந்தாலும்
நிச்சாமக் கண்கள்
நெருப்பெறிந்து நீறாக்கும்.
குச்சுக் குடிசைக்குள்
கொலுவிருக்கும் வீரத்தை
மெச்சுகிறேன் சங்கானை
சங்கையிலே நீ யானை"

("நாதஸ்வர ஓசையிலே..." என்ற சினிமாப் பாடல் மெட்டில் இந்தக்கவிதை தீண்டாமை ஒழிப்புப் போராட்ட காலத்தில் மேடைகள் தோறும் பாடப்பட்டு. மக்களின் பெரும் ஆதரவினைப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது)

இத்தகைய பெருமை வாய்ந்த அந்தக் கிராமத்தைச் சேர்ந்த தோழர் சந்திரன் கடத்தப்பட்டு கொண்டு வரப்பட்டமை எனக்குள் பல கேள்விகளை எழுப்பியது. அவர் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு தீவிர ஆதரவாளராக இருந்தவர். அந்தக் கட்சிக்குள் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த நா.சண்முகதாசன் தலைமையிலான சிறு குழு வினருக்கும். நாம் சார்ந்திருந்த கட்சியின் பெரும்பான்மை அணியினருக்கும் இடையில் முரண்பாடு தோன்றி. நாம் இலங்கை மார்க்சிச – லெனினிச கம்யூனிஸ்ட் கட்சி என்ற புதிய கட்சியை அமைத்தபின்னர். தோழர் சந்திரன் உட்பட சங் கானைப் பகுதியின் பல தோழர் கள் எம்முடன் இணைந்து வேலை செய்தனர்.

ஆனால் தேசிய இனப் பிரச் சினை. ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் ஆயுதப் போராட்டமாக மாறிய பின்னர். எமது கட்சியைச் சேர்ந்த பலர் வெவ்வேறு ஆயுதப் போராட்ட இயக்கங்களில் தம்மை இணைத்துக் கொள்ள ஆரம்பித் தனர். அத்தகையவர்களின் பட்டியல் மிகநீண்டது.

குறிப்பாக மட்டுவிலைச் சேர்ந்த பாலு (புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளராக மூர்த்தி என்ற பெயரில் இருந்தவர் தமிழ்ச்செல்வனின் சொந்த அண்ணர்). புத்தூரைச் சேர்ந்த கவிஞர் புதுவை இரத்தினதுரை. எனது காலத்தில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கல்வி கற்றவரும். கிளிநொச்சி யில் என்னுடன் முழுநேர கட்சி ஊழியராக வேலை செய்தவருமான நா.யோகேந்திரநாதன். மட்டு வில் மானாவளை கிராமத்தைச் சேர்ந்த முருகேசு மாஸ்டர் போன் றோர் புலிகள் இயக்கத்தில் இணைந்து அதில் முக்கியஸ்தர் களாகச் செயற்பட்டனர்.

எமது கட்சியில் நீண்டகாலம் முழுநேரத் தொழிற்சங்க ஊழிய ராகச் செயற்பட்ட கரவை கந்த சாமி. எனது காலத்தில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கல்வி கற்றவரும். பின்னர் வவுனியாவில் எமது கட்சி வேலைகளுக்குப் பொறுப்பாக இருந்தவருமான கௌரி காந்தன். முல்லைத்தீவில் கட்சி வேலைகளில் ஈடுபட்டிருந்த மாணிக்கம் போன்றோர் புளொட் இயக்கத்தில் இணைந்து கொண்டனர். (இதில் கௌரி காந்தன் பின்னர் புலிகளுடனும் இணைந்து வேலை செய்தார்)

இன்னொரு பகுதியினரான எமது கட்சியின் வட பிரதேசச் செயலாளராக இருந்த வி.ஏ.கந்த சாமி. கட்சியின் தொழிற்சங்க இயக்கத்தில் நீண்டகாலம் முழு-நேரச் செயற்பாட்டாளராக இருந்த எஸ்.சிவதாசன் (காலம் சென்ற முன்னாள் ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர்). மட்டுவில் மானா வளை கிராமத்தைச் சேர்ந்த கே.சுப்பையாவும் வேறு சில தோழர்களும் ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தில் இணைந்து செயற்பட்டனர்.

அதேபோல முல்லைத்தீவு மாவட்டத்தில் கட்சி வேலைகளுக் குப் பொறுப்பாக இருந்த இ.வே. துரைரத்தினம். இ.விக்கினராஜா ஆகியோரும். வவுனியா மாவட் டத்தைச் சேர்ந்த க.கந்தசாமியும் ஈரோஸ் இயக்கத்தில் இணைந்து கொண்டதுடன். அவர்களில் சிலர் அக்கட்சியின் சார்பாகப் பாராளுமன்றத் தேர்தலிலும் போட்டியிட்டனர்.

நெல்லியடிப் பகுதியைச் சேர்ந்த சில தோழர்கள் ரெலோ இயக்கத்தின் தாஸ் குழுவினருடன் மறைமுகமாக இணைந்து செயற்பட்டனர்.

இவர்களைத் தவிர. ஏனைய தமிழ் தேசியவாத இயக்கங்களில் (அவை முதலாளித்துவ அடிப்படை யிலானவை என அவர்கள் கரு-தினர்) சேர விரும்பாத ஏனைய தோழர்களில் சிலர். எமது கட்சி யால் 'தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி' என்றபெயரில் உருவாக்கப்பட்டு. பின்னர் தோழர் வி.விசுவானந்ததேவன் தலைமை யில் 'தமிழீழ தேசிய விடுதலை முன்னணி' (என்.எல்.எப்.ரி) என்ற பெயரில் உருமாற்றம் பெற்ற போது. அதனுடன் இணைந்து வேலை செய்தனர்.

அவ்வாறு என்.எல்.எப்.ரி யுடன் சேர்ந்து வேலை செய்தவர் களில். இப்பொழுது கடத்தப்பட்டு கொண்டுவரப்பட்டுள்ள சந்திரனும் ஒருவர். அவரது கடத்தலுக்கு. அவர் அந்த அமைப்புடன் கொண்டிருந்த தொடர்பு பிரதான காரணமாக இருக்கலாம் என ஊகித்தேன். அத்துடன் என்னை விசாரணை செய்தவர் களும். அநேகமாக என்.எல்.எப்.ரி இயக்கம் குறித்தே விசாரணை செய்தபடியால். அந்த இயக்கத்தவர் களைச் சுற்றியே இந்தக் கடத்தல் நடவடிக்கைகள் நடைபெறுவதா-கத் தெரிந்தது. ஆனாலும் அந்த இயக்கத்துடன் ஸ்தாபனரீதியாக எந்த விதத்திலும் சம்பந்தப்படாத என்னை ஏன் புலிகள் கடத்தி வதைக்கிறார்கள் என்பதுதான் எனக்கு விளங்காத புதிராக இருந்தது.

ஒருவேளை ஏற்கெனவே புலிகளால் கடத்தப்பட்ட அந்த அமைப்பைச் சேர்ந்த சிலர் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் தமது விசாரணைகளின் போது. எனது பெயரைச் சம்பந்தப்படுத்தியிருப்பார்களோ எனவும் எண்ணினேன்.

அதேவேளை இன்னொரு பகுதியினர் மீதும் எனக்குச் சந்தேகம் இருந்தது. எமது கட்சி 1972இல் சண்முதாசனை விட்டுப் பிரிந்தபோது. வட பகுதி யில் எமது கட்சி முக்கியஸ்தர் களில் ஒருவராக இருந்த கே.ஏ.சுப்பிரமணியம் தலை மையிலான ஒரு குழுவினர் தொடர்ந்தும் சண்முகதாசன் அணியில் இருந்தனர். பின்னர் அவர்களும் 1978இல் சண்முக தாசனை நிராகரித்துவிட்டு கம்யூனிஸ்ட் கட்சி (இடது) என்றபெயரில் தனியாகச் செயற்பட்டனர். கே.ஏ.சுப்பிர மணியம் மரணிக்கும் வரை அவர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் நல்ல உறவுகளைக் கொண்டிருந்தார். அதன் காரண மாக புலிகளால் அவருக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக் கப்பட்டு. அதன் காரணமாக அவர் கண்டிக்குச் சென்று வாழ்ந்த நிலையிலேயே மரணித்தார்.

கே.ஏ.சுப்பிரமணியம் அவர்களின் மரணத்துக்குப் பின்னர் சி.கா.செந்திவேல் என்பவர் அவர்களது கட்சியின் தலைமைப் பதவியைப் பொறுப் பேற்றுக் கொண்டதுடன். கட்சியின் பெயரையும் புதிய ஜனநாயகக் கட்சி என்று மாற்றிக் கொண்டனர்.

(தொடரும்...)




இம்மாதிரியான ஏற்பாடு எதற்காக என்றால், சர்வதேச அளவில் தன்னை யாரும் சரிவர அங்கீகரிக்காத நிலையில், உள்நாட்டிலும் எப்போதும் குழப்பம் சூழ்ந்த வண்ணமே இருந்துவிடக் கூடாதே என்பதற்காகத்தான். என்னதான் அமெரிக்கா ஆதரிக்கிறது


ידיעות אחרונות

טרומן דוחה דרישת בווין
ללחוץ לנסיגת צבאנו בנגב

שר המשפטים מעיד במשפט עכו

מומחים בודקים את הפצצות בירושלים

என்றாலும் அக்கம் பக்கத்தில் தோழமையுடன் ஒரு புன்னகை செய்யக்கூட இஸ்ரேலுக்கு யாரும் கிடையாது. பெரும்பாலான ஆசிய தேசங்களும் இஸ்ரேலின் பாலஸ்தீனிய விரோத நடவடிக்கைகளை முன்னிட்டு தொடர்ந்து தமது எதிர்ப்பை தெரிவித்தபடியேதான் இருக்கின்றன. தனித்து நின்றுபோராடி வாழ்ந்தாக வேண்டிய இருப்பியல் நெருக்கடி இஸ்ரேலுக்குத் தொடக்க காலம் முதலே இருந்து வருவதால், ஆட்சி முறையில் இப்படியான சில இரும்புத்தனங்களைச் செய்துகொண்டார்கள்.

ஒருவரைப் பிரதமாகத் தேர்ந்தெடுத்துவிட்டால், என்ன ஆனாலும் அவர் சொல் பேச்சு கேட்பது என்பதுதான் இஸ்ரேலியர்களின் இயல்பு. தவறு செய்கிறார் என்று தெரிந்தாலும் தமக்குள் பேசிக் கொள்வார்களே தவிர, பொதுவில் எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டார்கள்.

அரசாங்கம் அங்கே மீடியாவை மிகவும் போஷாக்குடன் வைத்துக் கொள்ளுவது வழக்கம். குறிப்பாகப் பத்திரிகைகள், நாளிதழ்கள், யூதப் பத்திரிகைகள் அங்கே இழுத்து மூடப்பட்டதாகச் சரித்திரமே கிடையாது. ஓடாத பத்திரிகைகள்கூட நூலக ஓர்டரின் பேரில் உயிர்வாழ்ந்து கொண்டுதான் இருக்கும். சுமார் இருபத்தைந்து தினசரிப் பத்திரிகைகள் இஸ்ரேலில் இருக்கின்றன. அவற்றுள் பதினொன்று ஹீப்ரு மொழிப் பத்திரிகை. நான்கு அரபு மொழிப் பத்திரிகைகள், ஆங்கிலம், பிரெஞ்சு, ஹங்கெரியன், ருமேனியன், ரஷ்யன், ஜெர்மன் மொழிப் பத்திரிகைகள் தலா ஒன்று.

பெரும்பாலும் ஐரோப்பிய தேசங்களிலிருந்து வந்து இஸ்ரேலில் வாழத்தொடங்கிய யூதர்கள்தான் என்பதால் அந்தந்த தேசத்து மொழிகளில் ஒரு பத்திரிகையாவது இருக்கவேண்டும் என்று திட்டமிட்டு இஸ்ரேல் அரசாங்கமே உதவிசெய்து ஆரம்பித்துவைத்த பத்திரிகைகள் இவை. ஹீப்ரு மொழியின் சிதைந்த பேச்சுவழக்கு மொழியான இட்டிஷ் மொழியிலும் ஒரு தினசரிப் பத்திரிகை உண்டு.

தேசம் உருவானதினம் முதல் இன்றுவரை இஸ்ரேலில் அரசுக்கும் பத்திரிகைகளுக்குமான உறவு மிக அற்புதமான நிலையிலேயே இருந்து வருவது ஓர் உலக ஆச்சரியம்.

எந்த ஒரு இஸ்ரேல் தினசரியும் அரசைக் கடுமையாக விமர்சிக்காது. அதேசமயம் கட்சிப் பத்திரிகை போலத் துதி பாடுவதும் கிடையாது. செய்தியை, செய்தியாக மட்டுமே வழங்குவது என்பது இஸ்ரேல் பத்திரிகைகளின் பாணி. தன் விமர்சனம் என்று எதையும் அவை முன்வைப்பதே இல்லை.

பெரும்பாலும்! Yedioth Aharonoth என்கிற ஹீப்ரு மொழி செய்தித்தாள்தான் இஸ்ரேலில் மிக அதிகம் விற்பனையாகும் பத்திரிகை. மொத்தம் மூன்று இலட்சம் பிரதிகள்.

பத்திரிகைகளுக்கும் அரசுக்கும் மட்டுமல்ல, பத்திரிகைகளுக்கும் நீதிமன்றங்களுக்கும்கூட அங்கே மிக நல்ல உறவு உண்டு. நீதிமன்ற அவமதிப்பு வழக்கு என்ற இதுவரை எந்தப் பத்திரிகை மீதும் எந்தக் காலத்திலும் யாரும் தொடுத்ததில்லை.

இஸ்ரேல் நீதிமன்றங்கள் பற்றிச் சொல்லவேண்டும். அங்கே இருவிதமான நீதி அமைப்புக்கள் செயற்படுகின்றன. ஒன்று சிவில் நீதிமன்றங்கள். இன்னொன்று மத நீதிமன்றங்கள். சிவில் நீதிமன்றங்களில் வழக்கமான வழக்குகள் மட்டும் ஏற்கப்படும். திருமணம், திருமண முறிவு உள்ளிட்ட குடும்ப விவகாரங்கள், மதம் தொடர்பான பிரச்சினைகளைக் கையாளும். குடும்ப கோர்ட் என்று இங்கே சொல்லப்படுவது போலத்தான். ஆனால் இஸ்ரேலில் குடும்பப் பிரச்சினைகள் நீதிமன்றங்களுக்கு வருமானால் மிகவும் அக்கறையெடுத்து கவனிக்கப்படும். இஸ்ரேலில் வாழ்பவர்கள் மட்டும்தான் என்றில்லை. உலகெங்கும் வசிக்கும் யூதர்களுக்கு என்ன பிரச்சினை என்றாலும் இஸ்ரேலில் இயங்கும் நீதிமன்றங்களை அணுக முடியும்.

அடுத்தபடியாக இஸ்ரேல் இராணுவம், ஒரு இலட்சத்து எண்பதாயிரம் பேர்கொண்ட முதல் நிலைப் படை. நான்கு இலட்சத்து முப்பதாயிரம் பேர்கொண்ட ரிசேர்வ் இராணுவப்படை. விமானப் படையில் முப்பத்திரண்டாயிரம் பேர். கப்பல் படையில் பத்தாயிரம் பேர்.

இன்றைய திகதியில் வெளியில் தெரிந்த இஸ்ரேல் இராணுவத்தின் பலம் இதுதான். ஆனால் சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் 1957 முதலே அவர்களிடம் இதே பலம்தான் இருந்து வந்திருக்கிறது என்பது புலப்படும்.

ஆட்பலம் குறைவானாலும் இஸ்ரேல் தன் வீரர்களுக்கு அளிக்கும் பயிற்சிகள் பிரம்மாண்டமானவை. உலகெங்கும் எங்கெல்லாம் மிகச் சிறந்த பயிற்சிகள் வழங்கப்படுகிறதோ, அங்கெல்லாம் தனது படையிரை அனுப்பி, தொடக்க காலத்தில் போர்ப் பயிற்சி அளித்திருக்கிறார்கள். பின்னால் இஸ்ரேலே பல தேசங்களுக்குப் பயிற்சியளிக்கும் அளவுக்கு இராணுவத் தொழில்நுட்பத்தில் தேர்ச்சி பெற்ற தேசமாகிவிட்டது. இது விஷயத்தில் அமெரிக்காவின் உதவி மிகவும் குறிப்பிடப்பட வேண்டியதொரு அம்சமாகும்.

அமெரிக்கா, இஸ்ரேலுக்கு ஆயுதங்களை மட்டும் வழங்கவில்லை. மாறாக அவற்றைப் பயன்படுத்துவதில் பயிற்சி, போர்க் காலங்களைச் சமாளிக்கும் நிர்வாகத் திறன் பயிற்சி, ஒற்றறியும் கலையில் பயிற்சி, உளவு நிறுவனங்களை அமைத்து, கட்டிக் காத்து, வழிநடத்துவதற்கான பயிற்சி என்று பார்த்துப் பார்த்துச் சொல்லிக் கொடுத்திருக்கிறது. இஸ்ரேல் தன் பங்குத் தொழில்நுட்பத் துறையில் அடைந்த அபரிமிதமான வளர்ச்சி, அத்தேசத்தின் ஆயுத பலத்தை மிகவும் நவீனப்படுத்தியது.

அமெரிக்காவுக்கு ஒரு சி.ஐ.ஏ மாதிரி இஸ்ரேலுக்கு ஒரு மொஸாட், உலகின் மூன்றாவது மிகப்பெரிய உளவு நிறுவனம் என்று சொல்லப்படும் மொஸாட் இஸ்ரேலின் இரண்டாவது அரசாங்கம். நிழல் அரசாங்கம்.

இத்தனை வலுவான பின்னணியை வைத்துக் கொண்டிருந்தாலும் இஸ்ரேலின் பலம், இவை எதுவுமே இல்லை.

மாறாக யூதர்கள் என்று இனத்தால் தாங்கள் ஒன்றுபட்டவர்கள் என்கிற பெருமித நினைவுதான் இஸ்ரேலை இன்றளவும் உயிர் பிழைக்க வைத்துக் கொண்டிருக்கிறது. இன்றுவரை ஆதரிக்கும் அமெரிக்கா, நாளை என்ன வேண்டுமானாலும் செய்யலாம்.

(தொடரும்...)

# மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்

உதாரணங்களுக்காக ஐரோப்பிய நாடுகளுக்குப் போகவேண்டியதில்லை. நம்முடனே பலர் வாழ்ந்துகாட்டியிருக்கிறார்கள்; வாழ்கிறார்கள். ஆனால் நாம் அவர்கள் வாழ்வை மீள்பரிசீலனை செய்வதில்லை.

மகாத்மா காந்தியடிகளும் அணுவத்தனை பொருள்களையும் வீணாக்குவதில்லை. அவருடைய துணிகள் கிழிந்துவிட்டால் அவற்றைத் தலையணை உறை வைத்துப் பயன்படுத்துவார். தலையணை உறை கிழிந்துவிட்டால் அது உடனே கைக்குட்டைகளாக மாறிவிடும்.

ஆதலின் நல்வாழ்வு வாழ்வதற்குச் சிறந்தவழி. அறிவுள்ளோர் போற்றும் அருமையான வழி சிக்கனமாக வாழ்க்கை நடத்துவதுதான். அவ்விதம் சிக்கன வாழ்க்கை நடத்தியதால் சிறிய வருமானத்தைப் பெற்றிருந்த பலர் வளமான வாழ்வு வாழ்வதையும் அவ்விதம் செய்யாது டாம்பீகமாக வாழ்க்கை நடத்திய பலர் வறுமையில் உழ்வதையும் யான் அறிவேன்.

இவ்விதம் கூறுவதைக் கேட்டு நான் உலோகத்தனம் செய்யக் கூறுவதாக யாரும் எண்ணிக் கொள்ளவேண்டாம். வருவாய்க்குள் செலவு செய்யவேண்டும். ஏழை எளியவர்களுக்குத் தங்களால் இயன்றளவு உதவி. வாழவேண்டும்.

சிலர் வயிற்றைக் கட்டி. வாயைக் கட்டிச் சிக்கனம் செய்கின்றனர். இதுவும் வெறுக்கத்தக்கதாகும். பகல் முழுவதும் உழைத்துவிட்டு வீடு திரும்பும் கணவனுக்கு நல்ல உணவுகளை. உடலுக்குத் தகுந்த உணவுகளை அவன் விரும்பும் உணவுகளை ருசிகரமாகத் தன் கையால் தயாரித்து. அவன் அருகில் அமர்ந்து உண்ணச் செய்வதே மனைவியின் தலைசிறந்த கடமை.

ஆனால் சில பெண்கள் அவ்விதம் செய்வதில்லை. சமையற்காரர்மூலம் சமைக்கச் செய்து அல்லது ஏனோதானோ என்று சமைத்து கணவ[illegible]ந்தும் அவன் முன்கொண்டு வந்து வைத்துவிட்டு அவன் உண்டால[illegible] சரி. [illegible]ா விட்டாலும் சரி கவலை இல்லை என்பது போன்று ஒதுங்கி இருக்கிறார்கள். மற்றும் சிலரோ சாப்பிடும் நேரத்தில்தான் குடும்பத்தொல்லைகள் பலவற்றையும் கூறி அவனுக்குச் சினத்தையும் எரிச்சலையும் உண்டு பண்ணி அவனைச் சாப்பிடாமல் செய்துவிடுகிறார்கள்.

கவியரசு கண்ணதாசனின் கட்டுரையில் "வீட்டில் நல்ல சாப்பாடு கிடைத்தால் அவன் ஏன் ஹோட்டலுக்குப் போக நினைக்கிறான்" என்ற அனுபவ வரி நினைவுக்கு வருகிறது.

சில பெண்கள். கணவன் யாராவது விருந்தினரை வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டால் பெரிதும் கோபம் கொள்கிறார்கள். ஆனால் தம் உறவினர் எவரேனும் வந்துவிட்டால் தடல்புடல் கவனிப்பு நடைபெறும். விருந்தினர் எவராக இருந்தபோதிலும் அவர்களுக்கு நல்லமுறையில் விருந்தளிப்பது இல்வாழ்க்கையில் ஈடுபடுபவர்களின் கடமையாகும்.

திருவள்ளுவர் பற்றி கதைகளில். வள்ளுவர் ஒரு கிராமத்தில் குடியானவர் ஒருவரின் வீட்டிற்கு திடீரென நுழைந்துவிட்டார். அவர்கள் மிகவும் ஏழைகள் அமரச் செய்வதற்கு நல்ல பாய்கூட இல்லை.

அந்தக் குடியானவரின் மனைவி வள்ளுவரை இன்முகத்துடன் வரவேற்றார். தாங்கள் எங்கள் வீட்டிற்குவர என்ன புண்ணியம் செய்தோமே! உங்களை அமரச்செய்வதற்கு பாய்கூட இல்லையென்று. ஒரு ஓட்டை விழுந்த பாயை நிலத்தில் விரித்தாள். வள்ளுவர் அமர்ந்துவிட்டார்.

அந்தப் பெண் ஐயா. உங்களை உபசரிக்குமளவிற்கு எமக்கு வசதியில்லை. மன்னித்துவிடுங்கள். இந்த மோரை பருகுங்கள் என்று பழைய நீர் மோரைக் கொடுத்தாள். வள்ளுவர் இன்முகத்துடன் குடித்துவிட்டு. குடியானவனைப் பார்த்து. "நீ ஏன் கவலைப்படுகிறாய் மகாலட்சுமியல்லவா மனைவியாகப் பெற்றிருக்கிறாய். உனக்கு ஏதம் குறையில்லை" என்று வாழ்த்திவிட்டுச் சென்றார்.

வேறு ஒரு வீட்டிற்குள் வள்ளுவர் சென்றார். அந்த வீடுபொருளாதார வசதிகூடிய ஆடம்பரமான வீடு. வீட்டிற்குள் வள்ளுவர் நுழைந்ததும் வீட்டுக்கார அம்மா அறைக்குள் ஓடிவிட்டார். கண்ணாடிக்கு முன்நின்று அலங்காரம் செய்ய ஆரம்பித்துவிட்டார். வள்ளுவரை வரவேற்கவேண்டாமா! வீட்டின் உரிமையாளன். கணவன் வள்ளுவருக்கு தன் வீட்டைச் சுற்றிக்காட்டி 'டாம்பீக வாழ்க்கை' காட்டிக்கொண்டான். ஒரு படியாக அலங்காரம் முடிந்து வெளியே வந்த மனைவி வள்ளுவருக்கு நாகரிக வணக்கம் செலுத்தினாள். அப்போது கணவனைப் பார்த்து வள்ளுவர் கூறினார். "உன் வீடு வெளிச்சமின்றியிருக்கிறது. முதலில் வீட்டுக்கு வெளிச்சம் போடு" என்று கூறிவிட்டுப் போய்விட்டார். இப்போது புரிகிறதா குடும்ப வாழ்வு முழுமையாக மனைவியின் கைகளில்தான் இருக்கிறது. "மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்" என்பது இதுதானோ!

முற்றும்



சொல்லின் செல்வர்
இரா.செல்வவடிவேல்



**வே. அர்ச்சுனன்**

# யாழில் இருந்து 02 முள்ளிவாய்க்கால் வரை

## புதிய தொடர்

பல்கலைக்கழக மாணவர்களுக்கான அவசரக் கூட்டம் ஒன்று பளையில் உள்ள புலிகளின் அரசியல் துறையின் யாழ்.மாவட்ட செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. புலிகளின் யாழ்.மாவட்டச் செயலகம் யாழ்.கொக்குவில் பகுதியில் இயங்கியபோதிலும் புலிகள் போருக்குரிய முனைப்புகளில் ஈடுபடுவதற்கான முன் ஆய்த்தமாக பளையில் இந்த அலுவலகத்தை திறந்து வைத்திருந்தனர். இந்த அலுவலகத்தில் ஒன்றுகூடுமாறு அழைக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களை அங்கே தடுத்து வைத்துவிட்டு அவர்களை முழுமையாக போர் முனைக்கு அனுப்புவதே புலிகளின் திட்டாக இருந்தது.

இதற்குரிய திட்டத்தைத் தீட்டியது புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பருதியும் யாழ்.பல்கலைக் கழக முன்னாள் மாணவர் ஒன்றியத் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த செ.கஜேந்திரனுமே

இத்திட்டத்தைத் தீட்டிய முக்கிய சூத்திரதாரிகளாவர். ஆனால் இவர்களால் இத்திட்டம் தீட்டப்பட்டு புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் பளையில் பல்கலைக்கழக மாணவர்களுடனான சந்திப்பு இடம்பெற்றது. இச்சந்திப்பில் அனைத்து மாணவர்களும் ஆயுதம் ஏந்தி களத்தில் போராடவேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆனால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டகையுடன் மாணவர்கள் மூலைக்கு மூலை நின்று கடுமையாக எதிர்க்கத் தொடங்கியதுடன் வெளிப்படையாகவும், இந்தத் தீர்மானத்தை எதிர்த்தனர்.

அதாவது அவசர கலந்துரையாடல் என்று அழைத்துவிட்டு போர் தொடர்பாக இங்கு கலந்துரையாடல் நடத்தப்பட்டது. ஆனால் இப்போரில் எங்களைக் கட்டாயமாக ஈடுபடுத்துவதை நாங்களும் ஏற்கவில்லை, எங்களது பெற்றோர்களும் ஏற்கமாட்டார்கள். எனவே எங்களை மீளவும் யாழ்ப்பாணத்திற்கே அனுப்பிவையுங்கள் எனப் பல்கலைக்கழக மாணவர்கள் புலிகளுடன் குழம்பியபொழுது, புலிகள் அவர்களுக்குச் சொன்ன பதில் பல்கலைக் கழக மாணவர்களை கடுமையாக யோசிக்கச் செய்தது.

அதாவது பொங்குதமிழ் நிகழ்வை பல்கலைக்கழகத்திற்குள் நடத்தி எங்களை மட்டும் அல்லாது இந்த மக்களையும் தூண்டிவிட்ட நீங்கள் இப்பொழுது எங்களுக்கு ஒத்துழைக்க மறுப்பது நீங்கள் எங்களது இனத்திற்குச் செய்கின்ற துரோகமாகவே இருக்கும். எனவே நீங்கள் அனைவரும் ஆயுதம் ஏந்தி முன்மாதிரிகையாக களத்தில் இறங்கினால்தான் ஏனைய மக்களும் எங்களுடன் ஒத்துழைப்பார்கள். அல்லது அவர்களும் களத்தில் இறங்குவார்கள் என புலிகளால் கூறப்பட்டபொழுது,

இதுதொடர்பாக நாங்கள் உடனடியாக முடிவுகளை எடுக்கமுடியாது நாங்கள் எங்களினது வீடுகளுக்குச் சென்று முடிவுகளை எடுத்துவிட்டு பின்னர் உங்களுக்குத் தெரியப்படுத்துகின்றோம் எனப் பல்கலைக் கழக மாணவர்களால் புலிகளுக்கு கூறப்பட்டபொழுது புலிகள் அவர்களுக்குச் சொன்ன பதில் மாணவர் களை மேலும் குழப்பமடையச் செய்தது.

அதாவது நாங்கள் இன்றைக்கு முகமாலையில் சண்டையைத் தொடங்கப் போகிறோம், நீங்கள் நீங்களாகவே முன்வந்து இயக்கத்தில் இணைவதாக கையொப்பமிட்டால் அது எல்லாருக்கும் நல்லது. இல்லாவிட்டால் நாங்கள் சண்டையைத் தொடங்கினால் பாதையை மூடிவிடுவார்கள். இதன்பின் நீங்கள் யாழ்ப்பாணம் செல்லமுடியாது. எங்களுடன் நின்று சண்டைபிடிக்கத்தான் வேண்டும்.

இதில் எந்த முடிவை நீங்கள் எடுக்கப் போகிறீர்கள். எங்களுடன் சந்தோசமாக இணையப்போகிறீர்களா? அல்லது நாங்கள் சண்டையைத் தொடங்கும்போது வேறு வழியின்றி கட்டாயமாக இணையப் போகின்றீர்களா? எனக்கேட்ட பொழுது

நாங்கள் கூடுதலாக உங்களுடன் இணையவே விரும்புகின்றோம். நாங்கள் முதலில் யாழ்ப்பாணம் சென்று எங்களது பெற்றோர்களைச் சந்தித்துவிட்டு வந்து இணைகின்றோம். இதற்கு எங்களது பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் முழுப்பொறுப்பையும் எடுத்து செயற்படும்.

எங்களது உத்தரவாதத்தை நம்பினால் நீங்கள் எங்களை யாழ்ப்பாணம் மீண்டும் அனுப்பிவையுங்கள். கடந்த காலங்களில் உங்களுக்கு ஒத்துழைத்தது போன்று அல்லாமல் இம்முறை நேரடியாக நாங்களும் களத்தில் இறங்கிப் போராடுவோம் என்று மாணவர்கள் புலிகளுக்கு வாக்குறுதி அளித்ததைத் தொடர்ந்து, மாணவர்கள் யாழ்ப்பாணம் செல்ல புலிகளால் அனுமதிக்கப்பட்டனர்.

ஆனால் யாழ்பாணம் சென்ற மாணவர்கள் மீண்டும் புலிகளின் பக்கம் அல்லது பளைப் பக்கம் திரும்பியே பார்க்கவில்லை, இவை இறுதிக்கட்டப் போர் ஆரம்பமாவதற்கு முன்னர் பளையில் இடம்பெற்ற நிகழ்வுகளாகும். இதன்மூலம் பல்கலைக்கழக் மாணவர்களின் முகத்திரையை பின்னைய நாட்களில் யாழ்ப்பாண மக்கள் மட்டுமல்ல, முழு உலகமுமே அறிய வாய்ப்பேற்பட்டது. நாங்கள் யாழ்ப்பாணத்தின் ஆரம்ப கட்ட்ங்களை சிறிது பார்த்துவிட்டு, முடிவிற்கு அதாவது முள்ளிவாய்க்கால் முடிவுகள் பற்றி விரிவாகப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அதாவது பல்கலைக்கழக மாணவர்களின் செயற்பாட்டு ரீதியான கோட்பாட்டையும், அவர்களது நடைமுறைரீதியான கோட்பாட்டையும், பார்ப்பதே இங்கு முக்கியமாகும். அதாவது பல்கலைக்கழக மாணவர்கள் ஆரம்பத்தில் பொங்குதமிழ் நிகழ்வை தொடங்க ஆயத்தமாகியபோது இவர்களது செயற்பாட்டை கண்டு சந்தேகம் கொண்ட புலிகளின் புலனாய்வுத்துறை பொறுப்பாளர் பொட்டம்மான் நேரடியாகப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனைச் சந்தித்து பல்கலைக்கழக மாணவர்கள் அரசாங்கத்துடன் சேர்ந்து எங்களை பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு செல்வதற்கு முயற்சிக்கிறார்கள்போல் உள்ளது.

அதாவது இவர்கள் கூறுவது போன்று சர்வதேச மத்தியஸ்தம் அல்லது சமாதான முயற்சிகள் என்று ஏதாவது ஒன்று உருவானால் அது எங்களது விடுதலைப் போராட்டத்தை சிதைவடையச் செய்துவிடும். அதுமட்டுமல்லாமல் நாங்கள் சர்வதேச சமூகத்திற்கு கட்டுப்பட வேண்டிவந்துவிடும்

எனவே நாங்கள் போரிலே சாதனைகள் படைத்து வெற்றி பெற்றுவருகின்ற இந்த சூழ்நிலையில் சமாதான முயற்சிகளும் சர்வதேச மத்தியஸ்தமும் பொங்குதமிழ் நிகழ்வும், தேவைதானா என்று பிரபாகரனிடம் கேட்டபோது, பிரபாகரன் இதை தமிழ்ச்செல்வன் ஆட்கள்தான் ஏற்பாடு செய்கிறார்கள், அவர்களிடம் நான் இதற்குரிய விளக்கத்தைக் கேட்கிறேன்.

அவர்களுடைய விளக்கம் எங்களுக்குச் சாதகமாக இருந்தால் பொங்குதமிழை நடத்த அனுமதிப்போம். இல்லை என்றால் அதனை நிறுத்தச்சொல்லி அறிவிப்போம் என்று பிரபாகரன் கூறிவிட்டு, மறுவினாடியே தமிழ்ச்செல்வனை தொடர்புகொண்டு பொங்குதமிழை தற்காலிகமாக இடைநிறுத்திவிட்டு என்னை வந்து சந்தித்துவிட்டு மீண்டும் பொங்குதமிழ் நிகழ்வுக்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு தலைவரிடமிருந்து தமிழ்ச்செல்வனுக்கு கட்டளை பறந்தது.

இதனை அடுத்து உடனடியாக யாழ்ப்பாணத்தில் உள்ள பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துடனும், புலிகளின் அரசியல்துறை செயற்பாட்டாளராக இருந்த சுதனுடனும், தொடர்பினை ஏற்படுத்திய. புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் பொங்குதமிழ் நிகழ்வுக்குரிய வேலைத் திட்டங்களை ஒரு 5 நாட்களுக்கு நிறுத்தி வைத்துவிட்டு மீண்டும் எனது அறிவிப்புக் கிடைத்த பின்னர் தொடருங்கள் என்ற உத்தரவு தமிழ்ச்செல்வனிடம் இருந்து அரசியல் துறையினருக்கு கிடைத்தது. இதனைத் தொடர்ந்து பல்கலைக்கழகத்திற்குள் விந்தன், சிதம்பரநாதன் உள்ளிட்ட பொங்குதமிழ் பாட்டுக்குழுவினர் ஒன்றாகக் கூடுவதும் தங்களுக்குள் முணுமுணுப்பதும், அதிகரித்துக்கொண்டிருந்தது.

அதாவது பொங்குதமிழ் ஏற்பாடுகள் திடீரென இடைநிறுத்தப்பட்டதுடன் பத்மினி சிதம்பரநாதனின் சோட்ஸ் குறூப்பும் தங்களது ஆடல், பாடல் பழகும் செயற்பாட்டையும் இடைநிறுத்தியிருந்தது. ஆனால் சிதம்பரநாதன் போன்றவர்கள் நாங்கள் பொங்குதமிழ் தொடர்பான கலந்துரையாடல்களிலும் ஏனையோரின் அபிப்பிராயம் கேட்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபடவேண்டி உள்ளதால் ஒரு வாரத்திற்கு பொங்குதமிழ் செயற்பாடுகளை இடைநிறுத்தி கலந்துரையாடல்களில் மட்டும் ஈடுபடுவோம் என்று விழுந்தும் மீசையில் மண் படாதவன் கதை போன்று பல்கலைக்கழக சமூகத்தை சமாளித்தவாறு தனது அடுத்த கட்டத்தைப் பற்றி முடிவெடுக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்தார். தொடர்ந்து என்ன நடந்தது? யாழிலிருந்து முள்ளிவாய்க்கால்வரை என்ன நடந்தது என்பதை தொடர்ந்து பார்ப்போம்.

(தொடரும்)





# காஸா மண்ணில் தோற்றது ஐ.நா!

தொகுப்பு: வேணு கிருஸ்ணா

பலஸ்தீனத்திற்கு சுயாட்சி கிடைக்கும் என்ற அடிப்படையில் 1994இல் ஒஸ்லோ உடன்படிக்கையின்படி பலஸ்தீன அதிகார சபையை பலஸ்தீன விடுதலை அமைப்பின் தலைவர் யசீர் அரபாத் ஏற்றுக்கொண்டார். அவர் இறந்தே பல ஆண்டுகள் கடந்துவிட்டன. இருந்தாலும் இன்றுவரை அது நிறைவேற்றப்படவில்லை. மாறாக அது பலஸ்தீன விடுதலை இயக்கங்களுக்குள் மேலும் அதிகமான உள்முரண்பாடுகளை ஏற்படுத்தியது.

கசாவை ஹமாசும் மேற்குக்கரையை பத்தா அமைப்பும் கட்டுப்பாட்டில் கொண்டுள்ளன. 2008 டிசெம்பர் 27ஆம் திகதி ஹமாஸ் குழுவினரின் எறிகணை தாக்குதல்களுக்கு பதிலடி கொடுப்பதாகக் கூறி மூன்றுவார இராணுவ நடவடிக்கையை இஸ்ரேல் மேற்கொண்டது. இப்போரில் 1417 புலஸ்தீன பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

காஸா பகுதியின் சகல கட்டமைப்புகளும் அழிவுக்குள்ளாகின. இப்படு கொலைகள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபை தென்னாபிரிக்க நீதிபதி ரிச்சர்ட் கோல்ட்டோன் தலைமையில் உருவாக்கிய குழு தனது அறிக்கையில் இஸ்ரேலின் போர்க்குற்றங்களை எடுத்துச் சொல்லியிருந்தது. எனினும் வழமை போலவே இஸ்ரேல் அதனைக் கண்டு கொள்ளவில்லை. அந்த அறிக்கையும் குப்பையில் வீசப்பட்டுவிட்டது.

ஐ.நா. இஸ்ரேல் தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்காத வகையில் அமெரிக்கா தலையிட்டுவருகிறது. இன்று வரை இந்தநிலையே பலஸ்தீனத்தில் நிலவுகின்றது.

### காஸா என்ற சிறை

சுமார் 1.7 மில்லியன் மக்கள் தொகை கொண்ட காஸா நிலப்பரப்பு, 40 கி.மீ நீளமும், 10 கி.மீ அகலமும் கொண்டது. மத்திய தரைக்கடல், இஸ்ரேல், எகிப்து ஆகியவற்றால் சூழப்பட்ட பகுதி. முதலில் எகிப்தால் ஆக்கிரமிக்கப்பட்டது காஸா நிலப்பரப்பு. எகிப்து இன்னும் காஸாவின் தென் எல்லையைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. இந்த கடற்கரையோர நிலப்பரப்பை இஸ்ரேல் 1967 போரின் போது கைப்பற்றியது.

ஆனால் 2005ஆம் ஆண்டில் இஸ்ரேல் இந்தப் பகுதியிலிருந்த தனது படைகளையும், சுமார் 7,000 குடியேறிகளையும் விலக்கிக்கொண்டது. அதற்கு ஓராண்டுக்குப் பின்னர், தீவிரவாத இஸ்லாமியக் குழுவான ஹமாஸ் பாலத்தீன சட்டசபைத் தேர்தல்களில் வென்றது. பலஸ்தீன நிர்வாக அமைப்பின் அதிபர் மஹ்மூத் அப்பாஸின் ஃபத்தா குழுவுடன் ஏற்பட்ட வன்முறையான பிளவை அடுத்து, ஹமாஸ், காஸாவை 2007லிருந்து 2014வரை ஆட்சி செய்தது. ஹமாஸ் காசாவில் வெற்றி பெற்றவுடன், இஸ்ரேல் அப்பகுதியின் மீது முற்றுகையை அமுல்படுத்தி, அங்கிருந்து பொருட்கள் மற்றும் மக்கள் வெளியே வருவதையோ, அல்லது அங்கு செல்வதையோ தடுத்தது. எகிப்தும் காஸாவின் தென்பகுதி எல்லையை மூடியது.

காஸாவில் ஏற்கனவே வரையறைக்குள் இருந்த நடமாடும் சுதந்திரம் 2013இன் மத்திய காலப்பகுதிக்குப் பின்னர், குறிப்பாக, எகிப்து ர.ஃபா எல்லைப் புறக் கடவைச் சாவடியில் புதிய கட்டுப்பாடுகளை விதித்து, எகிப்து - காஸா எல்லைப்புறப் பகுதியில் இருக்கும் சுரங்கவழிக் கடத்தல் வலையமைப்புகளை மூடத்தொடங்கியதும், மேலும் கணிசமாக குறைந்துவிட்டது. 2013ம் ஆண்டின் முதல் பகுதியில் ர.ஃபா கடவைச்சாவடியில், மாதமொன்றுக்கு சுமார் 40,000 பேர் கடந்து சென்றனர். ஆனால் 2013 ஜூலையிலிருந்து டிசெம்பர் மாதம் வரையிலான காலகட்டத்தில், போக்குவரத்து இந்தப் பகுதியில் மாதமொன்றுக்கு 9,550 பேர் என்ற அளவுக்குக் குறைந்தது.

சமீப ஆண்டுகளில், இஸ்ரேல், வடக்கே உள்ள எரெஸ் கடவைச் சாவடியில் கட்டுப்பாடுகளை விதித்ததை அடுத்து, ர.ஃபா கடவைச் சாவடியே, பலஸ்தீனர்களுக்கு காஸாவுக்குள் நுழையவும், வெளியேறவும் இருக்கும் ஒரே இடமாக மாறிவிட்டது. ஆனால் இந்த முற்றுகை இறுகியபின்னர், இந்தக் கடத்தல் சுரங்கவழிகள் பல்கிப் பெருகிவிட்டன. இந்த வழிகள்மூலமாக, கட்டுமானப் பொருட்கள், கால்நடைகள், எரிபொருட்கள், உணவு, பணம் மற்றும் ஆயுதங்கள் என எல்லாம் இறக்குமதி செய்யப்படுகின்றன. இந்த முற்றுகை 2010 ஜூன் மாதம் தளர்த்தப்பட்டபோது, செயற்பாட்டில் இருந்துவந்த சுமார் 1,000 சுரங்கங்கள் 200லிருந்து 300 வரை என்று குறைந்தன. தனியார் துறைக்கு கட்டுமானப் பொருட்கள் மற்றும் எரிபொருட்களைக் கடத்திவருவதில் கடத்தல்காரர்கள் கவனம் செலுத்தினர். இவை இஸ்ரேலில் கிடைப்பதைவிட எகிப்தில் குறைந்த விலைக்குக் கிடைத்தன. ஆனால் 2013ல் இந்த சுரங்கவழிகள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விளைவாக, காசாவிற்குப் பொருட்களைக் கடத்துவது ஏறக்குறைய முற்றிலுமாக நின்று, அங்கு கட்டுமானப் பொருட்கள், எரிபொருள் மற்றும் உணவுப் பொருட்களின் விலை உயர்ந்தது.

காஸா மக்கள் பொதுவாக 1990களில் இருந்ததைவிட இப்போது மோசமான நிலையில் இருக்கிறார்கள். அவர்களில் 21 சதவீதத்தினர் மிகவும் வறியநிலையில் இருக்கிறார்கள். மாத வருமானம் 534 டொலர்களுக்கும் குறைவுதான். மேற்குக் கரையில் இருக்கும் பலஸ்தீனர்கள் ஒப்பீட்டளவில் பார்த்தால், சற்று மேம்பட்ட நிலையில் இருக்கிறார்கள்.

அவர்களில் 7.8 சதவீதத்தினரே வறுமையில் இருக்கிறார்கள். காசா நிலப்பரப்பில் வேலையில்லாதோர் விகிதம் 40.8 சத வீதம். இது மேற்குக் கரையை விட கணிசமான அளவு அதிகம். குறிப்பாக இளைஞர்களிடையே வேலையில்லாத் திண்டாட்ட விகிதம் 50 சதவீதத்துக்கும் மேலாக இருக்கிறது காஸாவில். கடத்தலுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் 2013ல் காஸாவின் பொருளாதாரத்திற்கு சுமார் 460 மில்லியன் டொலர்கள் நஷ்டத்தை ஏற்படுத்திவிட்டன என்று ஹமாஸ் நிர்வாகத்தில் இருக்கும் பொருளாதார அமைச்சகம் கூறுகிறது.

### கொல்லப்பட்ட சிறுவர்களின் சடலங்களைக் கண்டு அழும் சிறுவர்கள்

இஸ்ரேல் கடந்த சில நாட்களாக பலஸ்தீனத்தின் பகுதிக்குள் பாரிய தாக்குதலை நடத்திவருகிறது. பலஸ்தீன போராட்ட அமைப்பான ஹமாஸ் சில நாட்களுக்கு முன்னர் இஸ்ரேல்மீது ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இதற்கு பதில் தாக்குதல் நடத்துவதாகக் கூறிக்கொண்டு இஸ்ரேலிய விமானப் படையினர் பாரிய வான் தாக்குதலில் ஈடுபட்டுள்ளார்கள். இவர்கள் ஹமாஸ் இயக்கத்தின் தளங்களை தாக்குவதாக உலகிற்கு கூறிக்கொள்கிறார்கள். ஆனால் இவர்கள் தாக்குதலில் இதுவரை எந்த ஒரு ஹமாஸ் இயக்க உறுப்பினரும் இறக்கவில்லை. மாறாக குடியிருப்பு பகுதிகள்மீதுதான் இஸ்ரேலியப் படையினர் தாக்குதலை நடத்தி வருகிறார்கள். 16.07.2014 அன்று காஸாவில் உள்ள கடற்கரை ஒன்றை குறிவைத்து இஸ்ரேலிய கடற்படையின் தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளார்கள்.

இதனால் அந்தக் கடற்கரையில் விளையாடிக்கொண்டு இருந்த 4 சிறுவர்கள் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளார்கள். இச்சிறுவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்க விடயம் ஆகும். கடலில் நின்றிருந்த இஸ்ரேலிய கடற்படையினர் சிறுவர்கள் விளையாடிக்கொண்டு இருப்பதை கவனித்தபின்னரே, தாக்குதலில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. இதுவரை இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் நூற்றுக்கணக்கான அப்பாவிப் பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

### தரைவழித் தாக்குதல் ஆரம்பம்

பலஸ்தீனத்தின் ஹமாஸ் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள காஸா பகுதிமீது இஸ்ரேல் போர் விமானங்கள் வான் தாக்குதல்களை பலநாட்களாக நடத்திவந்தது. இஸ்ரேல்மீது ஹமாஸ் தீவிரவாதிகள் ரொக்கெட் தாக்குதல்கள் நடத்துகின்றனர். கடந்த ஜூலை 8ஆம் திகதி தொடங்கிய போர் இக்கட்டுரை எழுதப்படும்வேளைவரை தொடர்ந்து நடக்கிறது. அதில் 247 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர். ஏராளமானவர்கள் காயம் அடைந்துள்ளனர். அதே நேரத்தில் தீவிரவாதிகள் ரொக்கெட் வீச்சில் இஸ்ரேலில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இதற்கிடையே சண்டையை முடிவுக்குக் கொண்டுவர போர்நிறுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

5 மணிநேரம் மட்டுமே போர் நிறுத்தம் அமுலில் இருந்தது. அதை தொடர்ந்து தரைவழி தாக்குதலை 17.07.2014 வியாழன் மாலை இஸ்ரேல் தொடங்கியது. அதற்குமுன்னதாக பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடையும்படி அறிவுறுத்தப்பட்டது. இஸ்ரேலின் 10 டாங்குகள் காஸாவின் வடமேற்கு எல்லைக்குள் ஊடுருவி தாக்குதல் நடத்தின. அதில் 5 பேர் பலியாகினர். இத்தாக்குதலில் 18 ஆயிரம் வீரர்களை இஸ்ரேல் ஈடுபடுத்தியுள்ளது. காஸா பகுதியில் ஹமாஸ் தீவிரவாதிகள் பல பதுங்குகுழிகளை அமைத்துள்ளனர்.

அவற்றை அழிப்பதற்காகவே தரைவழி தாக்குதல் நடத்துவதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது. இதுதவிர காஸா மீது இஸ்ரேல் விமானங்கள் குண்டுவீசி தாக்குகின்றன. கப்பல்களும் இப்போரில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இத்தாக்குதலால் அதிகளவில் இரத்தம் சிந்த வேண்டிவரும்.

எனவே தாக்குதலை நிறுத்தும்படி இஸ்ரேலுக்கு பலஸ்தீன அதிபர் முகமது அப்பாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### போர்நிறுத்தம் கொண்டு வர முயற்சிக்கும் ஐ.நா.

காஸாமீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் இம்மாதம் 19ம், 20ம் திகதிகளில் மட்டும் 97 பேர் உயிரிழந்துள்ளனர். 21.07.2014 திங்கள் காலை நிலவரப்படி மொத்தமாக இருவாரங்களாக நடைபெற்ற இஸ்ரேலியப் படையினரின் விமானத்தாக்குதல்களிலும் எறிகணைத் தாக்குதல்களிலும் 500 பலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டனர். இதில் 112 சிறுவர்களும், 41 பெண்களும், வயதானவர்கள் 25 பேரும் அடங்குவர். மூவாயிரம் பேர் காயமடைந்தனர். 61 ஆயிரம் பேர் வீடுகளைவிட்டு வெளியேறியிருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இஸ்ரேல் தரப்பில் 18 இராணுவ வீரர்கள் உட்பட 20பேர் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர். ஒரே தினத்தில் பதின்மூன்று இஸ்ரேலிய வீரர்கள் ஹமாஸ் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டமை இஸ்ரேலை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஒரு இஸ்ரேலிய வீரரை உயிருடன் பிடித்துள்ளதாகவும் ஹமாஸ் கூறியது.

இஸ்ரேல் படைகள் - ஹமாஸ் தீவிரவாதிகள் இடையே போர்நிறுத்தம் கொண்டுவர உதவுவதற்காக மத்திய கிழக்குக்கு ஐ.நா. பொதுச் செயலாளர் பான்கீமூன் விரைவில் செல்லவுள்ளார் என 19.07.2014 சனிக்கிழமை வெளியான செய்திகள் கூறின. ஐ.நா பாதுகாப்புச் சபையில் காஸா நிலவரம் அவசரமாக விவாதிக்கப்பட்டது.

உடனே அங்கு போர்நிறுத்தம் பிரகடனப்படுத்தப்படவேண்டும் என வீட்டோ அதிகாரமுள்ள ஐந்து வல்லரசுகளும் ஐ.நா பாதுகாப்புச் சபையில் வலியுறுத்தின. இருதரப்பினருக்கும் இடையே பல நாட்களாக நீடித்துவரும் சண்டையால் அந்த பிராந்தியத்தில் பெரும் பதட்டம் நிலவிவருகிறது. இது தொடர்பாக ஐ.நா. அரசியல் விவகார துறை தலைவர் ஜெப்ரி பெல்ட்மேன் கூறியதாவது,

இஸ்ரேலியர்கள், பலஸ்தீனியர்கள் இடையே போர்நிறுத்தம் கொண்டு வர உதவுவதற்காக பான்கீமூன் விரைவில் அந்த பிராந்தியத்துக்கு செல்லவுள்ளார்.

(17ஆம் பக்கம் பார்க்க)

அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால்
யாழ்ப்பாணம்

# ஈகைத் திருநாளை... வரவேற்போம்!



இறை அருளையும் பாவ விமோசனத்தையும் அடைய நேற்று வரை தூண்டிக் கொண்டிருந்த ரமழான் எனும் விஷேட மகத்துவமான மாதத்தை வழியனுப்பி-வைத்து கவலையில் ஆழ்ந்த இறை விசுவாசிகளுக்கு ஆறுதலாகவும் மகிழ்ச்சியாகவும் இறைவன் வழங்கிய மாண்புமிக்க தினமே புனித் நோன்புப் பெருநாள் தினமாகும்.

"அல்லாஹு அக்பர்... அல்லாஹு அக்பர்.... லாஇலாஹ
இல்லல்லாஹு வல்லாஹு அக்பர்... அல்லாஹு
அக்பர்...வலில்லாஹில் ஹம்து..."

புனித ரமழான் பூராவும் பகல் முழுவதும் நோன்பு நோற்று, இரவெல்லாம் வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு வந்த முஸ்லிம்கள் ஷவ்வால் மாத தலைப்பிறை தென்பட்டவுடன் ஈதுல் பித்ர் எனும் ஈகைத் திருநாளை குதூகலமாக கொண்டாடுகின்றனர்.

ரமழானில் நன்மைகளைக் கொள்ளை யிட்ட உள்ளங்கள் ஷவ்வால் மாத தலைப்பிறையுடன் ரமழானுக்கு விடை கொடுத்துவிட்டு நோன்புப் பெருநாள் குதூகலத்தில் திளைக்கின்றன.

பெருநாள் தினம் என்பது சிறியோர், பெரியோர், ஏழை, பணக்காரன், முதியவர் என்ற எவ்வித பாகுபாடும் இன்றி மகிழ்ச்சியுடன் கழிக்கக்கூடிய தினமாகும். இப்பெருநாள் தினத்தில் நோன்பு நோற்பதை ஹராமாக்கியுள்ள இஸ்லாம் அல்லாஹ்வின் உவப்புக்குரிய வழிகளில் பெருநாளைக் கொண்டாட வழிகாட்டி உள்ளது.

பெருநாள் தினம் அல்லாஹ்வை ஞாபகமூட்டக் கூடிய, அவனைப் புகழக் கூடிய தினமாக இருக்கவேண்டுமே தவிர நற்செயல்களுக்கு மூட்டை கட்டும் தினமாக அமையலாகாது.

ஈதுல் பித்ர் பெருநாளில் அதிகமானளவு நன்மைகளை செய்ய நாம் முன்வர வேண்டும். நாம் மட்டும் பெருநாளைக் கொண்டாட அயல் வீட்டார் பெருநாளைக் கொண்டாட வசதியற்றவனாக இருப்பானேயானால் நாம் கொண்டாடும் பெருநாளில் என்ன தாற்பரியம் உண்டு என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

நோன்புப் பெருநாளுக்கு ஒவ்வொரு முஸ்லிமும் தயாராகும் போது பித்ரா (தர்மம்) கொடுப்பதைக் கொண்டே தயாராக வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். நோன்புப் பெருநாள் தர்மம் நோன்பின்போது ஏற்பட்ட தவறு களுக்குப் பரிகாரமாகவும் ஏழை, எளியவர்கள் பெருநாள் தினத்தில் பசி, பட்டினியோடு இருக்கக் கூடாது என்ற நோக்கங்களின் அடிப்படையிலும் கடமையாக்கப்பட்டுள்ளது.

இஸ்லாம் இம்மை, மறுமை பயன்களை அடைந்துகொள்ளக் கூடியவகையில் பெருநாளைக் கொண்டாட வழிகாட்டியுள்ளது. நபி (ஸல்) அவர்கள் பெருநாள் தினத்தில் பள்ளிவாசலுக்குச் செல்லும்போது ஒரு வழியால் சென்று மற்றுமொரு வழியால் திரும்பிவருவார்கள். இதன்மூலம் பலரை சந்திக்கவும் ஏழைகளுக்கு உதவிபுரியவும் கூடிய வாய்ப்பைப் பெற்றார்கள்.

பெருநாள் தினத்தில் வீண் கேளிக்கை, விளையாட்டுக்களை தவிர்த்து சகோதர மதத்தவர்களுடன் புரிந்துணர்வு கருதிய ஒன்றுகூடல்களை நடாத்தலாம். இதன் மூலம் இரு சாரார் மத்தியில் நிலவும் தப்பபிப்பிராயங்கள் நீங்கி பிரதேச மற்றும் தேசிய அமைதிக்கு வழியேற்படும்.

வறிய மக்களின் துயர் துடைக்கும் பித்ரா என்ற கடமையுடன் பெருநாள் தொடங்குவதன் காரணமாகவே பித்ர் என்ற வார்த்தையுடன் சேர்ந்து ஈதுல் பித்ர் என்று இப்பெருநாள் அழைக்கப் படுகின்றது. பெருநாள் தினத்தில் இரவு, பகல் இரண்டு வேளைகளுக்கு தனக்கும் தனது பராமரிப்பிலுள்ள குடும்ப அங்கத்தவர்கள் அனைவருக்கும் போது மான அத்தியாவசிய வாழ்க்கை வசதிகளை யுடைய ஒவ்வொரு முஸ்லிமும் இத்தகைய வசதிகள் அற்ற அல்லது வசதிகள் குறைந்த ஏழைகளுக்கு கட்டாயமாகக் கொடுப்பதற்குரிய நன்கொடையே ஸகாதுல் பித்ர் எனப்படும்.

பெருநாள் தினத்தன்று சகல முஸ்லிம்களும் சந்தோஷமாக உண்டு மகிழவேண்டும், எவரும் பசியுடன் இருக்கக் கூடாது என்ற சமுதாய நோக்கு முதலாவதாகவும், பித்ராவை வழங்கும் ஒவ்வொருவரும் ரமழான் மாதத்தில் விட்ட பிழைகளுக்குப் பரிகாரமாகவும் ஸகாதுல் பித்ர் இருப்பதனால் நோன்பாளிகள் பரிசுத்த வான்களாக மாறுவதனால் தனியார்கள் நன்மை பெறுவது இரண்டாவது நோக்கமாகவும் திகழ்கின்றது.

ஒவ்வொரு முஸ்லிமின் செயல்கள் மற்ற சகோதர முஸ்லிம்களின் சுகதுக்கங்களில் பங்குபற்றக்கூடிய விதத்தில் அமைந்திருக்கவேண்டும். இந்த உண்மையை ஸகாதுல் பித்ர் அமைப்பு முறையிலும் காணக்கூடியதாக உள்ளது.

பெருநாள் தினத்தில் நாங்கள் எல்லோரும் அதிகாலையில் குளித்து, புத்தாடைகள் அணிந்து, நறுமணம்பூசி, அறுசுவை உணவுகளை உண்டு மகிழ்கின்றோம் அல்லவா? இதேபோன்று அன்றைய தினத்தில் நாம் பின்பற்றி நடக்கவேண்டிய நபி வழியில் வந்த செயற்பாடுகளும் உண்டு. ஒரு ஊரில் அல்லது மஹல்லாவில் வாழும் முஸ்லிம்கள் தனித்தனியாக அல்லது குழுக்களாக பிரியாமல் சகலரும் ஒன்று சேர்ந்து ஒரு திறந்தவெளியில் அல்லது மைதானத்தில் இது முடியாதபோது ஒரு பள்ளிவாசலில் பெருநாள் தொழுகையை நடத்தவேண்டும்.

ஈதுல் பித்ர் தொழுகை முடிந்தவுடன் இமாம் நிகழ்த்தும் குத்பா உரையை அனைவரும் கேட்க வேண்டும். தொழுகையை போன்றே குத்பாவும் ஒரு இபாதத் என்பதை மறக்கலாகாது. இவ்வாறு ஒரு இமாமுக்குக் கட்டுப்பட்டு நடப்பதன்மூலம் முஸ்லிம் சமுதாய அமைப்பு வலுப்பெறுவதோடு தனிப் பட்ட ஒவ்வொரு முஸ்லிமும் பலவகை யான நன்மைகளையும் அல்லாஹ்வின் அருளையும் பெறும் வாய்ப்பைப் பெறு கின்றனர். பெருநாள் தொழுகை முடிந்ததும் தான் சந்திக்கும் சகோதர் களுக்கு "தகப்பல் வலல்லாஹு மின்னி வமின்" உங்களுடையதும் என்னுடையதும் நற்செயல்களையும் வாழ்த்துக்களையும் அல்லாஹ் அங்கீ கரிப்பானாக! என்று கூறி வாழ்த்து தெரிவிப்பது சுன்னத்தாகும்.

எமது தாய்நாடான இலங்கையில் எமது முஸ்லிம் சகோதரர்கள் பதற்றமான சூழ்நிலைகளில் வாழ்ந்துவருகின்றனர். அந்தப் பயங்கரமான பிரச்சினைகளில் இருந்து நீங்கி சமாதானமும் சகவாழ்வும் இனங்களுக்கிடையே சகிப்புத் தன்மை யும் புரிந்துணர்வும் ஏற்படுவதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ் அருள்புரிவானாக. ஆமீன்! ஈத் முபாரக்!

விருமன்

# கேள்விக்குறியாகும் வடமாகாண விளையாட்டுத்துறை



வட மாகாண விளையாட்டுத் துறை எதிர்காலத்தில் வளர்ச்சி அடையுமா?, அழிந்துபோகுமா என்ற பாரிய கேள்விக்கு விடை காணவேண்டிய பொறுப்பும் கடமையும் வடமாகாண கல்வி அமைச்சுக்கு காணப்படுகிறது.

கடந்த காலத்தில் விளையாட்டுத் துறையை வளர்த்தெடுப்பதில் பெரும் பங்கை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வும் வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி யும் செய்துள்ளார்கள் என்றால் அது மிகையாகாது.

யாழ்.மாவட்டத்திற்கான போக்குவரத்து 1998, 99 ஆம் அதனைத் தொடர்ந்து வரும் காலத்திலும் துண்டிக்கப்பட்டு இருந்தது. போக்குவரத்து பெரும் நெருக்கடிக்குள் உள்ளாகி இருந்தது.

இந்நிலையில்கூட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்.குடாநாட்டு பாடசாலைகளின் விளையாட்டு வீர வீராங்கனைகள் கொழும்பு சென்று போட்டிகளில் கலந்துகொள்ள கப்பல் களையும் விமானங்களையும் ஏற்பாடு செய்துகொடுத்து விளையாட்டுத் துறைக்குப் பெரும் பங்காற்றியிருந்தார்.

இத்துடன் நின்றுவிடாது கொழும்பில் தங்குவதற்குவேண்டிய ஏற்பாடுகள், திருகோணமலை கொழும்புக்கு இடை யிலான போக்குவரத்து வசதிகள் உட்பட உணவு வசதிகள், காலணி வுசதிகள் எனப் பல்வேறு உதவிகளையும் வழங்கி யாழ். மாவட்டத்திற்கான விளையாட்டு வீர வீராங்கனைகளின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியுள்ளார்.

இதேபோன்று வடமாகாண ஆளுனராக நியமனம்பெற்ற இன்றைய வடமாகாண ஆளுனர் ஜி.ஏ சந்திரசிறியும்கூட விளை யாட்டு வீர வீராங்கனைகளின் வளர்ச்சிக்கு பெரும் பங்குயாற்றியுள்ளார்கள்.

அரசியல்ரீதியாக, கொள்கைரீதியாக முரண்பாடுகள் வேறுபாடுகள் காணப்பட் டாலும்கூட இவர்கள் இருவரும் கடந்த காலத்தில் விளையாட்டுத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பு பெரும் பாராட்டுக்குரியது.

இவர்கள் சுமார் பத்து வருடங்களுக்கு மேலாக காட்டிய அக்கறையும் ஊக்குவிப்பும் தேசியரீதியில் மகாகாண மட்டத்தில் கடை நிலையில் இருந்து ஆறாம் இடத்துக்கு உயர்த்திக் கொண்டுள்ளது.

இத்தகைய முன்னேற்றத்திற்கு வீர வீராங்கனைகளை ஊக்குவித்து நீண்ட கால செயற்திட்டத்தின்கீழ் வளர்த் தெடுத்த வீரவீராங்கனைகளின் விளையாட்டுத்துறை தமிழ் மக்களின் அதிகப்படியான வாக்குகளை பெற்று மக்களுடைய பிரதிநிதிகள் தமிழ் மக்களுடைய இரட்சகர்களாக வட மாகாண சபையை கைப்பற்றிக்கொண்டவர்களை ஒரு வருட காலத்திலேயே குரங்கின் கையில் பூமாலையாக்கப்பட்டுள்ளமை விளையாட்டு வீர வீராங்கனைகள், ஆர்வலர்கள், பெற்றோர் களிடம் பெரும் விமர்சனத்திற்கும் கேள்விக்கும் உரியதாகி உள்ளது.

கடந்த காலத்தில் விளையாட்டுப் போட்டிகளில் மாகாணம், தேசிய மட்டப் போட்டிகளில் தமது திறமைகளை வெளிப் படுத்திய வீர வீராங்கனைகள் கல்வியியற் கல்லூரிகளுக்கு முன்னுரிமை அடிப் படையில் தெரிவுசெய்யப்படும் வாய்ப்புக் களையும் கொண்டிருந்தார்கள்.

இன்று இத்தகைய நிலைமைக்கு வட மாகாண கல்வி அமைச்சு பெரும் பூட்டு போட்டு பூட்டியுள்ளது. இந்தச் செயல் வெறுக்கத்தக்கதும் வேதனைக்குரியதும் ஆகும்.

ஏற்கனவே பெற்றோர்கள், உறவினர் களின் பேச்சுக்கள் ஏச்சுக்களுக்கு மத்தியில் மைதானங்களுக்கு வந்த மாணவர்கள் எதிரகாலத்தில் மைதானத்தை நாடுவது என்பது சற்று யோசிக்க, சிந்திக்க வேண்டிய விடயமாகும். இதனையிட்டு சிந்திக்கவும் தொடங்கியுள்ளார்கள் என்பதும் உண்மையாகும்.

அண்மையில் வவுனியா கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்ற உடற்கல்வி ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை யில் தோற்றிய பல தேசிய மட்டத்தில் சாதனைகள் புரிந்த, பதக்கங்களை வென்ற வீர வீராங்கனைகள் தெரிவு செய்யப்படவில்லை.

மாறாக வடமாகாணம் தவிர்ந்து ஏனைய மாகாணங்களில் இருந்துவந்த பல்ர் பாடசாலை மட்டம், மாவட்ட மட்டச் சான்றிதழ்களுடன் இணைக்கப் பட்டுள்ளார்கள்.

நேர்முகப் பரீட்சைக்கு 55 புள்ளி களைப் பெற்ற யாழ்.மாவட்ட வடமாகாகண மாணவர்கள் தெரிவு செய்யப்படவில்லை. மாறாக 15, 20 புள்ளிகளைப் பெற்றவர் கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

கல்வியியற் கல்லூரி கிடைக்காத வட மாகாண தேசிய மட்ட வீர வீராங் கனைகள் கல்வியியற் கல்லூரி ஆணை யாளருடன் குரோதஉணர்வுடன் போர்க் கொடி தூக்கியவேளையில் உண்மை நிலைமை தெரியவந்துள்ளது.

(21 ஆம் பக்கம் பார்க்க...)




# குயில் டாக்டர்!

கற்பூரவள்ளி என்ற காட்டில் ஆந்தை குடும்பம் ஒன்று வாழ்ந்து வந்தது. ஆந்தைக்கு இரண்டு ஆந்தை குஞ்சுகள் இருந்தன. தன் குஞ்சுகளை பேணி பராமரித்து வளர்த்தது தாய் ஆந்தை. குஞ்சுகள் வளர வளர அம்மாவிடம் பல கேள்விகள் கேட்க ஆரம்பித்தன.

ஒரு நாள், அம்மா எல்லாரும் பகலில்தான் சுறுசுறுப்பாக உலாவிக் கொண்டிருக்கின்றனர். நாம் மட்டும் பகலில் தூங்கிவிட்டு இரவில் இரை தேடுகிறோம். நாம் சென்று இன்ரை தேடும் வேளையில் ஊரே உறங்கி கொண்டிருக்கிறது. இது ஏன்? என்றது.

நமக்கு பகலில் கண் தெரியாது. இரவில்தான் கண் தெரியும். அதனால்தான் நாம் பகலெல்லாம் தூங்கிவிட்டு இரவில் சென்று இரை தேடுகிறோம், என்றது தாய் ஆந்தை.

ஏனம்மா கடவுள் நம்மை மட்டும் இப்படி படைத்துவிட்டார்? என்று கேட்டது இன்னொரு ஆந்தைக் குஞ்சு.

கடவுள் நம்மையெல்லாம் ஒரே மாதிரித்தான் படைத்தார். முன்னொரு காலத்தில் நம்முடைய முன்னோர்களில் ஒருவர் செய்த தவறைத்தான் நாம் இன்றும் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம், என்றது தாய் ஆந்தை.

அப்படி என்ன தவறு செய்தார்? என்று கேட்டன குஞ்சுகள்.

ஒரு முறை நம் முன்னோர் ஒருவர் காகம் ஒன்றிடம் மிகவும் நட்பாக இருந்தார். ஒரு நாள் அந்த காகத்திற்கு உடல்நிலை மிகவும் சரியில்லை. எனவே, அதை அழைத்துக்கொண்டு காட்டில் டாக்டராக இருந்த குயில் டாக்டரிடம் சென்றனர்.

குயில் டாக்டரோ நன்றாக வைத்தியம் பார்த்து காக்காவை குணமாக்கிவிட்டது. அதன்பிறகு டாக்டருக்கு பணம் கொடுக்கணும் இல்லையா? ஆனால், இவர்கள் இருவரும் கொடுக்கவில்லை. எனவே, குயில் டாக்டர் எனக்கு கொடுக்கவேண்டிய பணத்தை கொடுங்கள் என்று கேட்டது.

இவர்கள் இருவரும் எங்களிடம் பணம் இல்லை என்று சொல்லிவிட்டு ஓடி வந்து விட்டனர். அதன் பிறகு இவர்கள் இருவரையும் பார்க்கும் பொழுதெல்லாம் பணம் கேட்க ஆரம்பித்தது குயில் டாக்டர். ஏதுடா தொல்லையாப் போச்சு என்று நினைத்த நம்முடைய பாட்டனாரான ஆந்தையார், பகலில் தலைகாட்டுவதே இல்லை. இரவில் மட்டுமே வெளியே வருவதும் இரையை பிடித்து தின்பதுமாக இருந்திருக்கிறார்.

பகல் முழுவதும் மரப் பொந்துகளில் படுத்து நன்கு தூங்குவது... இரவில் எழுந்து வெளியே செல்வது... இப்படியே இருந்ததால் ஆந்தையாரை கண்டுபிடிக்க முடியவில்லை குயில் டாக்டரால். அதனால் ஆத்திரமடைந்த குயில் டாக்டர், காக்காவை பிடித்து நன்கு திட்டியிருக்கிறது.

அந்த திருட்டு காக்கா கடுமையாக வேலை செய்தாவது டாக்டருக்கு பணம் கொடுத்திருக்க வேண்டியதுதானே... அப்படி கொடுக்கவில்லை. இதனால் கோபம் கொண்ட குயில் டாக்டர், இனிமேல் எங்கள் இனத்தார் இடும் முட்டைகளை எல்லாம் உன் இனத்தார்தான் காவல்காக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டது.




அன்றிலிருந்து குயில் இனத்தார் அனைவரும் காக்கையின் கூட்டில் தங்கள் முட்டைகளை இட்டுவிட்டு சென்றுவிடுவர். அது குயிலின் முட்டை என்பது தெரியாமலே காக்கை இனம் வளர்த்து கொண்டுவருகிறது.

நம்முடைய இனத்தார் பகலில் தூங்கி தூங்கியே நமக்கு பகலில் கண்தெரியாமல் போய்விட்டது. இதுதான் கதை. என்றது தாய் ஆந்தை.

அம்மா பிறரை ஏமாற்றுவதால் ஏற்படும் கஷ்டம் காலம் காலமாக பலரை பாதிப்பதை புரிந்துகொண்டோம்.

இனிமேல் நாங்கள் ஒருகவாலும் இப்படிப்பட்ட காரியத்தை செய்யவே மாட்டோம், என்றனர்.

செல்லமாக தன் குஞ்சுகளை அணைத்து முத்தமிட்டது தாய் ஆந்தை.





கண்ணில்லாவிடினும் அவர் கற்றவராக இருப்பின் கண்ணுடையவராகவே கருதப்படுவார் கல்லாதவருக்குக் கண் இருப்பினும் அது புண் என்றே கருதப்படும்.



ஆஸ்திரேலியாவில் மட்டும் அதிகம் காணப்படும் கங்காருகளில் 150 வகைகள் உண்டு. ஆறு அடி உயரமுள்ள பிக்ரெட்டிலிருந்து, முயல் அளவே உள்ள பெர்னடைன் வரை உள்ளன. இங்கு காணப்படும் கோலாக் கரடிகள் பில்லி புளுகம் என்ற பெயருள்ளவை. இவை யூகலிப்டஸ் மரத்தின் இலைகளை மட்டுமே தின்று வாழக்கூடியவை.


# மின்மினிக் குடை!



ஜப்பானில் புதியதோர் குடை புழக்கத்தில் வந்துள்ளது. இரவுவேளைகளில் மழை பெய்யும்போது போக்குவரத்து விபத்துகளிலிருந்து பாதசாரிகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளப் பெரும் உதவியாக உள்ளது. இக்குடை டபேடா என்கிற சில்க் துணியால் தயாரிக்கப்படுகிறது. இது பார்ப்பதற்கு சாதாரணக் குடையைப் போலத்தான் காட்சி அளிக்கிறது.

ஆனால் ஒளியைப் பிரதிபலிக்கும் ஒரு பொருள் குடையின் விளிம்பில் தைக்கப்பட்டுள்ளது. இது இரவில் ஒளிவீசிக் குடையை ஏந்திச் செல்லும் பாதசாரியை 200 அடி தூரத்துக்குச் சுட்டிக்காட்டுகிறது. இந்த மின்மினிக் குடை தயாரிக்கும் கம்பெனியை ஜப்பான் நாட்டுப் போக்குவரத்துப் பாதுகாப்புச் சங்கம் வெகுவாகப் பாராட்டியுள்ளதாம்.

## தெரிந்துகொள்ளுங்கள்



மிக உயரமான இடத்தில் வசிக்கும் மீன் திபெத்தில் உள்ள லோச் என்ற மீன் இனம்தான். இமயமலையில் 17,660 அடி உயரத்தில் அவை வசிக்கின்றன.

நண்டின் ஓட்டிலிருந்து கெய்டின் என்ற செயற்கை நூலிழை தயாரிக்கப்படுகிறது. இது அறுவை சிகிச்சையின் போது தைக்கப்படும் நூலாகப் பயன்படுகிறது.

## தகவல்கள்

### பிரார்த்தனை!

அமெரிக்க நாட்டின் ஜனாதிபதியாக கெல்வின் கூலிட்ஜ் பதவியேற்ற நேரம் அது. அவரோடு மந்திரிகளும் பதவியேற்றனர். அந்த விழாவிற்கு ஒரு பாதிரியாரும் வந்திருந்தார்.

பதவிப்பிரமாணம் செய்துகொண்ட மந்திரிகளில் ஒருவர், "நீங்கள் எங்களுக்காகப் பிரார்த்தனை செய்யப்போகிறீர்களா?" என்று பாதிரியாரைப் பார்த்துக் கேட்டார்.

அதற்கு அந்தப் பாதிரியார், "அதற்குத்தான் வந்தேன். ஆனால், இங்கு வந்து உங்களையெல்லாம் பார்த்த பிறகு கடவுளிடம் இந்த நாட்டுக்காகப் பிரார்த்தனை செய்கிறேன்" என்றார்.

### பலன்!

அமெரிக்க பிரதிநிதி சபைத் தேர்தல்!
வேட்பாளர்களின் மும்முரமான பிரசாரம்!
ஒருவரை எதிர்த்து ஒன்பது பேர் போட்டி!
தேர்தல் முடிந்து வாக்கு எண்ணிக்கை நடந்துகொண்டிருந்தது.


ஒரு வேட்பாளர் முடிவுகளைப் பற்றிச் சிறிதும் கவலையோ, பரபரப்போ அடையாமல், அமைதியான முறையில் அன்று மாலை ஒரு திரைப்படத்திற்குப் போய்விட்டார்.

படம் முடிவதற்குள், தேர்தல் முடிவுகள் வந்துவிட்டன. எந்தவித பரபரப்பும் இன்றி தாமரை இலைத் தண்ணீர் போல அமைதியாக அவர் அமர்ந்திருந்தார். தேர்தல் முடிவு அவருக்கு சாதகமாக அறிவிக்கப்பட்டது!

செய்யவேண்டிய பணியைச் செய்யவேண்டிய நேரத்தில் செவ்வனே செய்து முடித்து விட்டேன். பலன் எப்படி இருந்தால் என்ன? என்று நிருபர்களுக்குப் பதில் தந்த அந்த வேட்பாளர் யார் தெரியுமா?

அன்றைய பிரதிநிதி சபைத் தேர்தலில் அமோக வெற்றி பெற்றவர் அமெரிக்க அதிபராக இருந்த ஜோன்.எப்.கென்னடி.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள்.

சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி: 04.08.2014

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1054**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1052**

ஈ.யாழரசி, கிருஸ்ணபுரம், கிளிநொச்சி

பரிசுக்குரியவர்: 1052

பாராட்டுக்குரியவர்கள்

01. P.நேத்தன், பேராதெனிய றோட், கண்டி.
02. மு.திவான்சயன், உடுப்பிட்டி.
03. யோ.சுபாஷினி, சரசாலை தெற்கு, சாவகச்சேரி.
04. M.M.M.சாமில், மிரிஸ்வத்த, பலாங்கொடை
05. எம்.பவதாரணி, வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டை.
07. ய.சாய்சரன், பிரதான வீதி, நுவரெலியா.
08. டி.யஷ்மிகா, கடற்கரை வீதி, மன்னார்.

**இனி...**

"அப்படியா? அந்தாள் போகட்டும். அந்தாளின் காதலி மிக அழகாக இருப்பாளாமே, எங்கே?" என்றான் கண்களில் ஆர்வமுடன் அமீன். முன்கூட்டியே அவளை நாட்டை விட்டு அனுப்பி விட்டுத்தான் போயிருக்கிறார் என்று கூறியதும் முகம் சிவந்து மேசையில் ஓங்கிக் குத்திய குத்தில் பதில்சொன்ன அதிகாரி பயந்துபோனார்.



# இடி அமீன்

அற்புதன் எழுதிய

**உண்மைத் தொடர்...**

**அதிர் இடி (48)**

எங்கரை கண்காணிக்கும் உளவாளிக்கு கம்பாலா நகரிலிருந்து எட்டத்தில் உள்ள அவனது குடும்பத்தினரை பார்க்கவேண்டும். அதற்கு இந்த கண்காணிப்பு உபத்திரவமாக அதனால் அவன் கற்பனை யான தகவல் ஒன்றை தன் மேலதிகாரிகளுக்கு அனுப்பினான்.

இரவுநேரங்களில்...

"எங்கர் வீட்டுக்கு லாங்கி இன இளைஞர்கள் வந்து போகிறார்கள். சதித் திட்டம் தீட்டப்படுகிறது!" இந்த அறிக்கை அமீனிடம் சென்றது. லாங்கி இனத்தவரை நம்பவே கூடாது. நம்பவு தாகக் கூறலாம், நம்பக்கூடாது எங்கரை கைதுசெய்து விசாரியுங்கள். உண்மையைக் கூறாவிட்டால் சொர்க்கத்திற்கு வழியனுப்பி வையுங்கள்" என்று கூறிவிட்டான் அமீன்.

எங்கர் கைதானார் எப்படி விசாரித்தும் அவர்கள் அறிய நினைத்த தகவல்கள் அவரிடம் இருந்துவரவில்லை.

அப்படி எதுவும் இருந்தால் தானே வருவதற்கு. எங்கர் பொய் சொல்கிறார் என்று உளவுப் பிரிவு நினைத்தது.

மிகப் பொல்லாத ஆள் எங்கர். யாரும் இப்படி உண்மை சொல்ல முரண்டு பிடித்ததில்லை. அதனால் இவரைவிட்டு வைப்பதே ஆபத்து என்றது புலனாய்வு அறிக்கை. நல்ல நேரம் பார்த்து கொன்றுவிடுங்கள் என்று அமீன் கூறிவிட்டான்.

எங்கர் கொல்லப்பட்டார். அவர் சிறையில் கொல்லப்பட்ட தகவல் அவரது குடும்பத்தினருக்குக்கூட உடனடியாக தெரியப்படுத்தப்படவில்லை.

அமைச்சர்களுக்கு இச் செய்தி எப்படியோ எட்டி இருந்தது.

தன் செயலாளரான அழகியை அமீனிடம் பறி கொடுத்தவர் கல்வியமைச்சர் எட்வட்ருகு.

அவருக்கு காதலி ஒருத்தி இருந்தாள். அந்தக் காதலிக்கும் அமீனால் ஆபத்து வரலாம் என்று பயந்தார்.


அரச அலுவலாக மொம்பாகா நாட்டுக்கு சென்ற கல்வி அமைச்சர் திருப்ப வரவேயில்லை.

"அப்படியா? அந்தாள் போகட்டும். அந்தாளின் காதலி மிக அழகாக இருப்பாளாமே, எங்கே?" என்றான் கண்களில் ஆர்வமுடன் அமீன்.

பதில் அமீனுக்கு கோபத்தை கொடுத்தது.

முன் கூட்டியே அவளைநாட்டை விட்டு அனுப்பி விட்டுத்தான் போயிருக்கிறார் என்றுகூறியதும் முகம் சிவந்து மேசையில் ஓங்கிக் குத்திய குத்தில்பதில்சொன்ன அதிகாரி பயந்து போனார்.

அந்த அமைச்சரை கண் காணிக்க நியமிக்கப்பட்ட புலனாய்வு அதிகாரிக்கு வேலை போனது.



கல்வி அமைச்சரிடம் இருந்து அமீனுகக்கு ஒரு தந்தி வந்திருந்தது.

இரத்த ஆறுபெருக்கெடுத் தோடும் ஒரு நாட்டில் காலடி எடுத்துவைக்க எனக்கு விரும்பமில்லை என்று தெரிவித்திருந்தார் அமைச்சர்.

வெளியே செல்ல கால்களே இல்லாமல் பண்ணியிருப்பேன். அவன் இரத்தத்தில் சூப் போட்டு குடித்திருப்பேன். தப்பிவிட்டான். அவன் காதலி கிடைத்தாலாவது கொத்துக் கறி போட்டிருக்கலாம் என்று திட்டித் தீர்த்தபடி தந்தியை சுக்குநூறாக கிழித்து வீசினான்.

உடனடியாக அமைச்சரவைக் கூட்டத்தை கூட்டினான். அனைவரும் நடுங்கிக்கொண்டே கூட்டத்திற்கு வந்தனர்.

"உங்களில் யாருக்காவது அமைச்சர் பதவியில் இருந்து விருப்பம் இருந்தால் இப்போதே எழுந்து ஓடிவிடவேண்டும், இரகசியமாக ஓடமுயன்றால் எவர் தலையும் தப்பாது!" என்றுதன் தொண்டை நரம்புகள் புடைக்க கத்தினான் அமீன்.

அசாதாரண அமைதி அங்கு குடிகொண்டிருந்தது.

ஒரேயொரு அமைச்சர் மட்டும் எழுந்தார் நான் பதவி விலக விரும்புகிறேன் என்றார்.

அமீனின் புருவம் உயர்ந்தது. அவன் எண்ணத்தை முகம் காட்டமறுத்தது.

வேறு யாராவது விரும்புகிறீர்களா?" என்றான். ஏனைய அமைச்சர்கள் இல்லை இல்லை என்றனர்.

கூட்டம் இத்தோடு கலைகிறது. இராஜினாமாவை சமர்ப்பிக்க நீர்மட்டம் நில்லும் என்றான். விலக விரும்பிய அமைச்சரிடம்.

அடுத்த நில நிமிடங்களில் அங்கு ஒரு விபரீதம் உருவாகவிருந்தது.

**(தொடரும்)**

---

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும்
வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே
ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும்,
பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

## குறுக்கெழுத்துப் போட்டி - 583

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | | 9 | | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | | |
| 19 | 20 | 21 | 22 | | 24 |
| 25 | 26 | | | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 04.08.2014 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 583
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை
மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு,
அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 581 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 மு | 2 க | 3 தா | 4 ட் | 5 சி | 6 ணை |
| 7 ந | 8 பி | | 10 கை | 11 த் | 12 து |
| 13 கை | 14 லா | 15 ச | 16 ப | 17 தி | |
| 19 க் | | 21 ச் | | 23 ன் | 24 கா |
| 25 க | 26 ம் | 27 ல் | 28 ன | 29 ப | 30 மா |
| 31 ல் | 32 த | 33 கா | | 35 ம் | 36 லை |

**இடமிருந்து வலம்**

01. உலகில் உள்ள அனைத்து சாயி ஸ்தாபனங்களும் கடைப்பிடித்து வரும் ஒரு விசேடமான நன்நாள்.

11. கிடங்கு. பள்ளம்.

13. சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உளப்பாங்கின் வெளிப்படை இதுவாகும்.

19. இரட்சிப்பு. (குழம்பியுள்ளது)

24. வியப்பு. விலங்கின் பெண் பொது.

25. திசை. தேமல்.

29. தைரிய.

31. G7 நாடுகளில் ஒன்று. (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01. குருவின் மனைவி.

03. ஒரு இராகம் (குழம்பியுள்ளது)

05. சாக்குப் பை. எட்டு மரக்கால் கொண்டஅளவு. (திரும்பியுள்ளது)

06. மழை. இந்துக்களின் தெய்வம் ஒன்று.

14. நிலவறை. (குழம்பியுள்ளது)

16. விலங்கு. ஸ்தம்பி. (திரும்பியுள்ளது)

24. பூவில்ல மரம்; மலராத மரம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 581 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி.**

சு.சாம்லி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. எல்.எம்.ஹமீம், அநுராதபுர வீதி, புத்தளம்.
02. க.சிவமலர், அம்பிட்டியா றோட், கண்டி.
03. இ.சிவதாஸ், புகையிரத நிலைய வீதி, மன்னார்.
04. எம்.கமால், மத்திய வீதி, காத்தான்குடி -03.
05. மா.பிரியங்கா, 3ஆம் குறுக்குத்தெரு, வவுனியா.
06. ம.தவபாலன், பரந்தன், கிளிநொச்சி.
07. ப.சிவநேசன், கோவில் வீதி, மன்னார்.
08. சௌ.பவித்ரா, தும்பளை, பருத்தித்துறை.
09. வ.லவன், மட்டுவில், நுணாவில்.




# அனுஷ்காவின் பதிலால் அதிர்கிறது கொலிவூட்!

தமிழ் மற்றும் தெலுங்கு நடிகர்களை அவமதித்ததாக அனுஷ்காமீது கடும் குற்றச்சாட்டுகள் எழுந்து அவை சமூகவலைத் தளங்களில் பெரும் பிரச்சினையாக உருவாகியுள்ளது.

அனுஷ்கா சமீபத்தில் பொலிவூட்டின் முன்னணி பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில், "உங்களுக்கு பிடித்த நடிகர் யார் என்ற கேள்விக்கு ஹிருத்திக்ரோஷன், அபிஷேக் பச்சன், ஷாருக்கான் என பதில் கூறியுள்ளார். இவர்களை தவிர தமிழ், தெலுங்கு நடிகர்களை உங்களை கவர்ந்தவர் யார் என்ற கேள்விக்கு, என்னை கவரும் அளவுக்கு எந்த தமிழ், தெலுங்கு நடிகரும் இல்லை என்று கூறியதாகவும் தெரிகிறது.

இந்த பதில் தமிழ் மற்றும் தெலுங்கு படவுலகை அதிர்ச்சியடைய செய்துள்ளார். தமிழில் அஜீத், விஜய், சூர்யா, விக்ரம், கார்த்தி ஆகிய முன்னணி நடிகர்களுடனும் தெலுங்கில் அனேகமாக அனைத்து நடிகர்களுடனும் நடித்துள்ள அனுஷ்கா, தன்னை இவர்களில் ஒருவர்கூட கவரவில்லை என்று கூறியுள்ளது ரசிகர்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது.

மேலும் ஒரு கேள்விக்கு பதிலளித்த அனுஷ்கா, என்னுடைய உயரத்திற்கு பொருத்தமான ஜோடியை தமிழ் மற்றும் தெலுங்கில் கஷ்டப்பட்டு தேடவேண்டிய நிலை உள்ளது என்றும் கூறியுள்ளார். இது மேலும் ரசிகர்களை ஆத்திரப்படுத்தியுள்ளது.

# மீண்டும் ...

சமீபத்தில் ஆர்ய...
விழாவில். ஆர்யா ...
இருப்பதாக த்ரிஷா ...
வெளிப்படையாக பே...
முன்னாள் காதலியா...
புதுப்பித்துள்ளதாக ...
நடிகை பூஜ...
கேட்குமே, நான் கட...
நடித்துள்ளார். கடந்...
நடிக்கும்போது இரு...
இருவரும் காதலிப்ப...
இந்நிலையில் சமீபத்...
விழா ஒன்றில் இரு...



# ரஜினி மயங்கியது ஏன்?

ரஜினிகாந்த் நடிப்பில் உருவாகும் 'லிங்கா' திரைப்படத்தை கே.எஸ்.ரவிகுமார் இயக்கிவருகிறார். இந்த படத்தின் படப்பிடிப்பு ஐதராபாத்தில் மிகவும் விறுவிறுப்பாக நடந்துவருகிறது.

இந்நிலையில் சில இணையத்தளங்களிலும், ஊடகங்களிலும் ரஜினிகாந்த் சண்டைக்காட்சியில் நடித்துக்கொண்டிருக்கும்போது திடீரென மயக்கம் அடைந்துவிட்டதாகவும், ஐதராபாத் மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் வதந்தி பரவியது. இதனால் லிங்கா படப்பிடிப்பு நிறுத்தப்பட்டதாகவும் செய்திகள் வெளிவந்தன.

இந்த வதந்தி குறித்து விளக்கம் அளித்த இயக்குனர் கே.எஸ்.ரவிகுமார், "ரஜினிகாந்த்துக்கு எவ்வித உடல்நலக்குறைபாடும் ஏற்படவில்லை. அவர் மிகவும் ஜாலியாக படப்பிடிப்பில் கலந்து கொண்டார். அவருடைய ஆரோக்கியத்திற்கு எவ்வித பிரச்சினையும் இல்லை. எனவே ரஜினி ரசிகர்களும், தமிழக மக்களும் இந்த வதந்தியை நம்பவேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்.

லிங்கா படப்பிடிப்பு தொடர்ந்து விறுவிறுப்பாக நடந்துவருவதாகவும், திட்டமிட்டபடி ரஜினியின் பிறந்த நாளான டிசம்பர் 12ஆம் திகதி படம் வெளியாகும் என்று இயக்குனர் கே.எஸ்.ரவிக்குமார் தெரிவித்தார்.




# கொதிக்கிறார் திருமதி உதயநிதி..!

கடந்த சில நாட்களாக நயன்தாராவும், உதயநிதி ஸ்டாலினும் தற்கொலை முயற்சிசெய்ததாக ஊடகங்களிலும், சமூக இணையத்தளங்களிலும் பெரும் பரபரப்பாக செய்திகள் வெளிவந்து கொண்டிருந்தன. இதுகுறித்து உதயநிதி ஸ்டாலின் மனைவிக்கு அவரது நண்பர்கள் வட்டத்தில் இருந்து ஏராளமான போன்கால்கள் வந்ததால் அவர் தன்னுடைய டுவிட்டரில் இதற்கு விளக்கம் அளித்துள்ளார்.

இணையத்தள ஊடகங்களும், பத்திரிகைகளும் பொறுப்பற்ற முறையில் உறுதி செய்யப்படாத தகவல்களை வெறும் பரபரப்புக்காகவே வெளியிடுகின்றனர். ஒரு செய்தியை வெளியிடுவதற்கு முன்னர் சம்மந்தப்பட்டவர்களிடம் விளக்கம் கேட்டு வெளியிடவேண்டும் என்ற மரபு தற்போது கடைப்பிடிக்கப்படுவது இல்லை. இந்த விஷயம் குறித்து யாரும் என்னிடம் கேள்விகேட்டு என்னுடைய நேரத்தையும், அவர்களுடைய நேரத்தையும் வீணாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன் என்று ஆத்திரத்துடன் கூறியுள்ளார். இயக்குனர்கள் அட்லி மற்றும் எம்.ராஜேஷ் அவர்களும் இது முழுக்க முழுக்க வதந்திதான்.

# துளிர்க்கிறது கருகிய காதல்...!

ஆர்யா தயாரித்த ஒரு படத்தின் பாடல் வெளியீட்டு கொலிவூட் கதாநாயகிகளுக்கு பிடித்த நடிகராக ஷா, நயன்தாரா உள்பட அனைத்து நடிகைகளும் பேசினார்கள். இந்நிலையில் தனது யான நடிகை பூஜாவுடன் மீண்டும் உறவை க கொலிவூட்டில் கிசுகிசுக்கப்படுகிறது. பூஜாவுடன் ஆர்யா, 'ஓரம்போ', உள்ளம் கடவுள் போன்ற படங்களில் ஜோடியாக டந்த 2009ஆம் ஆண்டு நான் கடவுள் படத்தில் ருவருக்கும் இடையே நெருக்கம் உண்டானதாகவும், ப்பதாகவும் அப்போது செய்திகள் வெளிவந்தன. மீபத்தில் சென்னையில் நடந்த விருது வழங்கும் ருவரும் மீண்டும் சந்திக்க நேர்ந்ததாகவும், அப்போது இருவரும் தங்கள் பழைய நெருக்கத்தை மீண்டும் புதுப்பித்துக் கொண்டாதாகவும் கூறப்படுகிறது. விழா முடிவடைந்ததும் அங்கிருந்த கேரவனில் இருவரும் தனியாக நீண்ட நேரம் உட்கார்ந்து பேசி உள்ளனர். இந்த இரகசிய சந்திப்பு புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களிலும், ஊடகங்களிலும் மிகவேக மாக பரவிவருகிறது. ஆனால் இந்த கிசுகிசு குறித்து இருவருமே மறுத்துள்ளனர். என்பது குறிப்பிடத் தக்கது.






# இளைய தளபதிக்கு விடுதலை!

தமிழ் திரையுலகில் மாபெரும் ரசிகர் பட்டாளத்தை வைத்திருப்பவர் விஜய். இவர் தற்போது கத்தி படத்தில் பிஸி யாக நடித்துக்கொண்டிருக்க, அடுத்து சிம்புதேவன் படத்திலும் நடிக்க சம்மதம் தெரிவித்துள்ளார். இதில் இவருக்கு ஜோடியாக ஸ்ருதிஹாசன் நடிக்கிறார். சமீபத்தில் நடந்த கருத்துக்கணிப்பில் இவருக்கு சூப்பர் ஸ்டார் பட்டம் வழங்கப்பட்டது. இப்பட்டத்தை மதுரையில் ஒரு விழாவாக எடுத்து வழங்கப்போகிறார்களாம். இதனால் இனி இளைய தளபதி பட்டம் இல்லாமல், கத்தி படத்தில் சூப்பர் ஸ்டார் என்று போடலாம் என படக்குழு ஆலோசித்துவருவதாக நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# காதலை பிரிக்கும் வில்லி

கடந்த 2006ஆம் ஆண்டு சிம்பு- நயன்தாரா நடித்து வெளியான வல்லவன் படத்திற்கு பின்னர் எட்டு வருட இடைவெளிக்கு பின்னர் மீண்டும் நடித்துவரும் திரைப்படம் "இது நம்ம ஆளு". இந்த படத்தை பாண்டிராஜ் இயக்கிவருகிறார். முதலில் காதலர்களாகவும், பின்னர் தம்பதிகளாகவும் நடிக்கும் சிம்பு -நயன்தாரா, ஏற்கனவே உண்மையான காதலர்களாக இருந்து பிரிந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது இந்த படத்தில் நயன்தாராவை தவிர இன்னொரு நடிகை யும் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். சிம்பு-நயன்தாரா ஜோடியின் வாழ்க்கையை பிரிக்கும் கள்ளக்காதலி வேடத்தில் நடிக்கிறார் நடிகை டாப்சி. படத்தில் வெறும் பத்து நிமிடங்களே டாப்சியின் காட்சிகள் வருவதாகவும், அந்த கேரக்டர்தான் கதையின் திருப்புமுனைக்கு கார்ணமாக இருக்கும் கேரக்டர் என படக்குழுவினர் தெரிவித்துவருகின்றனர். ஆரம்பம் படத்திற்கு பின்னர் தமிழில் வாய்ப்பு இல்லாமல் இருக்கும் டாப்சி, ஏற்கனவே இதேபோன்ற ஐஸ்வர்யா தனுஷ் இயக்குமர் 'வை ராஜா வை' என்ற படத்திலும் கௌரவ வேடத்தில் நடிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த இரண்டு படங்கள் தவிர நீண்டகாலமாக தயாரிப்பில் உள்ள ராகவா லோரன்ஸின் முனி 3 படத்திலும் டாப்சி நடித்து வருகிறார்.

# மீண்டும் சந்தித்தது ஒருதலை ராகம்

கடந்த 1980ஆம் ஆண்டு வெளிவந்த ஒருதலை ராகம் படத்தின் படக்குழுவினர் அனைவரும் புதியதாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு படவிழாவில் சந்தித்துக்கொண்ட அபூர்வ நிகழ்வு ஒன்று சமீபத்தில் நடந்தது. டி.ராஜேந்தர் இசையமைப்பா ளராக அறிமுக மான திரைப்படம் ஒருதலைராகம். இந்த படத்தை ரொபர்ட் ராஜசேகர் இயக்க, சங்கர், ரூபா, தியாகு, சந்திரசேகர் மற்றும் பலர் நடித்திருந்தனர். இந்த படத்தில் ஹீரோவாக அறிமுக மான சங்கர் இயக்கிய மணல் நகரம் என்ற திரைப்படத்தின் பாடல் வெளியீடு மற்றும் பத்திரிகையாளர் சந்திப்பு நிகழ்ச்சி ஒன்றை சங்கர் ஏற்பாடு செய்திருந்தார். இதில் புதுமையாக தான் அறிமுகமான 'ஒருதலை இராகம்' படத்தின் அனைத்து கலைஞர்களையும் வரவழைத்து விழா எடுக்க முடிவுசெய்தார். 'மணல் நகரம்' ஓடியோவை டி.ராஜேந்தர் வெளியிட்டார். ரூபா பெற்றுக் கொண்டார்.






விஷப்பரீட்சைகளுக்கு மத்தியில்
ஒரு விஷேசப் பரீட்சை!
ஏழையின் குடலை
எக்ஸ்ரே எடுக்கும் முயற்சி.

இந்த பட்டினியில்தான்
ஆன்மாவின் வயிறு நிரம்புகிறது
வயிற்றில் அடிப்பவனை
வயிறு அடிக்கிறது.

சுமக்கும் வயிறு புனிதமானது
இன்று -
சுமக்காத வயிறும்
புனிதம் பெறுகிறது.

கூலி கிடைத்தால்தான்
வயிறு நிரம்பும்
இன்று -
காலி வயிறுக்கே
கூலி கிடைக்கிறது.

வயிற்றுக்குக் கஞ்சி வேண்டும்
நோன்பு நாட்களில்
கஞ்சிக்கு வயிறு வேண்டும்.

இது - இறையோடு உரையாட
குடல் எழுதும் மடல்

ஓடிக்கொண்டிருக்கும் சக்கரங்கள்
ஒடிந்து போவதின் ஒத்திகை
வள்ளல்களின் துள்ளல்களில்
திடீர் அதிகரிப்பு!
வரட்சியின் புரட்சியால்
ஈரம் சுரக்கும் நேரம்.

இது - வேதம் வந்த மாதம்
அதனால்தான்
சத்தியம் சாத்தியமானது
கல்லறையின் ஞாபகத்தில்
சில்லறைகள் மறந்துபோனது

புனித ரமலானே வருக வருக...
புவியில் ரஹ்மானின்
அருளைத் தருக.




எம்மை நோக்கி வந்துவிட்ட ரமழானை நாம் அடைந்துவிட்டோம். எல்லாப் புகழும் இறைவனுக்கே. அல்ஹம்துலில்லாஹ்! இந்நாளை புனிதப்படுத்தி கண்ணியத்துடனும் கவனத்துடனும் நகர்த்திச் செல்வதில் நாம் ரொம்ப ரொம்ப ஆசையோடும் ஆவலோடும் இருந்தாகவேண்டும்.

காரணம். இந்த ரமழான் மாதம் வந்துவிட்டால். சுவர்க்கத்தின் வாயில்கள் திறக்கப்படுகின்றன. நரகத்தின் வாயில்கள் மூடப்பட்டு. ஷைத்தானுக்கு விலங்கிடப்படுகின்றன என்று எம்பெருமானால் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறுகின்றார்கள்.

எனவே. இவ்வேளையை எமக்கு அமல்கள் நிறைந்ததாக ஆக்கிக் கொள்வோம். அல்லாஹு தஆலாவினது ஆதரவைப் பெற்றுக்கொள்வோம். இதற்காக இரவு. பகல் இறைவனை தொழுது அழுது நமக்காகவும் எம் அனைத்து மக்களின் நலனுக்காகவும் துஆ செய்துகொள்வதையும் மறக்கக்கூடாது.

நாமும் பிறமதத்தினரும் ஒன்றுபட்டு வாழும் இந்தச் சூழ்நிலைகளையும் சந்தர்ப்பங்களையும் பேணி வாழும் வகைகளில் எமது சகல நிகழ்வுகளையும் எதிர்கொள்ள வேண்டும். எந்தச் சந்தர்ப்பத்திலும் அல்லாஹ்வின் உதவியை எதிர்பார்க்கும் நாம் அதற்காக அந்த வல்லவன் உறவைப் பலப்படுத்த நோன்பை நோற்பதுடன் அதிகதிமாக சுன்னத்தான அமல்களிலும் ஈடுபட்டு திலாவதுல் குர்ஆன் திக்ர். இஸ்தி.ஃபார். இரவு வணக்கம் என்பவற்றிலும் அதிக ஈடுபாடு காட்டவேண்டும்.

இதன்மூலம்தான் நாம் மன அச்சமற்ற நிலைபோக்கி மனத்தைரியம் கிடைக்கப் பெற்று துன்பம் என்றபோது பொறுமையுள்ளவர்கள் ஆவோம். அல்லாஹ் விதித்ததை தவிர வேறு எதுவும் நடக்காது என்ற நம்பிக்கையும் பிரகாசிக்கும்.

எனவே எப்பொழுதும் எம்மைப் படைத்த அல்லாஹ் "சத்தியத்தை வெல்லவைப்பான்" நாமனைவரும் சமாதானத்துடனும் சந்தோஷத்துடனும் வாழுவோம்.

அதற்காய் இந்த ரமழானை பாக்கியம் உள்ளதாகவும் பாதுகாப்பானதாகவும் ஆக்குவோம்!

**மௌலவி ஏ.எம்.ஏ.அஸீஸ்**




வேதனை, தேவை மிகைக்கின் இறையை
வேண்டுதல் மனிதனின் குணமே
சாதனை செய்யத் துணிந்திடும் பொழுதில்
சார்ந்திட நினைத்தால் இறையின்

காதலில் விழுந்து கைகளை ஏந்திக்
கதறியே அழுதலும் தகுமே
சாதலின் நேரம் இறைவனை வேண்டிச்
சார்ந்திருப் பதுமுள உணர்வே

உதடுகள் கூறும் பிரார்த்தனை உன்னில்
உருகிடும் உணர்வுகள் ஓசைக்
கதவுகள் திறக்கும் திறவுகோல் அவனின்
கருணையால் பிறந்திடும் வார்த்தைப்
பதவுரை என்னும் பொழுதினில் உனக்கே
படைத்தவன் வேண்டுதல் தேவை
நிதமுமுன் தேடல் தேவையைக் கேட்க
நிலைத்தவன் அவனென உணர்வாய்.

வனாங்களும் கடலின் அலைகளும் பறவை
வகைகளும் இசைத்திடும் ஓசை
மனங்களில் மனிதன் அழுதிடும் வேண்டல்
மண்ணகம் வருதலின் முன்னம்
தனதருள் கொண்டு படைத்தவன் ஏற்கத்
தனிமையில் வேண்டியே கதறும்
உனதரும் வேண்டல் தேவையை அற்ற
உன்னிறை விரும்பும் உணர்வே!

**'கவியன்பன்' கலாம்.**

காலைக் கதிரவன்
கிழக்கில் மலருமுன்னே;
புனித ரமழான் மாத
கடமை நிறைவேற்ற;
துயில் நீங்கி
விழித்தெழுந்து;

உடல் சுத்தம்
முதல் முடித்து;
இருக்கும் உணவுதனை
அரை வயிறு நிரப்பி;

தூய நிறைமனதுடன்
இறைவன் திருநாமம்
மனதினில்
நிலைநிறுத்தி;

பகல் பொழுது முடிந்து;
மேற்கில் பகலவன்
தன் சுடரொளி
முற்றாய் மறையும்வரை;

உண்ணாமல்;
பருகாமல்;
சலனங்கள்
சபலங்கள்
அகத்தினில்
ஏதுமின்றி;
வருடத்தில் ஒரு மாதம்
முப்பது நாட்பொழுது;
சிந்தனையில்;
செயலில்;
மன உறுதி
மேலோங்க;
தவறாது நோன்பிருந்து;

இறை கட்டளை முடித்து
விடைபெற்றுச் செல்லும்
நோன்பின் மகத்துவம்;
கொண்டாடி மகிழும்
வெற்றித் திருநாள்
'ஈதுல் பித்ர்'.

சென்று வா ரமழானே!
உன் அருள் மீண்டும்
எமக்கு கிட்டிட;
எங்கும் நிறைந்த
ரஹ்மானே
உன்னையே
இறைஞ்சுகின்றோம்.

**'கற்பிட்டி வஹ்ஹாப்'**



# உலகக் கிண்ணத்தின் பின்



## அதிரடிப் பிரவேசம்

இன்றுவரை பேசப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு வீரன் இருபத்தியிரண்டே வயதான மரியா கோட்சே. ஆட்டத்தின் 113 ஆவது நிமிடத்தில் எங்கிருந்தோ வந்த இவன் மார்பில் ஏந்திய பந்தை, லாவகமாக உதைத்து கோலாக மாற்ற வரலாறு படைக்கப்பட்டது.

இவரது பயிற்றுனர் கூறியதுபோல, "மெஸ்ஸியை முந்த முடியாது என்று நினைத்து விடாதே" என்ற தரகமந்திரம் கோட்சேக்கு வேத வாக்காக இருந்திருக்க வேண்டும். அந்த வார்த்தைகள் கொடுத்த தைரியம்தான் அவனுக்கு பந்தைக் கோலாக்கும் தைரியத்தைக் கொடுத்திருக்க வேண்டும். இதில் இன்னொரு சுவாரஸ்யம் என்னவென்றால், 1954 –1974 – 1990 என்று முன்னதாக மூன்று முறை ஜேர்மனி உலகக் கிண்ணத்தை வென்றிருந்தது.

1990 ஜேர்மனி உலகக் கிண்ணத்தை வென்றபோது கோட்சே இவ்வுலகில் பிறந்திருக்கவே இல்லை.

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் முடிவடைந்துவிட்டன. ஜேர்மனி கிண்ணத்தை வென்றிருக்கலாம். ஆனால் இறுதிப் போட்டியில் விளையாடிய ஆர்ஜென்ரீனா உட்பட இரண்டு அணிகளும் மைதானத்தில் கூடியிருந்த 60 ஆயிரம் ரசிகர்களையும், தொலைக்காட்சியில் பார்த்த பலகோடி ரசிகர்களையும் ஏமாற்றவில்லை, மாறாக உன்னதமான ஆட்டம் ஒன்றைத் தந்தார்கள் என்பதே உண்மை.

## விமானம் இறங்கியது




**ஜேர்மனிய** வெற்றிக் கிண்ண வீரர்களையும், வெற்றிக் கிண்ணத்தையும் தாங்கியபடி ஜேர்மனிய லுப்தான்ஸா ஜெட் விமானம் இரண்டு மணிநேர தாமதத்தின் பின் பேர்லினிஸ் தரை இறங்கியது. அதற்குமுன் இந்தப் பிரம்மாண்டமான போயிங் 747 விமானம் பேர்லினின் செனட் சபையின் விசேட அனுமதியின்பேரில் தரையில் இருந்து சில நூறு மீற்றர் உயரத்தில் ஒரு வட்டமடித்து. பின்னர் தரையிறங்கியது. வெற்றி வீரர்களை வரவேற்கக் கூடியிருந்த ரசிகர் கூட்டம் ஏறத்தாழ ஐந்து இலட்சத்துக்கு மேல் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

மறுபுறம் ஆர்ஜென்ரீனா அணியினர் தாயகம் திரும்பியபோது மக்கள் ஆயிரக்கணக்கில் விமான நிலையத்திலும் பாதை நெடுகிலும் கூடி ஆர்வத்துடனும் அன்புடனும் வரவேற்புக் கொடுத்தனர். லயனல் மெஸ்ஸி மிக மனவருத்தத்துடன் தன் கருத்துக்களைத் தெரிவித்தார்.

ஆனால் ஆர்ஜென்ரீனா ரசிகர்கள். ஆர்ஜென்ரீனா அணியை சரியாக புரிந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் இதனைத் தோல்வியாக எடுக்கவில்லை என்பதே உண்மை.

ஆர்ஜென்ரீனாவின் ஜனாதிபதி கிறீஸ்ரீனா பெர்ணாண்டஸ் ஒவ்வொரு வீரரையும் பாசத்துடன் அணைத்து ஆறுதல் கூறியதே இதற்குச் சான்று. இதில் ஒரு சுவாரஷ்யம் என்னவென்றால், கிண்ணம்வென்ற ஜேர்மனியின் தலைவரும் ஒரு பெண்மணி. இரண்டாம் இடம்பெற்ற ஆர்ஜென்ரீனத் தலைவரும் ஒரு பெண்மணி. உலகக் கோப்பை ஆட்டங்களை வெற்றிகரமாக நடாத்திய பிரேசில் தலைவரும் ஒரு பெண்மணி. இது ஒரு மகிழ்ச்சியான ஒற்றுமையல்லவா.



## போகலாம் வாங்க

அடுத்த உலகக் கிண்ணப்போட்டிகள் 2018 ரஷ்யாவில் 2018 ரஷ்ய ஜனாதிபதித் தேர்தல் முடிவுற்று ஒரு மாதம் கழிந்து உலகக் கிண்ண உதைபந்தாட்டம் ரஷ்யாவில் தொடங்க இருக்கிறது. இத்தேர்தலிலும் ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் மீண்டும் வென்று ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றிருப்பார் என்று எதிர்வு கூறப்படுகின்றது. இறுதிப் போட்டி மொஸ்கோவில் உள்ள லுஸ்நிகி ஸ்ரேடியத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சலக கட்டுமான வேலைகளும் தொடக்கத்தில் இருந்தே நடைபெறவுள்ளதால் செலவுகள் மிக அதிகம். மேலும் உதைபந்தாட்டத் திருவிழாவிற்காக அதிவேக ரயில் வலைப்பின்னல் ஒன்று கட்டமைப்பு ஏற்பாடுகள் தயார். இன்னொரு விடயம் உதைபந்தாட்ட வீரர்கள், உத்தியோகத்தர்கள், உதைபந்தாட்ட ரசிகர்கள் எல்லோருமே நுழைவு விசா இல்லாமல் ரஷ்ய நாட்டுக்குள் வரவேற்கப்படுகிறார்கன் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை ஜனாதிபதி புட்டினே அறிவித்துள்ளார். சந்தேகமில்லாமல் ரஷ்யாவில் மிகப் பிரம்மாண்டமான் உதைபந்தாட்டத் திருவிழா 2018இல் காத்திருக்கிறது. நான்கு வருடங்கள் சட்டெனப் பறந்துவிடும். ரஷ்யா ரெடி. அங்கபோக நீங்க ரெடியா.

## விருதுகள், விரக்திகள்



பீபாவின் தங்கப் பந்து விருதை வென்று கொண்டவர் ஆர்ஜென்ரீனாவின் லயனஸ் மெஸ்ஸி. அவர் நான்கு ஆட்டங்களில் ஆட்ட நாயகனாகத் திகழ்ந்தமையும் ஒப்பீட்டளவில் இவரது அதீத திறமையும், நுட்பங்களும் இந்த விருதை அவருக்கு கொடுத்திருக்கிறது என்பதே உண்மை.

ஆனால் அதனை சந்தோசமாகக் கொண்டாட ஜேர்மனி இவரை விடவில்லை என்பது இன்னொரு உண்மை. தங்கப்பந்து விருதுக்கு மெஸ்ஸி உட்பட ஆர்ஜென்ரீனாவின் ஏஞ்சல் டீ மகியா, ஜாவியர், மாஸ்கெரன்ஹோ, ஜேர்மனியின் ஹமல்ஸ், ரோணி குருஸ், பிலிப் லாம், தோமஸ் முல்லர், பிரேசிலின் நெய்மார், போன்றோர் முன்மொழியப்பட்டிருந்தனர்.


நெதர்லாந்து அணியின் அர்ஜன் றொபேன், கொலம்பியாவின் இளவயது வீரர் ஜேம்ஸ் றொட்கிகஸ் இருவரும் தங்கப் பாதணி விருதைப் பெற்றுக்கொண்டார்கள். இருவரும் தலா ஆறுகோல்கள் அடித்திருந்தார்கள்.

இன்னொருபுறம், இம்முறை கோல் காப்பு வீரர்களுக்கு இடையில் பலத்த போட்டி இருந்தாலும், ஜேர்மனிய கோல் காப்பு வீரர் மனுவேல் நூவல் சிறந்த கோல் காப்பு வீரருக்கான விருதைப் பெற்றுக்கொண்டார். வளர்ந்துவரும் இளம் வீரர் விருதை பிரான்ஸ் அணியின் போல் பொக்பா பெற்றுக்கொண்டார்.

மிகவும் நாகரிகமாகவும், நியாயமாகவும் விளையாடிய சிறந்த அணியென்ற வகையில் கொலம்பிய அணி FAIR PLAY விருதைப் பெற்றுக்கொண்டது.




# முடி கொட்டுகிறதா?



- Z முடிகொட்டிய இடத்தில் ஐஸ்கட்டியை தடவினால் முடி வளரும்.
- Z கசகசாவை பாலில் ஊறவைத்து அரைத்து அத்துடன் பாசிப்பருப்பு மாவை கலந்து தேய்த்து வர முடி உதிர்தல் நிற்கும்.
- Z நன்கு வளர கற்றாழை சாறில் தேங்காய் எண்ணெய் கலந்து தேய்த்தால் முடி உதிராது அடர்த்தியாகும் நன்றாக வளரும். அத்துடன் தலையும் குளிர்ச்சியாகும்.
- Z சிறிய வெங்காயத்தின் சாறை எடுத்து தலையில் தேய்த்து ஊறவைத்து குளித்தால் முடி உதிராது.
- Z செம்பருத்தி பூவுடன் தேங்காய் எண்ணெய் கலந்து தலையில் தேய்த்தால் முடி உதிராது. அத்துடன் கூந்தல் கருமையாகவும் மாறும்.
- Z முட்டை வெள்ளைக்கருவை தலையில் தேய்த்து 10 நிமிடம் கழித்து சிகைக்காய் போட்டு குளித்தால் தலைமுடி உதிர்வது சுத்தமாக நின்றுவிடும்.
- Z வாரம் ஒரு முறை முடக்கத் தான் கீரையை அரைத்து தலையில் தேய்த்து 5 நிமிடம் ஊறியதும் குளிக்கவும். இதுபோல் தொடர்ந்து மூன்றுமாத காலம் குளித்து பார்க்கவும். முடிகொட்டுவது நின்றுவிடும். அதுமட்டுமல்ல, இந்த கீரை நரை விழுவதை தடுக்கும். கருகருவென முடி வளரத் தொடங்கும்.

# அழகுக்கு அழகு



பெண்களின் உடலோடு ஒட்டிக்கிடக்கும் பிராக்கள், அவர்களின் முன் அழகை பல மடங்கு அதிகரிக்கிறது. காலத்திற்கு ஏற்ப, வடிவத்திலும், நிறத்திலும், தோற்றத்திலும், சௌகரியங்களிலும் அது நல்ல மாற்றங்களுக்கு உள்ளாகியிருக்கிறது.

முன் அழகு முழு அழகாகத் திகழவேண்டும் என்றால், சரியான அளவிலான பிராவை தேர்ந்தெடுத்து அணியவேண்டும். அதிக அழகுக்கு இறுக்கமான பிராவை அணிய வேண்டும் என சில பெண்கள் கருதுவதுண்டு. அது சரியல்ல, பிரா அதிக இறுக்கத்துடன் இருந்தால், இரத்த ஓட்டம் பாதிக்கும். அந்தப் பகுதி வீக்கமடையும். அதிகமாக வியர்க்கும். அதனால் சரும நோய்கள் உருவாகக்கூடும்.

இறுக்கமான பிரா அணிந்தால் இத்தனை பிரச்சினைகள் இருப்பதால், தொள தொளவென பிரா அணிபவர்கள் உண்டு. அது வேறு விதத்தில் பிரச்சினைகளை உருவாக்கும். தொளதொள பிரா அணிந்தால், அது மார்பகங்கள் தொங்கிப்போக காரணமாகிவிடுகின்றன. அது அழகுக் குறைபாடு ஆகிவிடும்.

உங்களுக்கு எந்த மாதிரியான பிரா பொருத்தமாக இருக்கும் என்பதை அளவு மூலம்தான் தீர்மானிக்க முடியும். சரியாக எப்படி அளவிட வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியுமா?

கண்ணாடியின் முன்னால் நின்றுகொண்டு அளவெடுக்கும் வேலையை தொடங்கவேண்டும். மார்பின் சற்று கீழே நெஞ்சில் டேப்பை வைத்து அளவிடவேண்டும். டேப்பை இறுக்கமாகவோ, தளர்வாகவோ பிடிக்கக்கூடாது. சரியான முறையில் பிடித்து அளவெடுத்தால் மட்டுமே சரியான அளவை தெரிந்துகொள்ள முடியும்.

டேப் மூலம் கணிக்கப்படும் உங்கள் அளவு என்னவோ, அத்தோடு ஐந்தை சேர்த்தால் கிடைக்கும் அளவே, உங்கள் பிராவின் அளவு. அளவிடும்போது ஒற்றைப்படை எண் வந்தால், கூடுதலாக ஒன்றை சேர்த்துக்கொள்ள வேண்டும். இது பிராவின் பேண்ட் சைஸ் எனப்படும் சுற்றுவட்ட அளவுதான்.

அடுத்து பிராவின் கப் சைஸ் அளவெடுக்கவேண்டும். முதலில் கண்ணாடியை பார்த்தபடி நிமிர்ந்து நில்லுங்கள். டேப்பால் மார்பகங்களின் மேற்பகுதியோடு அளவிடவேண்டும். அளவிடும்போது டேப் மார்பகங்களை தொட்டபடி இருக்கவேண்டும்.

முதலில் இந்த கப் சைஸ் எடுத்துக்கொள்ளுங்கள். அதிலிருந்து பேண்ட் சைஸ் அளவை குறைக்கவேண்டும். அப்போது கிடைக்கும் நம்பர் ஒன்றாக இருந்தால், உங்கள் கப் சைஸ் எண் என்று எடுத்துக் கொள்ளவேண்டும். ஏ. பி. சி என்று கப் சைஸில் மூன்று வகை உள்ளன.

பேண்ட் சைஸ், கப் சைஸ் இரண்டையும் அடிப்படையாக வைத்துக்கொண்டு பிராவின் அளவை கண்டறியலாம். முதல் இரு அளவீடுகளையும் பிரா வாங்கும் கடையில் கொடுத்தால் அவர்கள் உங்கள் பிராவின் அளவைக் கூறுவார்கள்.

# மரண பாதைகளின் மகத்தான ஓட்டுநர்

## லிசா கெல்லி

நம் எல்லோருக்கும் ஏதோ ஒரு துறையில் பிரகாசிக்க விருப்பம் இருக்கிறது. நம்ம நாட்டிலும் ஆட்டோ ஓட்டும் பெண் ஓட்டுநனர்களும் உண்டு. ஆனால் இந்தப் பெண்ணின் இலட்சியம் கொஞ்சம் வித்தியாசமாக இருக்கிறது. லிசா கெல்லியின் விருப்பம் ரொம்பவே வித்தியாச மானது. அமெரிக்கா, அலாஸ்கா வில் வசிக்கும் லிசா சின்ன வயதில் இருந்தே பனிச்சறுக்கு, குதிரை ஏற்றம், பாரா கிளைடிங் போன்ற சாகச விளையாட்டு களின் மீது ஆர்வம் கொண்டவர். இவைதவிர எஞ்சின்கள், மோட்டார்கள், வாகனங்கள் மீதும் ஈர்ப்பு இருந்தது. கல்லூரியில் முதல் செமஸ்டருக்கு முன்புதான் தனக்கான துறை வாகனங்கள் என்பதைக் கண்டுகொண்டார். உடனே கல்லூரியில் இருந்து விலகினார்.

வாகன ஓட்டுநருக்கான பயிற்சி களைப் பெற்று, ஒரு பள்ளியில் பேரூந்து ஓட்டுநராக வேலைக்குச் சேர்ந்தார். அதோடு கரடுமுரடான இடங்களில் மோட்டார் சைக்கிள் ஓட்டும் பயிற்சியையும் பெற்றார். நாட்கள் செல்லச் செல்ல பெரிய வாகனங்கள் மீது அலாதியான ஆர்வம் வந்தது. பெரிய டிரக்கு களை ஓட்டும் பயிற்சியில் இறங்கினார். ஒரு டிரக்கராக இருப்பதில்தான் தன்னுடைய எதிர் காலம் இருப்பதை உணர்ந்து கொண்டார். சில கம்பெனிகளில் டிரக்கராக வேலை செய்தார். ஒல்லி யான இளம் பெண் எடை மிகுந்த பெரிய டிரக்குகளை ஓட்டுவதைக் கண்டு எல்லோருக்கும் ஆச்சரியம்.

டிரக்கராக இருப்பது வேறு எந்த வேலையைக் காட்டிலும் கடினமானதுதான். அதுவும் ஒரு பெண்ணுக்கு ரொம்பவே கடினம். சக ஆண் டிரக்கர்களைக் காட்டிலும், நான் இரண்டு மடங்கு உழைப்பைச் செலுத்தவேண்டும். என் பலம் முழுவதையும் பயன்படுத்த வேண்டும். ஆனாலும் இந்தச் சவால் நிறைந்த வேலை எனக்குப் பிடித்திருக்கிறது என்கிறார் லிசா. அலாஸ்காவில் டிரக் ஓட்டிக் கொண்டிருந்த லிசா, உலகப் புகழ் பெறுவதற்குக் காரணம் ஹிஸ்ட்ரி சனல். ஐஸ் ரோட் டிரக்கர்ஸ் மற்றும் டெட்லியஸ்ட் ரோட் என்ற இரண்டு நிகழ்ச்சிகளிலும் லிசா கெல்லி கலந்துகொண்டார்.

சாதாரண சாலைகளில் பாரங்களைச் சுமந்து செல்லும் டிரக் ஓடுவதே சவாலான வேலை. அதிலும் பனி உறைந்த ஏரி, ஆறுகளின் மீது டிரக் ஓடுவது மிகவும் ஆபத்தான விஷயம். குறிப்பிட்ட அடிவரைதான்



மிகமோசமான பேச்சுக்களையும் கிண்டல்களையும் சந்திக்க வேண்டியிருக்கும். ஆரம்பத்தில் நான் கலந்துகொண்ட போட்டிகளைப் பற்றி ஒரு ரேடியோ நிகழ்ச்சியில் பகிர்ந்துகொண்ட விஷயங்களை இங்கே சொல்லக்கூட முடியாது. கடின உழைப்பும் ஆர்வமும் இருந்தால் மட்டும் போதாது. திடமான மனம் வேண்டும். உங்களை அரவணைக்க நல்ல குடும்பம் வேண்டும். என் கணவர் கொடுக்கும் ஊக்கத்தாலும் அன்பாலும்தான் என்னால் இந்தத் துறையில் இவ்வளவு தூரம் வரமுடிகிறது.

தண்ணீர பனியாக உறைந்து இருக்கும். குறைந்த எடை உடைய வாகனங்கள் சென்றுவிடும். ஆனால், எடைமிகுந்த டிரக்குக்கு இது ரொம்பவே கடினம். டிரக்கின் அழுத்தம் தாங்காமல் பனி உடைந்தால், டிரக் தண்ணீருக்குள் மூழ்க வேண்டியதுதான். அந்த நிகழ்வுதான் ஐஸ் ரோட் டிரக் கர்ஸ் அதேபோல இந்தியாவில் இமயமலைப் பகுதிகளில் டெட்லி யஸ்ட் ரோட் என்ற போட்டி நடத் தப்பட்டது. ஒரு பக்கம் மலை, இன்னொரு பக்கம் பள்ளத்தாக்கு. சாலையின் அகலம் மிக மிகக் குறைவாக இருக்கும்.

வளைவுகளில் டிரக்கைத் திருப்புவது ஆபத்து. எளிதாக விபத்து நடக்க வாய்ப்புகள் அதிகம். இந்த இரண்டு சாகசப் போட்டிகளிலும் லிசா கலந்து கொண்டார். இமயமலையில் ஆண் டிரக்கர்கள் பின்வாங்கினர். சிலர் போட்டியை நிறைவு செய்யவில்லை. லிசா மட்டுமே அந்தப் போட்டியில் இறுதி வரை சென்று, சரக்குகளை ஒப்படைத் தார்! நான் இந்தத் துறைக்கு வந்தபோது பெண் டிரக்கர்களே கிடையாது. இன்று நான்கு பெண் கள் டிரக்கர்களாக இருக்கிறார்கள். ஆண்கள் கோலோச்சும் துறையில் பெண்கள் கால் பதிக்கும்போது, பூச்செண்டு கொடுத்து யாரும் வரவேற்பதில்லை.

இந்த வேலையால்தான் உலகம் முழுவதும் பயணம் செய்ய முடிந்திருக்கிறது. பல்வேறு நாட்டு மக்களைச் சந்திக்க முடிந்திருக்கிறது என்றார்.

ஒரு வருட ஓய்வுக்குப் பிறகு அடுத்த சீசனுக்குத் தயாராகிவிட்டார் லிசா கெல்லி.

## 250/= வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-429

**கேள்வி: ஜேர்மனி நாட்டின் ஜனாதிபதியின் பெயர் என்ன?**

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 04. 08. 2014

விடையைப் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 429
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 427 இற்கான விடை :- ஸ்நேக மனப்பான்மையுடன் பிணைப்பை ஏற்படுத்தவேண்டும்.

பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி :- எஸ்.பானுமதி, புகையிரத நிலைய வீதி, மன்னார்.

429

பெயர் : ....................

முகவரி : ....................

....................

தே.அ. அட்டை இல : ....................

விடை : ....................

....................

கையொப்பம் : ....................

ஜாமீனில் விடுவிக்கவேண்டும் என சீமான் தரப்பில் கோரியபோது, டோல்கேட் கண்காணிப்பாளரை அழைத்து அவரது புகார் குறித்து மாஜிஸ்திரேட் கேள்வி எழுப்பினார். ஒரிசாவைச் சேர்ந்தவர் என்பதால் எதற்கு வம்பு எனப் பயந்த கண்காணிப்பாளர் அஜய்குமார், "நான் யார்மீது புகார் ஏதும் கொடுக்கவில்லை. பொலிசார் என்னிடம் 2 வெள்ளைத்தாள்களை நீட்டி கையெழுத்துக் கேட்டனர். நான் கையெழுத்துப் போட்டேன். வேறு ஒன்றும் எனக்குத் தெரியாது என்றார்.

# சீமான் கைது!

## அம்மா சும்மா கைது செய்ய உத்தரவிட மாட்டாரே?




# சிதம்பர இரகசியம் என்ன?

சட்டசபைத் தேர்தல் மற்றும் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.-வுக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்ததோடு வைகோ, திருமாவளவனை எதிர்த்து பிரசாரம் செய்த நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமானை திடீரென பொலிசார் கைது செய்தது நாம் தமிழர் கட்சியினர், அ.தி.மு.க.வினர் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

"அம்மா சும்மா கைதுசெய்ய உத்தரவிடமாட்டாரே" ஆம், இந்த கைதுக்கு பின்னணி உள்ளதாக தகவல் உள்ளது.

ஜல்லிக்கட்டுக்கு உச்சநீதிமன்றம் விதித்துள்ள தடையை நீக்க வலியுறுத்தி காரைக்குடியில் கடந்த 17ஆம் திகதி நடந்த பேரணியில் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் கலந்துகொண்டார்.

பேரணி முடிந்து காரில் கட்சியின[ர்] மதுரை திரும்பும் வழியில் மேலூரை அடுத்த கத்தப்பட்டி சோதனை சாவடியில் கார்களுக்கு கட்டணம் செலுத்தவேண்டும் என டோல்கேட் ஊழியர்கள் மறித்தனர்.

ஆனால், நாம் தமிழர் கட்சியினர் மறுத்தனர். "கட்சியின் தலைவர் சீமானின் காரை மட்டும் கட்டணம் ஏதுமின்றி இலவசமாகச் செல்ல அனுமதிக்கிறோம்" என டோல்கேட் ஊழியர்கள் கூறினார். ஆனால், எந்த வாகனத்துக்கும் கட்டணம் செலுத்த மாட்டோம் என சீமானின் கட்சியினர் கூறியதால் தகராறு ஏற்பட்டது.

அப்போது டோல்கேட் கண்காணிப் பாளரான ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த சேர்ந்த அஜய்குமார் (30) தாக்கப்பட்டார். மேலும், சேர்கள், நாற்காலிகள் அடித்து நொறுக்கப்பட்டன.

சீமான் படையணி அடித்தால் பேசாமல் ஓடுவதற்கு டோல்கேட்டில் இருந்தவர்களென்ன இலங்கையில் இருந்து சென்ற சிங்கள சுற்றுலாப் பயணிகளா? அவர்களும் இவர்களைப் போட்டு மிதித்து எடுத்துவிட்டார்கள்.

இது குறித்து தகவலறிந்த மேலூர் பொலிசார் விரைந்து வந்து டோல்கேட் ஊழியர்களிடமும், சீமானிடமும் விசாரணை நடத்தினர். ஆனால், புகார்கள் ஏதும் கொடுக்க விரும்பவில்லை என இரு தரப்பினரும் கூறியதால் பொலிசார் அங்கிருந்து சென்றுவிட்டனர்.

இந்நிலையில், 18ஆம் திகதி மாலை டி.ஜி.பியிடமிருந்து மதுரை எஸ்.பி.க்கு ஒரு அவசர தகவல் வந்தது.

அந்தத் தகவலில் மேலூர் டி.எஸ்.பி. மணிரத்தினம், இன்ஸ்பெக்டர் களனியப்பன் ஆகிய இருவரையும் மதுரை வருமாறு எஸ்.பி. விஜயேந்திர பிதாரி அழைப்பதாக கூறப்பட்டது. அங்கு சென்ற இருவரையும், "உடனடியாகச் சென்னை செல்லுங்கள். அங்கு ஒரு வேலை இருக்கிறது" என்று மட்டும் கூறினார் விஜயேந்திர பிதாரி.

எதற்காக திடீரென சென்னை அனுப்புகின்றனர் என டி.எஸ்.பி., இன்ஸ்பெக்டர் இருவரும் புரியாமல் நின்றனர். பின்னர் இருவரும் பொலிஸ் ஜீப்பில் சென்னை புறப்பட்டுச் சென்றனர்.

காலையில் சென்னை சென்றடைந்த போது டி.எஸ்.பி.யிடம் பேசிய மதுரை எஸ்.பி., "மதுவாயிலில் சீமானை அவரது வீட்டில் வைத்து கைது செய்து மேலூர் அழைத்துவாருங்கள" எனக் கூறியதோடு, சீமானின் வீட்டு முகவரியையும் எஸ்.பி.யே கூறினார். மதுரவாயல் அஷ்டலட்சுமி நகரில் இருந்த சீமானின் வீட்டுக்குச் சென்ற பொலிசார் அவரை அழைத்து, கைதுசெய்ய வந்திருப்பதாகக் கூறினர்.

"எந்த வழக்கில் கைது செய்துள்ள வந்தீர்கள்?" எனக் கேட்டபோது, டோல் கேட் ஊழியரைத் தாக்கிய வழக்கில் என்று டி.எஸ்.பி. பதில் கூறினார்.

தகவலறிந்த நாம் தமிழர் கட்சியினர் சீமானின் வீட்டின் முன் திரண்டு கைது செய்ய எதிர்ப்புத் தெரிவித்தனர். சுமார் ஒரு மணிநேரம் நடந்த பேச்சுவார்த்தைக்கு பின், சீமானை பொலிசார் கைது செய்து, வேனில் ஏற்றிக்கொண்டு மதுரைக்குப் புறப்பட்டனர்.

மதுரைக்கு கொண்டு வரப்பட்ட சீமான் மீது கொலை முயற்சி உட்பட்ட 4 பிரிவு களில் மேலூர் பொலிசார் வழக்குப்பதிவு செய்தனர். சனிக்கிழமை இரவு 8.10 மணியளவில் சீமானை மதுரை மாஜிஸ் திரேட் முன் ஆஜர்படுத்தினர்.

ஜாமீனில் விடுவிக்கவேண்டும் என சீமான் தரப்பில் கோரியபோது, டோல்கேட் கண்காணிப்பாளரை அழைத்து அவரது புகார் குறித்து மாஜிஸ்திரேட் கேள்வி எழுப்பினார். ஒரிசாவைச் சேர்ந்தவர் என்பதால் எதற்கு வம்பு எனப் பயந்த கண்காணிப்பாளர் அஜய்குமார், "நான் யார்மீது புகார் ஏதும் கொடுக்கவில்லை. பொலிசார் என்னிடம் 2 வெள்ளைத்தாள் களை நீட்டி கையெழுத்துக்கேட்டனர். நான் கையெழுத்துப் போட்டேன். வேறு ஒன்றும் எனக்குத் தெரியாது" என்றார்.

இதையடுத்து சீமானை அவரது சொந்த ஜாமீனில் விடுவித்து மாஜிஸ் திரேட் உத்தரவிட்டார்.

அதேவேளை, சீமான் கைதை கண்டித்து மேலூர் பொலிஸ் ஸ்டேஷ னை நாம் தமிழர் கட்சியினர் சுமார் 100 பேர் முற்றுகையிட்டனர். பின்னர் சீமானை மதுரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த அழைத்துச் சென்றபோது, நாம் தமிழர் கட்சியினர் தமது காரில் கட்சி உபகரணங்களான உருட்டுக்கட்டை, அரிவாள், கற்களை எடுத்துக்கொண்டு சீமானின் காரை பின் தொடந்தனர்.

ஆனால், பிரச்சினை ஏதாவது உரு வாகலாம் எனக்கருதிய பொலிசார் கத்தப்பட்டி டோல்கேட்டுக்கு பொலிஸ் பாதுகாப்புப் போட்டிருந்தனர். மேலும், சீமானை மற்றொரு வழியாக மதுரை கொண்டு சென்றனர்.

இதற்கிடையே, கத்தப்பட்டி டோல் கேட்டை கடந்து சென்ற சீமான் கட்சி யினர் திடீரென உருட்டுக்கட்டை, கற் கள் என சரமாரி டோல்கேட் மீது வீசி தாக்குதல் நடத்தினர். இதில், கதிரை கள் உட்பட பல்வேறு பொருட்கள் நொறுங்கின.

இந்த சம்பவம் தொடர்பாக வீரத் தாக்குதலில் ஈடுபட்ட தம்பிகள் 7 பேரை பொலிசார் கைது செய்து சிறை யில் அடைத்தனர்.

மேலே குறிப்பிட்டதுதான், வார இறுதியில் நடந்த கதை.

ஆமா.. நாடாளுமன்ற தேர்தல் பிர சாரத்தின்போது, அ.தி.மு.க. அமைச்சர் களை விடவே ஒருபடி மேலாக மேடைக்கு மேடை அம்மாவை புகழ்ந்து தள்ளிக்கொண்டு இருந்த செந்தமிழன் சீமானை எதற்காக "உள்ளே தள்ள" உத்தரவிடவேண்டும்?

கராத்தே வீரர் ஹுசைனி புகாரின் பேரில் கைது செய்யப்பட்ட நடராஜன் 18ம் தேதி (வெள்ளிக்கிழமை) மாலை ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார். அன்று மாலை நடராஜனை இரகசிய இடத்தில் சீமான் சந்தித்ததாகத் தெரி- கிறது. இந்தத் தகவல் உளவுத்துறை மூலம் முதல்வர் ஜெயலலிதாவின் காதுகளுக்கு எட்டியது.

இதனால், ஆத்திரமடைந்த ஜெயலலிதா, சீமானை கைது செய்யுமாறு டிஜிபிக்கு உத்தரவிட்டதாக சொல்கிறார்கள். அதன் பேரிலேயே சனிக்கிழமை காலை சீமான் கைது செய்யப்பட்டுள்ளார்.

சீமான் கைது சம்பவம் அவருக்கு ஒரு முன்னெச்சரிக்கைதான் என உளவுத்துறை தரப்பில் கூறப்படுகிறது. தொடர்ந்து நடராஜனை சந்தித்தாலோ அல்லது 2016 சட்ட சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடப் போவதாக மீண்டும் அறிவித்தாலோ, ஏற்கெனவே விஜயலட்சுமி கொடுத்த புகார்களை முதல்வர் ஜெயலலிதா உத்தரவின் பேரில் பொலிசார் தூசு தட்டுவார்கள் என்கின்றனர்.

தனது அரசியல் எதிர்காலத்தை இனி சீமான்தான் முடிவு செய்ய வேண்டும்.

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

### காஸா மண்ணில்...

தனது பாதுகாப்புக்கு தேவை யான நடவடிக்கைகளை எடுப்பதற்கு இஸ்ரேலுக்கு உரிமை உள்ளது. காஸா வில் இருந்து தொடர்ந்து இஸ்ரேல்மீது ரொக்கெட்டுகள் வீசப்பட்டு வருவது கடும் கண்டனத்துக்குரியது. எனினும் இதற்கு இஸ்ரேலின் கடும் பதிலடியால் நாங்கள் கவலையடைந்துள்ளோம் என்றார்.

இதேபோல் இஸ்ரேலும் ஹமாஸ் தீவிரவாதிகளும் உடனடியாக போர் நிறுத்தம் செய்யவேண்டும் என்று எகிப்து நாடு மீண்டும் வலியுறுத்தி உள்ளது. இதுதொடர்பாக எகிப்து வெளியுறவு துறை அமைச்சர் சமேசுக்ரி செய்தியாளர்களிடம் கூறுகையில், இஸ்ரேலும் ஹமாஸ் இயக்கத்தினரும் உடனடியாக போர்நிறுத்தம் செய்ய வேண்டும். பேச்சுவார்த்தைக்கு இதுதான் ஒரே வழியாகும் என்றார்.

இவ்வாறு ஐ.நா முதல் பல்வேறு சர்வதேச நாடுகளும் மனித உரிமை அமைப்பக்கள் என்று சொல்லப் படுபவர்களும் காஸாப் பகுதியில் மக்களைக் கொன்றுகுவித்து வரும் பாரிய யுத்தம் நிறுத்தப்படவேண்டுமென ஒப்புக்குச் சொல்லிவருகின்றார்களே தவிர அதை நிறுத்துவது தொடர்பில் காத்திரமான நடவடிக்கைகள் எவையும் இதுவரை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

தற்போது காஸாப் பிரதேசத்தில் காணப்படுகின்ற நிலவரங்களைப் பார்க்கும்போது, 2009 ஆம் ஆண்டு வன்னியில் நடைபெற்ற இறுதி யுத்தம் தான் ஞாபகத்திற்கு வருகின்றது. நடைபெறுகின்ற அழிவுகள் அனைத்தையும் அறிந்திருந்தும் அதனைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளாது, ஐ.நா. போன்று வெறுமனே அறிக்கைகளை விட்டுக்கொண்டிருந்த ஐ.நா உட்பட்ட சர்வதேச அமைப்புக்கள் இப்போது காஸாவை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

**தலாய்லாமா மீது ஜாதிக ஹெல உறுமய சீற்றம்**

திபெத்தின் ஆன்மீகத் தலைவர் தலாய்லாமா வெளியிட்ட கருத்துகள் தொடர்பில் வருத்தமடைவதாக ஜாதிக ஹெல உறுமய கட்சி தெரிவித்துள்ளது.

இலங்கை மற்றும் மியன்மாரில் வாழும் முஸ்லிம் மக்களுக்கு எதிரான தாக்குதல்களை பௌத்தர்கள் நிறுத்திக் கொள்ளவேண்டும் என்று கடந்த 4ஆம் திகதி தலாய்லாமா கோரிக்கை விடுத்திருந்தார்.

தற்போதைய சூழ்நிலையில், இவ்வாறான கருத்துக்களினால் சர்வதேசத்திற்கு இலங்கை தொடர்பான அபிப்பிராயம் சீர்கெட்டுப் போகும் என ஹெல உறுமயவின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தலாய்லாமாவின் இந்தக் கருத்துத்தொடர்பில் பௌத்தத்தை நேசிக்கும் இலங்கையிலுள்ள பௌத்த அமைப்புக்களோ, அரசியல்வாதிகளோ எந்தவொரு தரப்பினரும் எதிர்ப்பு தெரிவிக்காமை வருத்தமளிப்பதாகவும் சோபித தேரர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை உலகில் அதிககாலம் பௌத்தத்தை பாதுகாத்த பர்மாவின்

இதேவேளை அமெரிக்கா ஏற்கனவே ஞானசார தேரருக்கு வழங்கிருந்த வீசாவை ரத்துச் செய்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது

அளுத்கம வன்முறைச் சம்பவங்கள் உக்கிரமடைந்தமைக்கு பொலிஸாரே காரணம் அளுத்கம வன்முறைச் சம்பவங்கள் உக்கிரமடைந்தமைக்கு பொலிஸாரே காரணம் என்று பாதிக்கப்பட்டவர்கள் இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவிற்குத் தெரிவித்துள்ளனர்.

அளுத்கம சம்பவங்கள் தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழவில் இது வரையில் 85 முறைப்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. இவர்களில் அதிகமானவர்கள் வன்முறைகளுக்கான பொறுப்பினை பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக் கோனே ஏற்றுக்கொள்ள வேண்டுமென தெரிவித்துள்ளனர்.

பொதுபலசேனா இயக்கத்தினால் மேற் கொள்ளப்பட்ட முஸ்லிம் விரோத போராட்டத்தை தடுத்துநிறுத்த பொலிஸ் மா அதிபர் நடவடிக்கை எடுக்கவில்லை என பாதிக்கப்பட்டவர்கள் குறிப்பிட்டுள்ளனர். போராட்டம் நடைபெற்ற பிரதேசத்தைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி திடீரென இடமாற்றம் செய்யப்பட்டதாகவும் அளுத்கம வாசிகள் குறிப்பிட்டுள்ளனர்.

பொதுபல சேனா நடத்திய போராட்டத்தை தடுத்திருந்தால்

பௌத்தர்களை தனிமைப்படுத்தும் செயலை அரசாங்கம் கச்சிதமாகச் செய்துவருகின்றது.

இன்று இந்நாட்டில் பௌத்தர்கள் தனியாகவும், இந்துக்கள் தனியாகவும் முஸ்லிம்கள் தனியாகவும் பிரிந்து நிற்கும் நிலை ஏற்பட்டுவிட்டது என்றும் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

தற்போது தமிழ், முஸ்லிம் மக்கள் பிரச்சினைகளால் அச்சமடைந்துள்ளனர். அவர்கள் தூர இருந்து என்ன நடை பெறுகின்றது என்று நோக்குகின்றனர். நமது நாடு எங்கே செல்கின்றது என்பதை வெளிநாட்டுத் தூதுவர்கள் அரசாங் கத்திற்கு எடுத்துக்கூறும் நிலை ஏற்பட்டுள்ளது. இது மிகவும் துரதிர்ஷ்ட வசமானது என்றாரவர்.

சிலர் செய்யும் நடவடிக்கைகளால் முழு பௌத்தர்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. அரசாங்கம் பௌத்த சமயத்தைப் பாதுகாப்பதாகக் கூறுகின்றது. ஆனால் கண்டியில் தலதா மாளிகைக்கு அருகில் கார் ஓட்டப்போட்டியை நடத்துகின்றது. இதனால் சர்வதேச நாடுகள் எம்மை கிண்டல் செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் இனங்கள் மத்தியில் நல்லிணக்கத்தையும் நல்லெண்ணத்தை யும் ஏற்படுத்துவதில் அக்கறை கொள்ள வில்லை. நாடு முன்னேற்றம் காண

துடன் அவர்களது பொருளாதாரம் முற்றாக நாசமாக்கப்பட்டது எனவும் ஜெமீல்

தனது உரையில் சுட்டிக்காட்டினார்.

ஆகையினால், சிங்களப் பேரின வாதிகள் மேற்கொண்ட இந்த இன சுத்திகரிப்பு நட்வடிக்கைகளை கிழக்கு மாகாண சபை வன்மையாக கண்டிப் பதுடன் அதுதொடர்பில் நீதியான விசாரணைகளை மேற்கொள்வதற்கும் அதன் சூத்திரதாரிகளை தண்டிப் பதற்கும் பாதிக்கப்பட்ட முஸ்லிம் களுக்கு இழப்பீடு வழங்குவதற்கும் எதிர்காலங்களில் இவ்வாறான இன வெறித் தாக்குதல்கள் இடம்பெறா வண்ணம் சட்டம், ஒழுங்கை நிலை நாட்டக் கோரியும் அரசாங்கத்தை வலியுறுத்தி எமது மாகாண சபை தீர்மானங்களை நிறைவேற்றவேண்டும் என மு.கா. குழுத் தலைவர் ஏ.எம். ஜெமீல் இதன்போது கேட்டுக் கொண்டார்.

நிறைவேற்றப்படும் இத்தீர்மானங் களை கிழக்கு மாகாண முதலமைச் சரும் தவிசாளரும் ஒப்பமிட்டு ஜனாதிபதி, பாதுகாப்பு செயலாளர் மற்றும் பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் அனுப்பி வைக்கவேண்டும் என்றும் ஏ.எம். ஜெமீல் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து ஆளும் தரப்பு மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர் கள் பலரும் உரையாற்றினர். இதன் போது காரசாரமான விவாதங்களும் இடம்பெற்றன. அன்றைய தினம் முற்பகல் 11.00 மணிக்கு ஆரம்பமான இப்பிரேரணை தொடர்பிலான விவாதம் மாலை 4.20 மணிவரை நீடித்தது.

இறுதியாக இக்கண்டனப் பிரேரணை வாக்கெடுப்பின்றி ஏகமனதாக நிறை



# பொதுபல சேனாவுக்கு அதிகாரம் அனுசரணையா?

தொடர் - 15

அஷ்வின்விராது தேரர், எதிர்காலத்திலும் அதனைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக இலங்கை மற்றும் பர்மிய பிக்குகள் அவருக்கு தலைமைத் துவத்தை வழங்கியுள்ளனர்.

நீங்கள் தேரவாத பௌத்தத்துக்கு உபதேசம் செய்யும் முன்னர் மேலைத் தேயர்களின் நடவடிக்கைகளைக் கட்டுப் படுத்தி சீனாவினுள் திபெத் மக்களை சிறப்பாக வாழவைப்பதற்கான ஒரு சூழலை உருவாக்குவதில் கவனம் செலுத்தினால்தான் மிகவும் நல்லது என தலாய்லாமாவுக்கு அறிவுரை வழங்கியுள்ளார் சோபித தேரர்.

பர்மாவில் முஸ்லிம்களுக்கெதிரான விஷக்கருத்துக்களை நேரடியாகவே பிரசாரம் செய்துவரும் பர்மாவின் (மியன்மார்) அஷ்வின் விராது தேரர் சமகாலத்தில் 'பயங்கரவாதத்தின் முகம்' என வர்ணிக்கப்படுகிறார்.

பௌத்தர்களல்லாத ஏனையவர் களைக் கொல்வது, அவர்களை விரட்டுவது, அவர்களது உடைமைகளைக் கைப்பற்றுவது, ஒட்டுமொத்தமாக அவர்களை முடிந்தளவு பழிவாங்குவது பாவச்செயலல்ல என்றும் பர்மிய நாட்டின் அஷ்வின் விராது தேரர் தன் சீடர்களுக்கு 'புண்ணிய உபதேசம்' புரிந்துவருகின்றார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**ஞானசாரருக்கு அவுஸ்திரேலியாவும் கதவடைப்பு**

பொதுபலசேனா தீவிரவாத அமைப்பின் செயலாளர் கலகொடத்தே ஞானசாரதேரரின் வீசா விண்ணபத்தை அவுஸ்திரேலியா நிராகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஞானசார தேரரின் வருகை அங்கு வாழும் சமூகங்களுக்கிடையில் பிரி வினையை ஏற்படுத்தக்கூடும் என்று அவுஸ்திரேலியாவில் உள்ள பௌத்தர் கள் பலரும் அச்சம் வெளியிட்டதாக தெரிவிக்கப்படுகின்ற பின்னணியில் ஞானசார தேரரின் வீசா விண்ணப் பத்தை இலங்கையிலுள்ள அவுஸ் திரேலிய தூதரகம் நிராகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான பாரிய அழிவுகளும் இனவெறுப்பும் ஏற்பட்டிருக்காது எனவும், வன்முறைகள் உக்கிர மடைவதற்கு பொலிஸாரும், விஷேட அதிரடிப்படையினருமே காரணம் எனவும் பாதிக்கப்பட்டவர்கள் மனித உரிமை ஆணைக்குழுவில் தெரிவித்துள்ளனர்.

பௌத்தர்களை இந்த அரசாங்கம் தனிமைப்படுத்திவிட்டது. ரணில் விக்கிரமசிங்க - பிரபாகரனால் செய்ய முடியாமல்போன, பௌத்தர்களைத் தனிமைப்படுத்தும் செயலை அரசாங்கம் செய்ய ஆரம்பித்துள்ளதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் கம்பளை தொகுதி ஆதரவாளர்களின் கூட்டம் கடந்த 19ஆம் திகதி கம்பளை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றபோது அவர் இதனை தெரிவித்தார்.

"இந்நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்த போது சகல இனங்களும் ஐக்கியமாக இருந்தன. அன்று பௌத்தர்களும் இந்துக்களும் முஸ்லிம்களும் கிறிஸ்தவர் களும் கைகோர்த்து நின்று சுதந்திரத் தைப் பெற்றுக்கொண்டனர். ஆனால் இன்றைய மஹிந்த அரசாங்கம் இனங்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்தி வருகின்றது என்று அவர் சாடினார்.

பௌத்தர்களை மற்றைய இனங்களில் இருந்து வேறுபடுத்தவும் தனிமைப் படுத்தவும் முடியாமல்போனதே எல்.ரீ.ரீ.ஈ தலைவர் பிரபாகரன் தோல்வி யடைய காரணமாக அமைந்தது என்று கூறிய ரணில் விக்கிரமசிங்க தனி ஈழம் கேட்டு புலிகள் போராடியபோது மலையகத் தமிழர்கள், கிழக்குத் தமிழர்கள், வடக்குத் தமிழர்கள், கத்தோலிக்கர்கள் மற்றும் முஸ்லிம்கள் என்று எவருமே அதனை ஆதரிக்கவில்லை. இவர்கள் நாடு பிளவுபடுவதை விரும்பவில்லை.

இதனால் 2009ஆம் ஆண்டு பிரபாகரன் தனது போராட்டத்தில் தோல்வியைத் தழுவும் நிலை ஏற்பட்டது. ஆனால் பிரபாகரனால் முடியாமல்போன சிங்கள

இனங்கள் ஒன்றுபடவேண்டும் என்பதைத் உணர்ந்து அன்று டி.எஸ்.சேனாநாயக்க சகல இனங்களையும் ஒற்றுமைப்படுத் தினார் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேலும் குறிப்பிட்டார்.

**கிழக்கு மாகாண சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றம்**

அளுத்கம, பேருவளை உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் ஜூலை 15 ஆம் திகதி கிழக்கு மாகாண சபை அமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட கண்டனப் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மாகாண சபை உறுப்பினரும் சபையின் முஸ்லிம் காங்கிரஸ் குழுத் தலைவருமான ஏ.எம். ஜெமீலினால் இந்த கண்டனப் பிரேரணையைச் சமர்ப்பித்திருந்தார்.

கிழக்கு மாகாண சபையின் மாதாந்த சபை அமர்வு தவிசாளர் ஆரியபதி கலப்பதி தலைமையில் ஆரம்பமானபோது வழமையான சபை நடவடிக்கைகளைத் தொடர்ந்து முதல் நிகழ்வாக இந்த கண்டனப் பிரேரணையை சமர்பிப்பதற்கு தவிசாளர் அழைப்புவிடுத்தார்.

இதனைத் தொடர்ந்து குறித்த கண்டனப் பிரேரணையை சமர்ப்பித்து ஜெமீல் உரையாற்றினார். அளுத்கம, பேருவளை முஸ்லிம்கள்மீது பொதுபல சேனா அமைப்பு திட்டமிட்டே தாக்குதல் களை மேற்கொண்டது எனவும் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை எனவும், இதனால் முஸ்லிம்களின் உயிர், உடைமைகள் அழிக்கப்பட்ட

வேற்றப்பட்டது. இப்பிரேரணை கடந்த மாதம் 17ஆம் திகதி இடம்பெற்ற கிழக்கு மாகாண சபையின் மாதாந்த அமர்வில் மு.கா. குழுத் தலைவர் ஏ.எம். ஜெமீலினால் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அதற்கு தவிசாளர் அனுமதி வழங்க மறுத்ததன் காரணமாக சபையில் பெரும் அமளிதுமளியும் குழப்பகரமான சூழ்நிலையும் ஏற்பட்டு - மு.கா. உறுப்பினர்களால் செங்கோலும் தூக்கிச் செல்லப்பட்டதைத் தொடர்ந்து சபை ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**400 பேரிடம் புலனாய்வு பொலிஸார் வாக்குமூலம் பதிவு**

அளுத்கம மற்றும், தர்காநகரில் ஜுன் 15ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் 10 பேர் உள்ளடங்கலாக 400 பேரிடம் புலனாய்வு பொலிஸார் வாக்கு மூலங்களை பெற்றுக் கொண்டுள்ளனர்.

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடத்தே ஞானசார தேரர் மற்றும் முஸ்லிம் மதத்தலைவர்கள், கிராமசேவையாளர், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் உட்பட பலரிடமும் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன.

இன்னும் சுமார் 100 பேரிடம் வாக்குமூலங்களை பெறவுள்ளதுடன் அவற்றைச் சட்டமா அதிபருக்கு அனுப்பி, அவரிடமிருந்து ஆலோசனை களைப் பெற்றுக்கொள்ள நட்வடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(தொடரும்)

# அடக்க இயலாத சிறுநீர் தொல்லையா?

இலட்சக்கணக்கான பெண்கள் பல சமயங்களில் சிறுநீர் வருவதை அடக்க முடியாமையால் அவதிப்படுகிறார்கள். வயதானவர்களில், மூன்றில் ஒருவர் இந்த சிறுநீர் தொல்லையால் பாதிக்கப் படுகின்றனர். சில பெண்களுக்கு, தும் பினாலே சிறுநீர் கசியும். சிரித்தால் சிறுநீர் சிந்தும். அடக்கமுடியாமல் பெருமளவில் சிறுநீர் போகும். குளிர்காலத்தில் இந்த உபாதை அதிகமாகும். சமூகத்தில், பொது இடங்களில், சிறுநீர் வருவதை அடக்க முடியாமல் போனால், தர்மசங்கடமான நிலைமையால் பெண்கள் தவிப்பார்கள். மனரீதியான பாதிப்புகள் உண்டாகும். வெளியே போவதற்கே அஞ்சுவார்கள். நிம்மதியாக சமூக செயற் பாடுகளில் ஈடுபடமுடியாது. மனச்சோர்வு ஏற்படும்.

பெரும்பாலான பெண்கள் டாக்டர் உதவியை நாடுவதில்லை. ஆண்களை விட பெண்கள் இரு மடங்கு அதிகமாக பாதிப்படைகின்றனர். சிறுநீர் கட்டுப்பாடின் மையை கவனிக்காமல்விட்டால் பல சிக்கல்கள் ஏற்படும். சிறுநீரகம், சிறுநீர்ப்பை தொற்றுகள் ஏற்படலாம். உடலில் சினப்புகள், கட்டிகள் உண்டாகலாம். சிறுநீர் தோலுக்கு எரிச்சலை உண்டாக்கும்.

**சிறுநீரை கட்டுப்படுத்தல்**

சிறுநீரகம் உற்பத்தி செய்யும் சிறுநீர், இரண்டு குழாய்கள் மூலம் சிறுநீர் பையை வந்தடையும். சிறுநீர்ப்பை சிறுநீரை சேமித்து வைக்கிறது. சிறுநீர் பையின் கழுத்து, ஒரு சுருக்குப்பை போன்ற தசையால், மூடவும், திறக்கவும், முடியும். சிறுநீர்ப்பை நிரம்பியதும், நரம்புகள்மூலம் தண்டுவடத்திற்கு செய்தி செல்லும். மூளை உடனே சிறுநீர் கழிக்கவேண்டிய உந்துதலை உண்டாக்கும். சந்தர்ப்ப சூழ்நிலையை பொறுத்து சிறுநீர் உடனே கழிப்பது அல்லது சிறிதுநேரம் அடக்கிக்கொள்வது நடக்கும்.



சிறுநீர் உடனே கழித்தால் பையின் கழுத்து தசை விரிந்து சிறுநீரை சிறுநீர் தாரை வழியே வெளியேற்றும் சிறுநீர் பையின் தசைகளும் சுருங்கி, விரிந்து இதற்கு உதவும். இந்த செயற்பாடுக்காகவே சிறுநீர்ப்பை 'பலூன்' போன்று அமைக்கப் பட்டிருக்கிறது.

**சிறுநீர் கட்டுப்பாழன்மையின் காரணங்கள்**

வயது ஏற, ஏற, உடலில் பல மாற்றங்கள் நிகழ்கின்றன. சிறுநீர்ப்பையின் தசைகள் பலவீன மடைந்து, அதில் சேமிக்கப்படும் சிறுநீரின் அளவு குறையும். சிறு நீரை அடக்கிக் கொள்ளும் திறமை குறையும். சிறுநீர்ப்பையை முழுவதும் வெளியேறாமல், எப்போதும் சிறிதளவு சிறுநீர், பையில் தங்கிவிடும். பெண்களின் நீர்த்தாரை லைனிங் நலிவடையும். சிறுநீர்ப்பையில் எப்போதுமே தசை அசைவுகள் (மூளையிலிருந்து கட்டளை வந்தாலும், வரா விட்டாலும் நிகழ்ந்துகொண்டேயிருக்கும். இளவயதில் இந்த தசை அசைவுகளை, சிறுநீர் கழிக்கும் தேவை இல்லாதபோது, மூளை தடுத்துவைக்கும் வயதானால் இந்த தடுக்கும் தடவைகள் குறைந்துபோகும். எப்போதும் சிறுநீர் கழிக்கும் உணர்வு உண்டாகும். சிறு நீர்ப்பையின் கழுத்து தசைகள் சரிவர மூடிக் கொள்ளும் பலத்தை இழக்கும்.

வயதானதால் தோன்றும் மாற்றங்கள் தனியாக பாதிப்புகளை உண்டாக்காது அவை ஏற்படுவதற்கு துணை போவது சில மருத்துவ பாதிப்புகளாகும். பக்கவாதம், கர்ப்பப்பை நீக்கம், இடுப்பெலும்பு முறிவுகள், இதர அறுவை சிகிச்சைகள், நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம் இவைகளும் சிறுநீர் கட்டுப்பாடின்மையை தோற்றுவிக்கும்.

அதிகமான குழந்தைகள் பெற்றுக் கொள்வதால் வரும் பாதிப்புகள், மெனோபாஸ், புகைப்பிடிப்பது, அதீத உடல் எடை, பருமன், மலச்சிக்கல், சிறுநீர்ப்பையை பாதிக்கும் தொற்று நோய்கள், மற்றும் பிறப்புறுப்புகளின் ஏற்படும் தொற்று.

**சிறுநீர் கட்டுபாழன்மைக்கு காரணமாகும் சில மருந்துகள்**

டிப்ரெஷனுக்கு கொடுக்கப்படும் மருந்துகள், மனோ வியாதிக்கான மருந்துகள், சிறுநீர் பெருக்கிகள், மனதை சாந்தப்படுத்தும் மருந்துகள் ஒவ்வாமை மருந்துகள் முதலியன.

**சில சிகிச்சை முறைகள்**


சிறுநீர்பையின் செயற்பாடுகளை நோயாளிக்கு சொல்லித் தரவேண்டும். இரண்டு (அ) மூன்று மணி நேரத்திற்கு ஒரு முறை சிறுநீர் கழித்து சிறுநீர்ப் பையை கூடிய மட்டும் காலியாக வைத்திருக்க முயற்சி செய்யும். இதை செய்வதினால் அடக்கமுடியாத நீர்க்கசிவு தொல்லையை தவிர்க்கலாம். வலுப்படுத்த கெகல் பயிற்சி அவசியம் செய்யவேண்டும். இதை சுயமாக செய் வதைவிட டாக்டரிடம் கேட்டுத்தெரிந்து கொண்டு செய்யவும். இருமினாலே ஏற்படும் கட்டுப்பாடு இல்லாத சிறுநீர்க் கசிவுக்கு கெகல் பயிற்சி சிறந்தது.

அழுத்த நீர்க்கசிவுக்கும் கெகல் பயிற்சி செய்வது நல்லது. ஈஸ்ட்ரோஜன் (பெண் ஹோர்மோன்) கிரீம் ஆக (அ) மாத்திரையாக கொடுக்கப்படும். சுருக்கமாக சொன்னால் எனப்படும் சிறுநீர்ப் பைக்கான பயிற்சி முறைகளை கடைப் பிடிக்க வேண்டும். இந்த பயிற்சிகளின் சாராம்சம்..

சிறுநீர்ப்பை, அதன் செயற்பாடுகள், பாதிப்புகள் இவற்றை பற்றி தெரிந்து கொள்வது. குறிப்பிட்ட நேரத்தில் சிறுநீர் கழிப்பதை கடைப்பிடிக்க வேண்டும். இதை நோயாளிகள் பழக்கத்தில் கொண்டு வரவேண்டும். போகப்போக, சிறுநீர் கழிக்காத இடைவெளியை அதிகமாக்கிக் கொண்டே போகவேண்டும்.

# எட்டு வடிவ நடைப்பயிற்சி

## செய்யும்முறை!




எட்டு எட்டா மனுஷ வாழ்வை பிரிச்சுக்கோ....
நீ எந்த எட்டில் இப்ப இருக்க நெனச்சுக்கோ.

எளியமுறையில் பிரமிக்கத்தக்க ஆரோக்கியம் பெறும்முறை இது. தினமும் 15 முதல் 30 நிமிடம் வரை ஒன்று அல்லது இரண்டுவேளை செய்தால் போதும்.

ஒரு அறையில் அல்லது வெட்டவெளியில் கிழக்கு மேற்காக 10 அடி விட்டு கோடு வரைந்து அதற்குள் எட்டு வடிவில் நடைப்பயிற்சி செய்யவேண்டும். இப் பயிற்சியை தெற்கிலிருந்து வடக்குநோக்கி அல்லது வடக்கிலிருந்து தெற்குநோக்கி செய்யவேண்டும். 15 நிமிட முடிவில் இருநாசித்து வாரங்களின்மூலம் உள்ளிழுக்கப்பட்ட முழு மூச்சுக்காற்றையும் உணரலாம்.

**பயன்கள் பல...**

இளமையாக இருக்கலாம்.
நீரிழிவு குறையும்.
தலைவலி, மலச்சிக்கல் தீரும்.
சளியிலிருந்து விடுதலை.
கண்பார்வை அதிகரிக்கும்.
செவிகள் நன்றாக கேட்கும்.
இரத்த அழுத்தம் குறையும். இன்னும் நிறைய இருக்கிறது. இனி பாட்டே பாடலாம்.


தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு

தினமுரசு

நாளிதழ்

ரூ.10/= மட்டுமே

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"

வடபுலத்தான் எழுதும் நாட்டு நடப்பு குறிப்புகளும் விமர்சனங்களும்

வடபுலத்தான் எழுதுவது...

வாரமொரு சிறுகதை

# தாயின் மனசு

பாவலர் மலரடியான்

"கமலா, என்னம்மா அப்படியே ஸ்தம்பிச்சுட்டே?" கேட்டுக்கொண்டே வந்தார் அருணாசலம். அவர் குரல் அதட்டல் கமலாவை சுயநிலைக்கு மீட்டு வந்தது.

அவர் மீண்டும் தணிவாய், "கமலா, இப்படியே நின்னுட்டிருந்தா எப்படிம்மா? போம்மா. போய் உள்ள ஆக வேண்டியதைக் கவனிக்கவேண்டாமா?" என்றார்.

ஆகவேண்டியது என்று இனிமேல் அவளுக்கு ஒன்று உண்டா? அதுதான் நேற்று அமர்க்களமாய் நடந்து முடிந்துவிட்டதே. பெரியவர் அருணாசலம் கைத்தடியை அழுந்த ஊன்றிக்கொண்டு மற்றொரு கையால் மூக்குக் கண்ணாடியை கொஞ்சம் உயர்த்தி வண்டிப் பாதையைப் பார்க்கிறார். புழுதியைக் கிளப்பிக் கொண்டு ஒரு பெட்டி வண்டி அந்தப் பாதையில் வெகுதூரம் சென்று விட்டிருந்தது.

கமலாவும்கூட தன் சிந்தனையில் வெகுதூரம் போயிருந்தாள்.

"அம்மா, ஏம்மா இவ்வளவு நேரம் முழிச்சிட்டிருந்தே? நான் சொல்லிட்டுத்தானே போனேன். ஒபீஸ்ல நிறைய வேலைன்னு. நீ எடுத்து வச்சுட்டுப் படுத்திட்டா நான் சாப்பிட்டுக்க மாட்டேனா?"

"ஐயையோ! என்னம்மா இது, இப்படிச் சுடறதே உன் உடம்பு! கொடுத்த மருந்த ஒழுங்கா சாப்பிட்டியா?"

"இங்கே பார்த்தியாம்மா, இதிலே என்ன இருக்குன்னு சொல்லேன் பார்க்கலாம். நாளைக்கு என் பிறந்த நாளில்லை? அதான் மம்மிக்கு என்னோட கிப்ட்! வெங்காயச் சருகு நிறத்துல பட்டுச்சேலை!"

இப்படியெல்லாம் அவளை - கமலாவை இனி யார் கேட்கப் போகிறார்கள்? இனி யாருக்குத்தான் அவள் வாசற்படியிலே உட்கார்ந்து உட்கார்ந்து இடுப்பு ஒடிய காத்துக் கிடக்கப் போகிறாள்?

கண்களில் நீர் வழிய பாதையைப் பார்த்தபடி அப்படியே அசையாமல் நின்றிருந்தாள் - கமலா. பெட்டி வண்டி பார்வையிலிருந்து ஓடி மறைகிறது. "ஜல் ஜல்" என்ற அதன் சலங்கை சப்தம் அவள் காதைச் சுற்றி ஒலிப்பதுபோல ஒரு பிரமை.

எதிரே நின்ற பெரியவர் அருணாசலத்துக்கும் இந்தத் துக்கத்தில் பங்கு உண்டு. பக்கத்து வீட்டுக்காரரும் ரிட்டயர்டு தலைமை ஆசிரியருமான அவர், கமலாவின் மகள் பவானிக்கு ஆசிரியராக இருந்தவர். அவரையும் அவள் பிரிவு அலைக்கழித்தது.

ஒரு பெண்ணுக்கு வாய்க்கிற வாழ்வும் வாத்சல்யமும் புகுந்த வீட்டுக்குத்தான் சொந்தம்னு யாருக்குத் தெரியாது? இன்றைக்கு வண்டிப் பாதையைப் பார்த்து கண்கலங்கி நிற்கும் இதே கமலா, இதேபோல ஒருநாள் தன் தாயைக் கலங்கவைத்துவிட்டு புகுந்த வீட்டுக்குப் பயணப்பட்டவள்தானே?

பெரியவர் அருணாசலம் கைத்தடியை ஊன்றிக்கொண்டே ஏதோ மெல்ல முணுமுணுத்தபடி போய்விட்டார்.

பன்னிரெண்டு வயதில் தந்தையை இழந்தவள் பவானி. அவளுக்கு தாயோடு தந்தையாகவும் இருந்து குறையில்லாமல் வளர்த்தவள் இந்தக் கமலா.

பவானியை உயர் படிப்புக்கு அனுப்ப வேண்டும் என்பது அவள் தந்தையின் ஆசை. அவர் இன்று இல்லை. ஆனால், அவர் கொண்ட ஆசை நிராசையாகிவிடவில்லை.

கமலா பவானியை பல்கலைக்கழத்துக்கு அனுப்பினாள். இதில் கமலாவுக்கு ஒரு நம்பக்கை இருந்தது. கூடவே ஓர் அச்சமும் தொடர்ந்தது. வயது கால உணர்வுகள் தன் மகளை எந்தவிதத்திலாவது தடம் புரட்டி விடுமோ என்ற பயம்தான் அது. ஆணின் அரவணைப்பை இழந்து தனித்த அவள் வாழ்க்கையில் இத்தகைய பயம்கூட நியாயம்தான். மூன்றாண்டு பட்டப்படிப்பு முடிந்தது. அந்தமட்டில் பவானிக்கு ஒரு வேலை கிடைத்தால் குடும்பத்துக்கு பாரம் குறையுமே என்று நினைத்தாள். ஒரு தொழிற்சாலையின் நிர்வாகப் பிரிவில் பவானிக்கு வேலையும்



கிடைத்துவிட்டது. அதன்பிறகு அவளுக்கு நல்ல ஒரு வரனாகப் பார்த்து. ஒரு குறையும் இல்லாமல் கல்யாணத்தை நடத்திவிட வேண்டுமே என அடுத்த சிந்தனைக்குத் தாவியது கமலாவின் உள்ளம்.

உறவில் ஒரு நல்ல மாப்பிள்ளையாகப் பார்த்து இதோ அவனோடு கல்யாணச் காட்சிகள் முடிந்து அனுப்பி வைத்துவிட்டாள்.

திரும்பி வீட்டுக்குள் வந்தாள். ஏதோ ஓர் இனந்தெரியாத அமைதி வீட்டில் அழுந்திக் கிடப்பதாக அவளுக்குத் தோன்றியது. பழக்கமில்லாத ஒரு புதிய வீட்டுக்குள் நுழைவதுபோல் இருந்தது கமலாவுக்கு. உள்ளே வந்தாள்.

"மியாவ்!"

கமலா மேலே உத்திரத்தை நிமிர்ந்து பார்க்கிறாள்.

"பவானியா? அவள்தான் புருசன் வீட்டுக்குப் போயிட்டாளே! இனி நான்தான் உனக்குப் பவானி".

அந்தப் பூனைக்கு அவள் உள்ளம் பதில் சொல்கிறது.

பெட்டி படுக்கை - காலையில் பவானி துலக்கி வைத்த பாத்திரங்கள் அவள் நின்ற இடம் உட்கார்ந்திருந்த இடம் என்று வீடு முழுவதையும் பரக்க விழித்துக்கொண்டு புதுமையாய் பார்த்தாள் கமலா. அவள் உள்ளம் ஏங்கித் தணிந்தது.

உள்ளே கூடத்தில் உட்கார்ந்து தூணில் சாய்ந்தாள். என்றைக்காவது ஒருநாள் பெண் பிறந்த வீட்டுக்கு அன்னியம்தானே என்று எண்ணிச் சமாதானப்பட முடியவில்லை. தன்னை நினைத்தாள். இறந்துபோன தன் கணவனை நினைத்தாள். அவரோடு புதிதாய் இந்த வீட்டில் வாழ வந்த நாட்களை நினைத்தாள். எங்கோ முடங்கிக் கிடந்த கனவோ, அந்தக் காலத்து நினைவுகளெல்லாம் மளமளவென அவள் மனதில் மடல் விரித்தன மலரும் நினைவாக.

"கமலா, கமலா!" "சத்தமாய்க் குரல் கொடுத்துக்கொண்டே வந்தாள் பர்வதம்மாள்" கமலாவின் தாய்.

எதிர்பாராமல் இவ்வளவு காலையில் தாயின் குரலைக் கேட்டதும் திடுக்கிட்டுவிட்டாள் கமலா.

"அடடே! அம்மா என்னம்மா இத்தனைக் காலையில புறப்பட்டு வந்திருக்கியே, என்னம்மா விஷயம்?" என்று கேட்டுக்கொண்டே கமலா வெளியே வரவில்லை. அதற்குள் பர்வதம் தன் இடுப்பில் வைத்துக் கொண்டுவந்த துணி முடிச்சை பொத்தென போட்டுவிட்டு ஓடிவந்து மகளைக் கட்டிக்கொண்டாள்.

"ஒண்ணுமில்லேடி கமலா. பாழும் மனசு கேக்கலை. எப்படி இருக்கேன்னு பாத்துட்டுப் போகலாம்னுதான் வந்தேன். நல்லா இருக்கியாம்மா?" என்றாள் பர்வதம்.

கமலா எதுவும் பேசவில்லை. அவளுக்கு சிரிப்புத்தான் வந்தது. கமலா புகுந்த வீட்டுக்கு வந்து ஐந்தே நாள்தான் ஆகிறது. "அதற்குள் யாராவது இப்படி நலம் விசாரிக்க பதறி அடிச்சிட்டு ஓடி வருவாங்களா? நீ நல்ல பைத்தியம் அம்மா?" என்று வாய்விட்டுச் சிரித்தாள் கமலா. இந்த சப்தத்தைக் கேட்டு கமலாவின் புருஷனும் மாமியாரும் உள்ளிருந்து வந்துவிட்டார்கள்.

"துணி முடிச்சுக்குள் பர்வதம்மாள் கொண்டு வந்ததெல்லாம் கமலாவினால், பின்னி முடியாமல் இருந்த ஸ்வெட்டர் ஒன்று, ஊசி, நூலுருண்டை, அவளுக்குப் பிடித்த நெய் முறுக்கு"!

அந்தப் பாசத்தின் நெகிழ்வை அப்போது கமலாவால் [illegible] முடியவில்லை. "இதுக்க.. அம்மா, இப்படி மாத்தி உடுத்திக்காமக்கூட அலங்கமலங்க வந்தே?" என்றுதான் கேட்டாள்.

இப்போது கமலாவின் இமைகள் கண்ணீரை ஒற்றிக் கொள்கின்றன. நேற்று நடந்தது இன்றைக்கு. இன்று நடப்பது நாளை தன் மகளுக்கு. காலம் ஒரே மாதிரிதானே சுழன்று கொண்டிருக்கிறது. இதில் மாறுதல் ஏது? மனிதர்கள்தானே மாறுகிறார்கள். உறவுகளா மாறுகிறது? புதுமை. புரட்சி என்பதெல்லாம் இந்த ஆத்ம சலனங்களுக்கு அப்பால் எங்கோ நிகழ்ந்து எங்கேயோ பேசப்படுகிற விஷயங்களோ?

"ம்மா!" என்ற குரல் அவளை அந்தச் சிந்தனையிலிருந்து தட்டி எழுப்பியது. மேய்ச்சலுக்குச் சென்று திரும்பிய பசுவின் குரல் அவளைத் தோட்டத்திற்கு அழைத்தது. திடுக்கிட்டதுபோல் எழுந்த கமலா அதே வேகத்தில் போய் அதன் கன்றையும் அவிழ்த்துவிட்டாள். தவிட்டு தொட்டியின் அருகில் கொண்டுபோய் விட்டு கிளறிவிட்டாள்.

அவளின் பிரியத்துக்குரிய அந்த வெள்ளைப் பசு செல்லமாகத் தலையைக் குலுக்கிக் கொண்டது. தவிட்டைக் கிளறிவிட்ட கமலாவின் கைகளை பசுவின் சொரசொரப்பான நாக்கு நீவிவிட்டது. அதில் அவளுக்கு இப்போது அசூசையாக இல்லை" இதமாக இருந்தது.



"தலைவர் அந்தப் பேச்சாளர் மீது கோபமா இருக்காரே. ஏன்...?"
"பாராட்டு விழாவிலே தலைவரை 'மானமிகு' அமைச்சரேன்னு சொல்றதுக்கு பதிலா 'வருமானமிகு' அமைச்சரேன்னு சொல்லி விட்டாராம்"



"உடம்பு இளைக்கிறதுக்காக நாளையிலேர்ந்து 'ஜிம்' முக்குப் போகப் போறேன்!"
"வேணாம்டீ! ரொம்ப விலையுள்ள மெட்டீரியல்ஸ் எல்லாம் வெச்சிருப்பாங்க. உடைஞ்சா தெண்டம் கட்ட முடியாது!"

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

# குறிவைக்கப்படும்...

"காரியம் முடிந்ததும்" அந்த ஆள் சுலபமாக எல்லையை கடந்து, மறுபக்கம் போய்விடலாம் அல்லவா?

அதைவிட, மலேசியா விமானத்தை சுட்டுவீழ்த்தியது யார் என்ற கேள்விக்கான பதில், எந்த வகை ஏவுகணை உபயோகிக்கப்பட்டது என்பதில் உள்ளது. இந்த விமானம் பக் (BUK) மிசைல் சிஸ்டம் ஒன்றால் ஏவப்பட்ட ஏவுகணை ஒன்றால் அடித்து வீழ்த்தப்பட்டது என்றே தற்போது வரையுள்ள தகவல்களின் அடிப்படையிலான ஊகமாகும்.

இந்த விமானத்தை உக்ரேனில் உள்ள ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் வீழ்த்தியிருக்கலாம் எனக் கூறப்படுவதற்கு மறுப்பு தெரிவித்துள்ள கிளர்ச்சியாளர்களின் செய்தித் தொடர்பாளர் ஒருவர், "எம்மிடம் உள்ளவை MANPAD ரக ஏவுகணைகளே. அவற்றை வைத்து மலேசியா ஏர்லைன்ஸ் விமானத்தை சுட்டுவீழ்த்த முடியாது" என்று தெரிவித்துள்ளார். அதிலும் உண்மை உள்ளது.

இவர் குறிப்பிடும் MANPAD என்பதன் விரிவாக்கம், Man-Portable Air-Defense systems. இவை பெரும்பாலும் தோளில் வைத்து ஏவும் ரகத்திலானவை. இவற்றில் இருந்து ஏவப்படும் ஏவுகணைகள் அதிக பட்சம் 13,000 அடி உயரம் வரைதான் செல்லக்கூடியவை.

மலேசியா ஏர்லைன்ஸ் விமானத்தை ஏவுகணை தாக்கியபோது, விமானம் 33,000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்தது. நிச்சயமாக MANPAD ரக ஏவுகணைகளை வைத்து சுட்டு வீழ்த்தியிருக்க முடியவே முடியாது.

உக்ரேனில் உள்ள கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுத உதவிசெய்வது ரஷ்யாதான் என்பது நிஜம். ஆனால், இவர்களது கைகளில் BUK ஏவுகணை சிஸ்டம் ஒன்றை கொடுத்திருப்பார்கள் என நம்புவது கடினமானது. அநேகமாக கொடுத்திருக்கமாட்டார்கள்.

காரணம், இந்த கிளர்ச்சியாளர்கள் அவ்வப்போது உக்ரேன் இராணுவத்திடம் தோற்று பின்வாங்குகிறார்கள். அப்படியான ஒரு நிலையில் பெரிய ஏவுகணை உக்ரேன் இராணுவத்தின் கைகளில் சிக்கிவிடும் என்பது ரஷ்யாவுக்கு தெரியும். எனவே, BUK ஏவுகணை ஒன்றை அநேகமாக கொடுத்திருக்கமாட்டார்கள்.

கிளர்ச்சியாளர்களும், ரஷ்யாவும் குற்றஞ்சாட்டுவதுபோன்று உக்ரேனின் ஏவுகணை கைவரிசையை காட்டியிருக்குமோ என்ற கோணத்தில் பார்த்தால் உக்ரேனின் பாவனையில் BUK ஏவுகணை இல்லை என்பதை புலனாய்வாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர். உக்ரேனிடம் இருக்கின்ற ஏவுகணைகள் மூலம் 33,000 அடி உயரத்தில் பறக்கின்ற விமாங்களை தாக்கமுடியாது என்பது ஒருபுறமிருக்க, ரஷ்ய கிளர்ச்சியாளர்களுடன் யுத்தம் தொடங்கியதில் இருந்து இதுவரை உக்ரேன் படைகள் தரையில் இருந்து விமானத் தாக்குதல் எதனையும் மேற்கொள்ளவில்லை என்பதை புலனாய்வு தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

இந்நிலையில் யார் வீழ்த்தியிருந்தாலும், குறித்த யுத்தத்துடன் எந்தத் தொடர்பும் அற்ற மலேசியா ஏர்லைன்ஸ் விமானத்தை ஏன் வீழ்த்தியது என்பதற்கு தொழில்நுட்ப ரீதியான விடை ஒன்று தற்போது கிடைத்துள்ளது.

அதாவது, விமானத்தை வீழ்த்த பயன்படுத்தப்பட்ட SA-11 ஏவுகணையின் முழுமையான சிஸ்டமும் பயன்படுத்தாத காரணத்தாலேயே, விமானத்தை வீழ்த்தியவர்களால், அது இராணுவ விமானமா?, பயணிகள் விமானமா? என தெரிந்துகொள்ள முடியாதுபோனது எனத் இராணுவ விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த விளக்கத்தின்படி, விமானத்தை சுட்டுவீழ்த்திய SA-11 ஏவுகணை launcher, அதனுடன் இணைந்து இருக்கவேண்டிய சென்ட்ரல் ராடர் கொமான்ட் இல்லாது தனித்து இயக்கப்பட்டிருக்கலாம் என்கிறார்கள்.

இந்த ஏவுகணை சிஸ்டத்தில் சென்ட்ரல் ராடர் கொமான்ட் பொருத்தப்பட்டு, அதுவும் இயங்கினால்தான், இலக்கு வைக்கப்படும் விமானம் எந்த வகை விமானம் என்பதை தெரிந்துகொள்ள முடியும்.

அது இல்லாவிட்டால், சிறிய ராடரில் விமானத்தை குறிப்பதற்கு ஒரு சிறிய பச்சை வெளிச்சப் புள்ளி மட்டுமே தெரியும். அந்த புள்ளியை மட்டும் வைத்துக்கொண்டு விமானத்தின் உயரம் மட்டும் கணிக்கலாமே தவிர, விமானத்தின் வேகத்தையும் கணிக்கமுடியாது, என்ன ரக விமானம் என்பதையும் கணிக்கமுடியாது.

இந்த அடிப்படையில், இந்த ஏவுகணையை ஏவியவர்கள் அநேகமாக உக்ரேன் இராணுவத்தின் போக்குவரத்து விமானம் ஒன்றை தாக்குவதாக நினைத்துக்கொண்டு, மலேசியாவின் வர்த்தக விமானத்தை தாக்கிவிட்டார்கள் என்பதாக ஒரு கருத்து அமெரிக்க புலனாய்வாளர்களால் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு, பல்வேறு தரப்புக்களினாலும் ரஷ்யா மீதான சந்தேக கணைகள் தொடக்கப்படுகின்ற நிலையில், ரஷ்யாவும் தன் பங்குக்கு களத்தில் குதித்துள்ளது.

அதாவது, மலேசிய விமானம் சுட்டு வீழ்த்தப்படுவதற்கு முன் உக்ரேன் விமானப்படை போர் விமானம் ஒன்று அதற்கு அருகே பறந்து கொண்டிருந்தது என, ஆதாரங்களுடன் ரஷ்யா சார்பில் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

"மலேசிய விமானம் தனது வழமையான பாதையில் பறந்துகொண்டிருந்த நிலையில், திடீரென வடக்குநோக்கி நகர்ந்து பறக்கத் தொடங்கியது. அப்போது மலேசிய விமானத்துக்கு அருகே உக்ரேன் விமானப் படையின் SU-25 ரக் போர் விமானம் ஒன்றும் பறந்துகொண்டிருந்தது ராடரில் பதிவாகியுள்ளது.

உக்ரேன் விமானப்படையின் SU-25 ரக போர் விமானத்தில், மற்றொரு விமானத்தை சுட்டு வீழ்த்துவதற்கான air-to-air ஏவுகணைகள் இருந்தன.

மலேசிய விமானம் வடக்குநோக்கி திசை திருப்பப்பட்டதற்கு பதிவு உள்ளது. பதிவுகளின்படி ஆர்17, அதிகபட்சம் 14 கி.மீ. திசைமாறி வடக்கே சென்றுள்ளது. அதையடுத்து உக்ரேன் விமானப்படை விமானத்தின் உயரம் அதிகரிக்கப்பட்டது. மலேசிய விமானத்துக்கும், உக்ரேன் விமானப்படை விமானத்துக்கும் இடையிலான தூரம், 3 முதல் 5 வரை கி.மீ. ஆக இருந்தது.

ஒரு போர் விமானம், பயணிகள் விமானம் பறந்துகொண்டிருந்த அதே நேரத்தில், அதே வான் பகுதியில், அதே உயரத்தில் எதற்காக பறக்கவேண்டும்? இந்தக் கேள்விக்கான பதிலை தெரிந்து கொள்ள நாம் ஆர்வமாக உள்ளோம்" என்று ரஷ்ய அதிகாரிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இவர்கள் ராடர் பதிவுகள் பற்றியெல்லாம் பேசத் தொடங்கியிருப்பதால்,




ரஷ்ய ஆதரவு புரட்சியாளர்களினால் விமானத்தின் கறுப்புப்பெட்டி மலேசிய அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது.

அந்த வான் பகுதியில், வேறு ஏதோ விமானத்தின் நடமாட்டம் இருந்திருக்கலாம் போலத்தான் தோன்றுகிறது. இதை ஆதாரமாக வைத்து பந்தை எதிர்ப்பக்கம் அடித்து விடவேண்டும் என்பதில் ரஷ்யர்கள் குறியாக இருப்பதுபோல் தெரிகின்றது.

இந்நிலையில், விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டு 4 தினங்களின்பின் விமானத்தின் கறுப்புப்பெட்டி, மலேசிய அதிகாரிகளிடம் கொடுக்கப்பட்டுள்ளது. டொனெட்ஸ்க் நகரில் நடந்த இரவுநேர நிகழ்வு ஒன்றில், ரஷ்ய ஆதரவு கிளர்ச்சிப் படையால் டொனட்ஸ்க் மக்கள் குடியரசின் பிரதமர் என அறிவிக்கப்பட்டவரிடம் இருந்து, மலேசிய அதிகாரிகள் கறுப்புப்பெட்டியை பெற்றுக்கொண்டனர்.

கறுப்புப்பெட்டி கைமாறுவது தொடர்பாக மலேசியர்களுக்கும், ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே, சுமார் 12 மணிநேரமாக பேச்சுவார்த்தைகள் நடைபெற்றதாக தெரிகிறது. இந்த பேச்சுவார்த்தைகளில் என்ன பேசிக் கொண்டார்கள், என்ன உடன்பாடு ஏற்பட்டது என்பது, வெளியே சொல்லப்படவில்லை.

அதாவது, கறுப்புப்பெட்டியை மலேசிய அதிகாரிகளிடம் கொடுப்பதற்காக ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்களுக்கு ஏதாவது பொருளோ, உறுதிமொழியோ கொடுக்கப்பட்டதா என்பது மர்மமாக உள்ளது.

ஏதோ ஒரு 'கொடுக்கல்-வாங்கல்' இல்லையென்றால், 12 மணிநேரமாக ஏன் பேச்சுவார்த்தை நடக்கப்போகிறது?

நேற்றிரவு, டொனட்ஸ்க் நகரில் உள்ள அரசு பில்டிங் ஒன்றின் 11-வது மாடியில், துப்பாக்கி ஏந்திய காவலர்கள் சூழ நின்றிருந்த 'பிரதமர்' அலெக்சாண்டர் பொரோடாய், ஒரேஞ்சு நிறத்திலான கறுப்புப்பெட்டியை மலேசிய அதிகாரிகளிடம் வழங்கினார்.

வழங்குவதற்கு முன் சில வாக்கியங்களை பேசிய அவர், "மலேசிய விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டதற்கும், எமக்கும் (டொனட்ஸ்க் மக்கள் குடியரசு இயக்கம்) எந்த தொடர்பும் கிடையாது. விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டதற்கு காரணம், உக்ரேன் இராணுவம்தான்" என்றார்.

"மலேசிய விமானத்தை சுட்டு வீழ்த்துவதற்கு தேவையான தொழில்நுட்ப வசதிகளும் அவர்களிடம்தான் (உக்ரேன் இராணுவம்) உள்ளது. சுட்டு வீழ்த்துவதற்கான காரணமும் அவர்களுக்குத்தான் உள்ளது" என்றும் தெரிவித்தார் அவர்.

கறுப்புப்பெட்டியைப் பெற்றுக்கொண்ட மலேசியர்கள், தாம் அவற்றை பெற்றுக் கொண்டதாக ஒரு ஆவணத்தில் கையொப்பமிட்ட பின்னரே பெற்றுக் கொண்டார்கள். அதையடுத்து, அவர்கள் எவ்வளவு சீக்கிரம் மலேசியா திரும்ப முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் புறப்பட விரும்புவதாக தெரிவித்தார்கள்.

கறுப்புப்பெட்டியை ஆய்வுசெய்வதன் ஊடாக விமானத் தாக்குதல் தொடர்பான தகவல்கள், ஆதாரங்கள் என்பன வெளிவரக்கூடுமென இன்று உலகம் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது. அதன்படி கறுப்புப்பெட்டியில் இருந்து புலனாய்வாளர்கள் பெற்றுக்கொள்கின்ற தகவல்கள், குறித்த விமானத்தின் மீதான தாக்குதல் தொடர்பான மர்ம முடிச்சுக்கள் பலவற்றை அவிழ்ப்பதற்கு பயன்படக்கூடும்.

சிலவேளைகளில் அப்படியெதுவும் கறுப்புப்பெட்டியில் பதிவாகவில்லையென மலேசியத் தரப்புக்கள் அறிக்கை வெளியிடவும் கூடும். அந்த அறிக்கை உண்மையானதாகவும் இருக்கலாம். இல்லையேல், நாம் இக்கட்டுரையில் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் கறுப்புப் பெட்டி கைமாறுவதற்காக மேற்கொள்ளப்பட்ட 12 மணிநேர பேச்சுவார்த்தையின் பிரதிபலிப்பாகவும் இருக்கலாம். பொறுத்திருந்து பார்ப்போம்...!

இந்த இராஜதந்திர விளையாட்டு ஒருபுறமிருக்க, விழிபிதுங்கி நிற்பது என்னவோ மலேசிய ஏர்லைன்ஸ்தான். இப்போது அவர்களுக்கு அஷ்டமத்துச் சனியன் உச்சத்தில் சஞ்சரித்திருக்கின்றதுபோலும். தொடர்ச்சியாக இழப்புக்கள், இதனால் அவர்களுக்கு வருமானத்தில் ஏற்படப்போகிறது பேரிழப்பு.

இன்னும் கொஞ்சக் காலத்திற்கு பெயரைக் கேட்டாலே அலறியடித்துக் கொண்டு ஓடப்போகின்றார்கள் விமானப் பயணிகள்!

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# கேள்விக்குறியாகும்...

தமிழ் மக்களுடைய விளையாட்டு வீர வீராங்கனைகளின் எதிர்கால வாழ்வுக்கு சிங்களத் தலைமைகளோ, சிங்கள தேசியமோ சதி செய்யவில்லை. தமிழ் மக்களின் இரட்சகர்கள் எனக் கூறிக்கொள்ளும் வட மாகாண சபையின் கல்வி அமைச்சே இந்த சதிவேலையை செய்துள்ளது என்ற உண்மையை அறிந்துள்ளார்கள், உணர்ந்துள்ளார்கள்.

இதனால் மிகவும் கொதிப்படைத்துள்ளார்கள். யார் தமக்கு வாழ்வு தருவார்கள், எதிர்காலத்தை ஒளிபெறச் செய்வார்கள் என்று வடமாகாண தமிழ் மக்கள் நம்பினார்களோ அவர்களே தமது பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு குழிபறித்துள்ளதையிட்டு மிகவும் கலங்கிப் போயுள்ளார்கள்.

கடந்த காலங்களில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவாக இருந்தாலும் சரி, வடமாகாண ஆளுநர் பெரும்பான்மை இனத்தவராக இருந்தாலும் சரி விளையாட்டு வீர வீராங்கனைகளின் எதிர்கால நல வாழ்விற்கு என்றும் குழிபறிக்கவும் இல்லை. முட்டுக்கட்டை போட்டதும் இல்லையென விளையாட்டு வீர வீராங்கனைகளின் பெற்றோர்கள் பலரும் கூறியுள்ளார்கள்.

குறிப்பாக கல்வியியற் கல்லூரி ஆணையாளர்கூட ஒரு பெரும்பான்மை இனத்தவராக இருந்தும் வட மாகாண விளையாட்டு வீர வீராங்கனைகளின் உண்மைநிலை உணர்ந்து வடமாகாண கல்வி அமைச்சர், செயலாளர் மேலதிகமாக ஆட்களை வட மாகாணத்திற்கு தெரிவுசெய்யலாம் எனக் கடிதம் தந்தால் நாம் உங்களையும் இணைத்துக் கொள்ளமுடியும் எனக் கூறியுள்ளார்.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் இது சம்பந்தமாக வட மாகாண கல்வி அமைச்சர் செயலாளருடன் தொடர்பு கொண்ட போதிலும் தாம் நடவடிக்கை எடுப்பதற்காக கடிதம் எழுதுவதாகவும் கூறியுள்ளார்களே தவிர ஆக்கபூர்வமாக இதுவரை எதுவும் செய்யவில்லையென் பாதிக்கப்பட்ட வீர வீராங்கனைகள் தமது எதிர்காலம் கேள்விக்குறியான நிலையில் கண்ணீருடன் கூறியுள்ளார்கள்.

2017 ஆம் ஆண்டுக்கு வட மாகாணத்திற்கு ஒரேயொரு உடற்கல்வி ஆசிரியர்போதும் என அதனடிப்படையில் வட மாகாண கல்வி அமைச்சு தீர்மானத்துள்ளது என்பது பெரிய ஆச்சரியமான விடயமும் அபூர்வமான முடிவும் ஆகும்.

வடமாகாண கல்வி அமைச்சின் உப குழாம் கூடி இந்த முடிவை மேற்கொண்டார்களா? அல்லது கல்வி அமைச்சர் கண்மூடி இருக்க கல்வி அமைச்சின் அதிகாரிகள் இந்த அபூர்வ முடிவை மேற்கொண்டார்களா என்பது கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

இந்த இடத்தில் இன்னும் ஒரு விடயத்தையும் சுட்டிக்காட்ட வேண்டியதும் முக்கியமாகும்.

இறுதியாக நடந்த யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கல்வியியற் கல்லூரிகளுக்கான முதல் நிலை ஆசிரியர்கள் 2017 ஆம் ஆண்டுக்கான தெரிவு விடயத்தில் ஆரம்ப ஆசிரியர்கள் 11 பேர் உடற்கல்வி ஆசிரியர்கள் ஒருவர் தேவை என எந்த அடிப்படையில் அனுப்பினீர்கள் என பாராளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திரகுமார், சுரேஷ் பிரேமச்சந்திரன் கல்வி அமைச்சரிடம் கேள்வி எழுப்ப, கல்வி அமைச்சர் செயலாளரை பதில்கூற அழைக்க அவர் சபையில் பேந்தப் பேந்த விழிக்க பின்னர் அதனை உடனடியாக திருத்தி அனுப்பும்படி பெருந்தன்மையுடன் கூறிய விடயமே இந்த இடத்தில் நினைவுபடுத்தக் கூடியதாகும்.

என்னதான் இருந்தாலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரால் வசைபாடப்படுகின்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவோ அன்றி, வடமாகாண ஆளுனரோ செய்ய துணியாத ஒரு விடயத்தை தமிழ் இனத்தின் மீட்பர்கள் செய்து தமிழ் வீர வீராங்கனைகளின் எதிர்காலத்திற்கு, விளையாட்டுத்துறைக்கு செய்துள்ள மாபெரும் துரோகத்தை யாரிடம் சொல்லி அழுவது என்பது இறைவனுக்குத்தான் வெளிச்சம்.





# வசையும் இன்பம்

களமெங்கும் இரத்த வெள்ளம்
குளமொன்று மண்ணில் ஆச்சு
தலையெல்லாம்
மிதந்து செல்லும்
விலையில்லா உயிர்கள் போச்சு!

வீரமும் வசையும் கலந்து
தீரனாய் நின்றுரைத்தான்
களத்தினில் கட்டப்பொம்மன்.

வசையல்ல அதுதான் இசை
திசையெங்கும்
வீரம் பாய்ச்சும் - உரத்த தசை
கொண்ட படைக்கு இசை.

"புகழ்வதும் உண்டு பொம்மன்
இகழ்வதும் உண்டு பொம்மன்.
இரண்டுமே இசையாய் கேட்கும்
இரண்டிலும் எழுச்சிப்
பண் ஒலிக்கும்!"

களத்தினில் பட்ட அனுபவம்
துணைவியின் காதில்
கொட்டினான்
அவன் பெயர் நாச்சியப்பன்
யானைப் படைக்கு தலைவன்

போரினில் பட்ட புண்கள்
பூவிதழ் பட்டு ஆற
போரிலும் காணாத கணைகள்
பொன்னுடல் மீது கண்டு
தேனிலும் இனிய அமுதம்
நாவினால் கலந்து பெற்று
பூரித்த நாச்சியப்பன்
பூவினில் வண்டாய் ஆனான்.

மெத்த தித்திப்பு கலந்த இதழால்
மொத்த சுவையையும்
உவந்து தந்தாள்.

துப்புறச் சிவந்த வாயால்
செப்புற நனைந்தான் - கடலில்
குப்புறக் கவிழ்ந்தாற்போல
செப்புற மூழ்கிப் போனான்.
ஒப்புற அணைத்துக்கொண்டு -கள்ளி
செப்புற இரு கணையால்
மோத மார்பின்
இப்புறம் தைத்த கணைகள்
அப்புறம் வந்ததோ என்று
எண்ணித்தான்
பயந்து போனான்!

அவளும்தான் பயந்துபோனாள்
தன் கணை இரண்டும் மோதி
தன்னவன் மார்பு தாண்டி
போனதோ என்று எண்ணி
முதுகினை தடவிப் பார்த்தாள்.

தன்னவள் தேடல்கண்டு
காரணம் தன்னை அறிந்து
"தப்பினேன் கூர் கணைக்கு
தாக்கிய என் நெஞ்சம் வாழி"
என்றுதான் செப்பினானே!

கண்ணினில் தீயை காட்டி கள்ளியும்
முறைத்து நின்றாள். "உறைக்காத
கனிகள் உன்னில் முறைக்காதே
கண்ணே" என்றான்.
"இனிப்பாக பேசல் வேண்டாம்
பழிப்பாக பேசிவிட்டு!"

சொன்னவள் தேகம் நோகாது
மெல்லத்தான் நயமாய் தழுவி
கிண்ணமாம் இதழில் நழுவி
எண்ணம்போல் அமுதம் பருகி
கன்னத்தில் கன்னம் வைத்தான்.

மேனியில் கரங்கள் ஓட
மோகனம் மனதில் ஆட
காரணம் புரியா அச்சம்
தோரணம் ஆகி நிற்க
மோகத்தில் மூச்சு முட்டி
தேகத்தில் நெருப்பு மூள
தாகத்தில் தவித்த இதழ்கள்
வேகத்தில் துடித்து நிற்க - அவள்
கொடுத்ததில் பாதி அமுதம்
அவன் திருப்பித்தான்
கொடுத்தனனே!

தந்ததைத் திருப்பிக் கேட்டும்
பண்பில்லா இதழ்கள் கண்டேன்
என்றவன் கேலி செய்தான்.

நெருங்கிய கூடல் மயக்கம்
வழங்கிய உரிமையாலே
மயங்கிய பெண்ணாள் போடா
"நீ அரக்கன் பொல்லாத
துடுக்கன்" என்றாள்.

"திட்டடி நன்றாய் திட்டு
கொட்டடி வசையைக் கொட்டு"
சொன்னவன் ஓங்கி
நகைத்தான்.

வசைந்தவள் வியந்தாள்
படுகளத்திலும் திட்டவேண்டும்
பஞ்சணையிலும் திட்டவேண்டும்
இருகளத்திலும் உமக்கு
வசைதான் இசையோ அத்தான்?"

ஆம் என்று தலையசைத்தான்
ஏனென்ற காரணத்தை
விளக்கியும் உரைத்து
நின்றான்.

"போர்க்களம் மீதில்
வீரர்கள் வசையும்
பூங்குழந்தைகள்
வாயினால் வசையும்
பொன்நிகர் பெண்களின் மோக
வசையும் தேன் என இனித்து
செவியினில் பாயும் என்றான்
அவன் சொன்ன கருத்தை
தமிழ்மொழி இலக்கியம்
விவேக சிந்தாமணியும்
உரைக்குது பாரீர்;

"கதலி வீரர் களத்திடை
வையினும்
குதலை வாயில் குழவிகள்
வையினும்
மதன லீலையில்
மங்கையர் வையினும்
இதமுறச் செவிக்க இன்பம்
விளையுமே"

(கதலிவீரர் – படைத்தலைவர்,
குதலை – மழலை)




**சிந்தியா நாட்டில் இறையாண்மை யோடு வாழும் உரிமையைத்தான் அரசிடம் கேட்கிறாராமே சம்பந்தன் ஐயா?**

**எம்.சரவணன், மந்திகை.**

சம்மந்தரின் முரண்பட்ட கதைகளை விழுங்கிக் கொண்டு உணர்ச்சிப் பெருக்கில செடுல் ஏத்திறதை இனியாவது கைவிட்டுப் போடுங்கோ.

அவர் அமிர்தலிங்கத்தை புலிகள் சுடுகின்ற காலத்திலேயே தமிழீழக் கோரிக்கையை கைவிட்டிருந்தவராம் எண்டு சொன்னதாலை நல்லா மூக்குடைபட்டு இருக்கிறார்.

பிறகு லேட்டஸ்டா மோடி மௌனமாக இருக்கிறார், மகிந்தவுக்கு ஆப்பு அடிக்கப் போறார் எண்டார். ஆனால் மோடி அரசு மகிந்தவுக்கு முழு சப்போர்ட் எண்டு சொல்லிப் போட்டுது. ஆகவே சம்மந்தர் உண்மையைச் சொல்வதற்கும், ஊகித்துச் சொல்வதற்கும் பொருத்தமானவர் இல்லை. அவரை தமிழ் மக்களின்ர அரசியல் சுமை எண்டுதான் கூட்டமைப்புக்காரரே சொல்லினம்.

**சிந்தியா! சர்வதேசத்தை ஏமாற்ற அரசு மீண்டும் முயற்சிப்பதாக மாவை குற்றஞ்சாட்டுகிறாரே...?**

**எம்.நஸ்மியா, மட்டக்களப்பு.**

அதைச் சொல்லி இவர் தமிழ் மக்களை ஏமாற்றப் பார்க்கிறாரே?

**சிந்தியா! காஸாமீது இஸ்ரேல் தாக்குவதைப் இப்போது ஐ.நா பார்த்துக்கொண்டு இருக்கிறதே. பின்பு மனித உரிமைகள் அது, இது என்று ஒரு நாடக மேடையையே உருவாக்குமே...?**

**சி.ஜெயபிரதா, மன்னார்.**

இஸ்ரேல்மீது நவிப்பிள்ளை ஏதாவது வாய்திறந்தால் ஆபிரிக்கக் கண்டத்திலிருந்து, அமெரிக்காவிலுள்ள அவரது ஐ.நா. அலுவலகத்துக்கு வருவதற்கு அமெரிக்கா வீசா தடை விதித்துவிடும் என்பது நவிப் பிள்ளைக்குத் தெரியும். இலங்கையுடனான விளையாட்டைப் போல் அமெரிக்காவுடன் விளையாடமாட்டார்.

**சிந்தியா! தமிழ்க் கூட்டமைப்பை தடை செய்யவேண்டுமென இரு கட்சிகள் வலியுறுத்துகின்றனவே. இது சாத்தியப்படுமா?**

**இ.மாதவன், மாதகல்.**

தடைசெய்வதற்கு அப்படி ஒரு கட்சியே பதிவில் இல்லையே. கூட்டமைப்புமீது கடும்போக்கு சிங்களத் தரப்புகள் மட்டுமல்ல, தம்மை நம்பவைத்து ஏமாற்றியதாக தமிழ் மக்கள்கூட சட்டரீதியாக எதிர் நடவடிக்கை



எடுத்துவிடக்கூடாது என்பதற்காகத்தானே அதை பதிவுசெய்யாமல், பதியாத கட்சிக்கு, வாக்கெடுப்பு இல்லாத தலைவராக சம்மந்தன் இருக்கின்றார். இதைத்தான் பொலிரிக்ஸ் என்பார்கள்.

**சிந்தியா! மஞ்சப்பை படம் எப்படி இருக்கிறது?**

**கு.ராகுலன், பதுளை.**

படம் வெளியாகி பல வாரங்கள் ஆகி விட்டதே. ராஜாகவுகிரன் தாத்தாவாகவும், விமல் பேரனாகவும், நடித்திருக்கின்றார்கள். ராஜ்கிரனின் நடிப்பும், நகைச்சுவையும், திரைக்கதையும் பார்ப்பவர்களை கட்டிப் போட்டுவிடுகின்றது.

படத்தை துவக்கி வைக்கும் எஸ்.பி. பாலசுப்பிரமணியத்தின் பாடல் அற்புதம். குடும்பத்தோடு பார்க்கலாம். மஞ்சப்பை நெஞ்சத்தில் நிற்கிறது.

**சிந்தியா! பெண்கள் அரைகுறை அணிந்தால் கவர்ச்சி என்கிறார்களே. அப்படியெனில் ஆண்களுக்கு கவர்ச்சி இல்லையா?**

**ச.தாட்சாயினி, யாழ்ப்பாணம்.**

இருபாலாருக்குமே கவர்ச்சி உண்டு. அது வெளிப்படுவதிலும், வெளிப்படுத்தப்படுவதிலும் வேறுபாடுகள் உண்டு. பெண்கள் தமது கற்பு, பாதுகாப்பு என்பவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து முடிவுசெய்வதுதான் நல்லது. போட்டிக்கு இறங்கி நிலைமையை மோசமாக்கிவிடக்கூடாது.

**சிந்தியா! மலேசிய விமானத்தை உக்ரேன் விமானம் என நினைத்து சுட்டுவீழ்த்தியதாக ரஷ்ய ஆதரவுப் படை தீவிரவாதத் தலைவர் கூறுகிறாரே? இதை நியாயப்படுத்த முடியுமா?**

**எம்.சமீட், தர்ஹாநகர்.**

யார் தாக்கியிருந்தாலும் நியாயப்படுத்த முடியாது. அது குற்றமே.

**சிந்தியா! நல்ல நண்பர்கள் எனக்கு கிடைக்கின்றார்களே இல்லையே ?**

**எம்.தயா, நயினாதீவு.**

வாழ்க்கையில் நல்ல நண்பர்கள் கிடைக்கவில்லையே என்பது துயரம்தான்.

சிலவேளை கிடைத்தவர்களில் நல்ல நண்பரை அடையாளம் காணத் தவறியிருப்பீர்கள்.

**காதலுக்கும், கண்ணுக்கும் சம்பந்தம் உண்டா சிந்தியா?**

**பொ.சௌமியா, புத்தளம்.**

காதலுக்கு கண் இல்லை என்று கூறுவார்கள். காதலின் ஊடகமே கண்கள்தான். இப்படியிருக்க எப்படி சம்மந்தம் இல்லாமல் போகும்?

**சிந்தியா! இந்தியாவின் இங்கிலாந்துச் சுற்றுப் பயணம் எப்படி அமையப் போகின்றது?**

**வ.சர்மிலன், கோண்டாவில்.**

சர்மிலனின் கேள்வி சிந்தியாவின் கரத்தில் கிடைக்கும்போது இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானத்தில் 28 வருடங்களுக்குப் பின்னர் இந்திய அணி வரலாற்று டெஸ்ட் வெற்றி ஒன்றைப் பதிவு செய்திருக்கின்றது.

இளம் வீரர்களுடன் சென்ற இந்திய அணி திடமான தலைமைத்துவம், ஒரு வெற்றிக்கு அடித்தளமாக இருந்திருக்கிறது.

கடந்த காலங்களைப் போல் அன்றி தனியொருவரில் தங்கியிருக்காது இளம் வீரர்களின் கூட்டுப் பங்களிப்பு வெற்றியை உறுதிப்படுத்தியிருக்கிறது.

முரளி விஜய், ரகானே, குஜாரா போன்றவர்கள் எகிறிவரும் பந்துகளை சாமர்த்தியமாக விலத்திவிட்டு இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர்களை சோர்வடையச் செய்திருந்தனர்.

இறுதியாக ஜடேஜாவின் அதிரடியான ஆட்டம், இசாந் சர்மாவின் துல்லியமான பவுண்சர்கள் இந்தியாவிற்கு வெற்றியை அள்ளிக் கொடுத்திருக்கிறது.

இது ஒருபுறமிருக்க, எஞ்சிய உள்ள மூன்று போட்டிகளை இங்கிலாந்து வீரர்கள் எவ்வாறு முகங்கொடுக்கப் போகின்றார்கள் என்பதில் இருந்துதான் அலிஸ்ரர் குக்கின் எதிர்காலம் தங்கியுள்ளது.

# காதிலை பூ கந்தசாமி

"நான் சொல்வதெல்லாம் பொய் பொய்யைத் தவிர வேறொன்றுமில்லை!"

**வணக்கமுங்கோ!**

**போனவாரம் வடமாகாண முதலமைச்சருக்கு நடந்த அனுபவத்தை நினைக்கேக்க மனசுக்கு கொஞ்சம் கவலையாகத்தான் இருக்கு துங்கோ. அவரே முன்னாள் நீதியரசர், அவருக்கே ஒரு அரச அதிகாரி சட்டத்தை கற்பித்ததுதானுங்கோ அந்தக் கவலையான சம்பவம்.**

முதலமைச்சர் ஒரு அறிவுறுத்தலை விடுக்கும்போது, எவ்வளவு யோசிக்க வேணும். அது சட்டவலுவானதாக இருக்கின்றதா என்பதை ஆராய வேணும். அதையெல்லாம் செய்யாமல் மாகாணத்தின் பிரதம செயலாளரை நீங்கள் அப்புடிச் செய்யவேணும், சொல்லிப் போட்டுப் போகவேணும் எண்டெல்லாம் ஒரு சுற்றறிக்கையை வெளியிட்டவருங்கோ.

வேறை யாரும் எண்டால் முன்னாள நீதியரசர் சட்டத்தின்படிதான் செய்திருப்பார். நமக்கேன் வம்பு, அவர் சொல்லிறபடியே இருந்திட்டுப் போயிடுவோம் எண்டு பயந்து போயிருப்பினம்.

ஆனால், மாகாணத்தின் பிரதம செயலாளர் சுப்பிரிம்கோட்டில ஒரு வழக்கை பதிவுசெய்தா. அதாவது முதலமைச்சர் தனது மனித உரிமை விவகாரத்தை கேள்விக்குட்படுத்த முடியாது என்றும் தனக்கு நீதிவேண்டும் என்றும் கேட்டார்.

விஜயலக்ஸ்மி அம்மையார் போட்ட போடில முதலமைச்சர் ஆடிப் போயிட்டாருங்கோ. அவருக்கு சார்பாக வாதாடப் போனவர்கள் விழிபிதுங்கிப் போயிட்டனமுங்கோ. ஐயோ இந்த மனுசன் யாருடைய யோசனையைக் கேட்டு உந்த மாதிரி ஒரு உத்தரவைப் போட்டவரோ தெரியவில்லை. நாங்களெல்லோ மூக்குடைபடப் போறம் எண்டு ஏற்கெனவே முணுமுணுத்தவையாமுங்கோ.

அதில கூட்டமைப்பின் ஆஸ்தான வழக்கறிஞரான சுமந்திரனும் ஒருவராமுங்கோ. பிறகென்ன வெளவாலுக்கு வாழ்க்கைப்பட்டால் தொங்கித்தானே ஆகவேணும் எண்ட மாதிரி, முதலமைச்சருக்கு சார்பாக ஆஜராகி அவமானப்பட்டதுதானாமுங்கோ மிச்சம்.

அதாவது சம்மந்தப்பட்ட வழக்கின்ர தீர்ப்பை நீதிமன்றம் வழங்குவதற்கு முன்னமே போனவாரம் சுமந்திரன், முதலமைச்சர் பிரதம செயலாளருக்கு அனுப்பிய உத்தரவுகளை வாபஸ் வாங்கிக் கொள்ளுறாராம் எண்டு நீதிமன்றத்தில சொல்லிப் போட்டாருங்கோ.

அதைக்கேட்ட நீதிமன்றம் தீர்ப்பை பிறகு சொல்லுறம், எண்டாலும் இரண்டு தரப்பும் புரிந்துணர்வு அடிப்படையில எதிர்காலத்தில நடந்துகொள்வதுதான் சரியாக இருக்கும் எண்டு சொல்லிப் போட்டுதாமுங்கோ.

பாத்தியளோ, சட்டம் தெரிஞ்சவர், நீதி தெரிஞ்சவர், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை இனிமேல் சட்டரீதியாக போராடிப் பெறப்போகிறார். எண்டெல்லாம் அளவுக்கு மிஞ்சின பில்டப் கொடுத்து பொலிரிக்ஸுக்கு கொண்டுவந்த விக்கி ஐயாவுக்கு இப்புடி ஒரு சட்டப் படிப்பினையை படிக்கநேரிடும் எண்டு யாருங்கோ கண்டது.

சம்மந்தமானவர்கூட இதை நினைச்சுப் பார்த்திருக்கமாட்டாருங்கோ. அது மட்டுமில்லையுங்கோ, இவருக்கு பொலிரிக்ஸும், நிர்வாக சேவையும்தான் தெரியாது எண்டு நினைச்சவைக்கு இப்போது சட்டத்திலையும் விக்கி கொஞ்சம் வீக்கோ எண்ட மாதிரி யோசிக்கத் தொடங்கியிருக்கினமாமுங்கோ.

பாத்தியளோ... இப்பவே இப்புடி யோசிக்கிற சனம் இன்னும் கொஞ்சம் காலம் போனால் ஐயா கொடுத்த தீர்ப்புக்களையும் சந்தேகப்படவும் செய்யுமுங்கோ. எங்கட தமிழ்ச்சனத்தின்ர பழக்கமே இதுதானுங்கோ.

தூக்கிவச்சு புகழ்ந்து சாகடிக்கிறதிலையும், கொஞ்சமும் சளைக்காமல் ஐயா, ராசா, தேசியத் தலைவா எண்டு உள்ளதையும், இல்லாததையும் கையாலை மடியாலை போட்டு தூக்கிவச்சிக் கூத்தாடுமுங்கோ.

அதே ஆளை தூற்ற வேணுமெண்டால், குலம், கோத்திரம், ஐயாவின்ர முற்பிறவி, பிற்பிறவி, படிச்சது, செய்தது, செய்யாதது எண்டு எல்லாத்தையும் கிண்டிக் கிழங்கெடுத்துப் போட்டு ஊர் சிரிக்கச் செய்து போட்டுத்தானுங்கோ ஓயும்.

இப்ப விக்கிதான் வசமாக தமிழ்ச் சனத்தின்ர கையில மாட்டிக் கொண்டுள்ளாருங்கோ. ஆளுனர் பதவி நீடிப்பின்போதே, முதலமைச்சர் பதவி விலகத் தயார் எண்டு கூட்டமைப்பின்ர கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினரின் சிகப்பு இணையத்தில செய்திபோட்டவை.

அந்தச் செய்தியை படிச்சிப்போட்டு, ஆஹா ஆளுனரைச் சாட்டி முதலமைச்சர் தப்பிச்சுக் கொள்ளப்போறாரே எண்டு சிலபேர் சொல்லிச்சினமுங்கோ. ஆனால் அந்தச் செய்தியை கூத்தமைப்பு ஒரு பரபரப்புக்காகத்தான் கசியவிட்டுள்ளது எண்டதை பிறகுதானுங்கோ சனம் புரிஞ்சு கொண்டிச்சினம்.

ஆனால் போனவாரம் முதலமைச்சர் தான் பதவி விலகப்போவதில்லை எண்டும், தன்னை அழைத்தவர்களே விலக்கினால் ஒழிய தானாக அப்படி ஒரு முடிவை எடுக்கப்போவதில்லை என்று கூறி ஒரு அனுதாப அலையை கிறியேட் பண்ணப்பார்த்தாருங்கோ.

அவரின்ர பகிடியைப் பார்த்தவைக்கு, ரசிகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் அதே திரைப்படத்தை திரையிடுகிறோம் எண்ட மாதிரித்தான் இருந்திச்சுதாமுங்கோ.

**"யாவும் கலப்படமற்ற கற்பனை"**

# கலிலியோ கலிலி



## பூமிதான் சுற்றுகிறது!

முன்காலத்தில் நீதி வழங்கும் உரிமை சேர்ச்சினிடம் இருந்தது. நாட்டை ஆளுவது அரசரானாலும், அந்த அரசரையும் அடக்கி ஆளும் வல்லமை பெற்றிருந்தன தேவாலயங்கள். 1615 இல் கலிலியோ தன் கண்டுபிடிப்புக்களை விளக்கி ஒரு புத்தகம் வெளியிட்டார்.

உடனே அவை விபரீதமான கருத்துக்கள் என்றுகூறி, சேர்ச் அதிகாரிகள் கலிலியோவைக் கைதுசெய்தார்கள். தான் எழுதிய கருத்துக்கள் தவறானவை என்று ஒப்புக்கொள்ளும்படி பலவந்தப்படுத்தினார்கள். வேறு வழி இல்லாமல் கலிலியோவும் "நான் கூறியிருப்பவை எல்லாம் தவறு. பூமி அசையாமல் நிற்கிறது!" என்று ஒப்புக்கொண்டார்.

கலிலியோ இதன் பிறகு பிளாரன்ஸ் நருக்குச்சென்றார். வருடங்கள் உருண்டன. அதேபோல கலிலியோவின் நம்பிக்கையும் உறுதியாயிற்று. சூரியனையோ பூமி சுற்றிச்சுழன்று வருகிறது என்பதில் அசைக்கமுடியாத உறுதிகொண்டார். பிளாரன்ஸ் நகர அதிகாரிகள், கலிலியோ தன்னுடைய மற்றொரு புத்தகத்தை வெளியிட அனுமதி வழங்கினர். 1632 இல் இது வெளியாயிற்று. ஆனால் உடனே ரோம் நகரின் உயர் அதிகாரிகள் அவரை மீண்டும் கைதுசெய்தார்கள். இம்முறை மன்னிப்புக்கேட்கும் விவகாரமெல்லாம் வைத்துக்கொள்ளவில்லை. எஞ்சிய தம் வாழ்நாள் பூராகவும் அவர் தம் வீட்டிலேயே அடைபட்டுக் கிடக்கவேண்டும் என்று கூறிவிட்டார்கள்.

வீட்டுக் காவலில் வைக்கப்பட்ட கலிலியோ 1642 இல் மரணமடைந்தார். ஆனால், அவருடைய ஆராய்ச்சிகளையும் கண்டுபிடித்த உண்மைகளையும் தாங்கிய புத்தகம் ஐரோப்பா முழுவதும் வலம் வந்தது.

(தொடரும்)

# இந்தவாரம் உங்கள் பலன்

(24.07.2014 தொடக்கம் 30.07.2014 வரை)

### மேடம்

நண்பர்களால் எதிர்பாராத பொருட்செலவுகளும் மனநிம்மதிக் குறைவும் ஏற்படலாம். உற்றார், உறவினர்களால் ஆதாயம் இல்லை. உடம்பில் வாயு மற்றும் வாத சம்பந்தமான பிணிகள் வந்துபோகலாம். உத்தியோகத்தில் பதவி உயர்வுடன்கூடிய இடமாற்றம் ஏற்படலாம். வெகுகாலமாகக் காணாமற் பொருட்கள் மற்றவர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். பெண்களால் தென்கிழக்குத் திசையில் இருந்து எதிர்பாராத தனவரத்து உண்டாகும். காதல் சம்பந்தமான விசயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்துகொள்வது நல்லதாகும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### துலாம்

குடும்பத்தில் தடைப்பட்டுவந்த சகோதர சகோதரிகளின் திருமண காரியங்கள் நிறைவேறும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்குப் பணி இடமாற்றத்துடன் கூடிய பதவி உயர்வுகள் ஏற்படலாம். ஆதரவற்ற ஏழைகளுக்கு உதவுவதின்மூலம் மனநிம்மதியும் பொதுமக்களின் பாராட்டுக்களையும் பெறுவீர்கள். குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவர வாய்ப்புகள் உள்ள காலமாகும். புதிய தொழில் செய்வதற்காக வங்கிகளில் இருந்து வெகுகாலமாக எதிர்பார்த்துவந்த பண உதவிகள் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ள காலமாகும். புதிய ஆடை அணிகலன்களை வாங்குவதற்காகப் புதிய கடன்களை வாங்க முயற்சிப்பீர்கள். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### இடபம்

காதல் விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல தகவல்கள் வந்துசேரும். வெகுநாட்களாகத் தடைப்பட்டுவந்த திருமண காரியங்கள் நிறைவேற வாய்ப்பு உள்ள காலமாகும். அரசியல்வாதிகளுக்கு எதிர்பாராத ஆதாயங்கள் உண்டாகும். வேண்டாத விசயங்களில் தலையிட்டு வீண் சிக்கலில் மாட்டிக்கொண்டு அவதிப்படாதீர்கள். செய்யாத குற்றங்களுக்காகப் பழிச்சொல் ஏற்பட இருப்பதால் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்படுவது நல்லது. கணவன்-மனைவி உறவுகளில் இருந்துவந்த பிரச்சினைகள் தீர்ந்து ஒற்றுமையுடன் இருப்பீர்கள். நண்பர்களின் சுபகாரிய விசயங்களுக்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள் நாட்பட்ட வராத கடன்கொடுத்து இருந்த பணம் திரும்ப கைக்கு வந்துசேரும்.

### விருச்சிகம்

வெளிநாடு சென்றுவருதல் போன்ற முயற்சிகளில் நல்ல தகவல்களை எதிர்பார்க்கலாம். புதிய நண்பர்களின் வீண் பிரச்சினைகள் ஏற்படலாம். குழந்தைகளுக்காகத் திடீர் மருத்துவச் செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பணப்புழக்கம் சுமாராகக் காணப்படும். வீட்டில் கவனமுடன் இருந்தால் திருட்டுப்போவதைத் தவிர்க்கலாம். உற்றார், உறவினர்களால் ஆதாயம் இல்லை. காதல் விசயங்களில் மிகுந்த கவனமுடன் இருத்தல் நல்லது. தொலைதூரப் பயணங்கள் மூலம் எதிர்பார்த்து இருந்தவர்களை சந்தித்து அவர்களால் ஆதாயம் அடைவீர்கள். தேவையற்ற புதிய நண்பர்களின் சேர்க்கையால் மனநிம்மதி குறையலாம். நண்பர்களின் வீட்டுச் சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள்.

### மிதுனம்

பழுதுபட்ட வீடு மற்றும் வாகனங்களைப் பழுதுபார்ப்பதன் மூலமாக பொருட்செலவுகள் உண்டாகும். நாட்பட்ட தீராத வியாதிகள் தீரவேண்டி புதிய மருத்துவர்களின் உதவிகளை நாடுவதன் மூலம் பொருட்செலவுகள் உண்டாகலாம். சுபகாரிய சம்பந்தமான முயற்சிகளில் ஈடுபட வாய்ப்பு உள்ளது. காதல் விசயங்களில் எதிர்பார்த்து இருந்த நல்ல செய்திகள் வந்துசேரும். பொதுநலத் தொண்டுகளில் ஈடுபட்டு நற்பெயரும், மனநிம்மதியும் அடைவீர்கள், சொத்து சம்பந்தமான வழக்கு விசயங்களில் நல்ல தகவல்கள் வந்துசேரும் காலமாகும். கணவன் - மனைவி உறவுகளில் சிற்சில கருத்து வேறுபாடுகள் வந்துவிலகும். உற்றார்.

### தனுசு

உடம்பில் நரம்பு மற்றும் எலும்புகள் போன்ற உபாதைகள் வந்துபோகும். படித்த வேலை இல்லாத இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் வந்துசேரும். குடும்பத்தில் காரணமற்ற மனக்குழப்பங்களும் மற்றும் கடன்தொல்லைகளும் ஏற்படலாம். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெற வாய்ப்பு உள்ளது. தாயின் உடல்நிலையில் இருந்துவந்த தொல்லைகள் குறைந்து காணப்படும். பழுதுபட்ட வீடு மற்றும் வாகனங்களை புதுப்பிப்பதன்மூலம் பொருட்செலவுகள் வந்துசேரும். குழந்தைகளின் மனமகிழ்ச்சிக்காக உல்லாசப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### கடகம்

வரவேண்டிய கடன்கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் நண்பர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். கணவன் - மனைவி உறவுகளில் சற்று எச்சரிக்கையுடன் முன்கோபத்தை தவிர்த்து இருப்பது நல்லதாகும். சூதாட்டங்களை நம்பிப் பணம் மற்றும் பொருட்கள் ஏமாற்றம் அடையாமல் இருக்கவும். புதிய நண்பர்களின் சேர்க்கையால் ஆதாயம் உண்டு. குலதெய்வ வழிபாடு செய்துவருவீர்கள். நாட்பட்ட தீராத நோய்க்குப் புதிய மருத்துவர்களின் உதவிகளை நாடிச் செல்லுவீர்கள். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### மகரம்

தேவையற்ற மனச்சஞ்சலம் தவிர்த்தல் நல்லதாகும். வீடு மற்றும் வாகனங்களைப் பழுது பார்ப்பதற்காகப் புதிய கடன்களை வாங்க முயற்சிப்பீர்கள். கண்களில் கவனமுடன் இருக்கவும். பொருளாரத்தில் இருந்துவந்த நெருக்கடிகள் மாறி ஓரளவு முன்னேற்றம் காணப்படும். விட்டுப்போன பழைய உறவுகள் மீண்டும் ஒன்றுசேர வாய்ப்பு உள்ள காலமாகும். புதிய கடன்வாங்கிப் பழைய கடன்களை அடைப்பீர்கள். உடல்நிலையில் காய்ச்சல் மற்றும் உஷ்ண சம்பந்தமாகிய பிணிகள் வந்துபோகலாம். வங்கிகளில் இருந்து நீண்டகாலமாக எதிர்பார்த்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் கை வந்துசேரும்.

### சிங்கம்

அண்டை அயலார்களிடம் கவனமாகப் பேசிப்பழகுதல் நல்லது. குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவரப் போட்ட எண்ணங்கள் நிறைவேறும் காலமாகும். உத்தியோகத்தில் வெகுகாலமாக எதிர்பார்த்து இருந்த பதவி உயர்வுகள் மற்றும் சம்பள உயர்வுகள் கிடைக்கக்கூடிய காலமாகும். புதிய ஆடைகள் மற்றும் ஆபரணங்கள் வாங்குவதன் மூலம் பொருட்செலவுகள் உண்டாகலாம். உத்தியோகத் துறையினர்கள் மேலதிகாரிகளிடம் மிகுந்த கவனமுடன் பணியாற்றுதல் நல்லது. கணவன் - மனைவி உறவுகளில் இருந்துவந்த மனக்கசப்புகள் தீர்ந்து ஒற்றுமை உண்டாகும்.

### கும்பம்

குடும்பத்தில் தடைப்பட்டு இருந்த சுபகாரிய நிகழ்ச்சிகள் நடைபெறக் கூடிய காலமாகும். உற்றார், உறவினர்களின் வரவுகளால் மனமகிழ்ச்சியும் பொருள்வரவும் உண்டாகும் வங்கிகள்மூலம் எதிர்பார்த்து இருந்த கடன்தொகைகள் கிடைக்கும். வேற்று மதத்தவரால் எதிர்பாராத ஆதாயங்கள் அடைவீர்கள். பழைய கடன்கள் அடைத்துப் புதிய கடன் வாங்குவீர்கள். உடம்பில் எலும்பு மற்றும் நரம்பு சம்பந்தமாகிய பிணிகள் வந்துபோகும். கணவன் - மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### கன்னி

பிள்ளைகளால் பொருட்செலவுகளும் மனநிம்மதியும் குறைய இருப்பதால் மிகுந்த எச்சரிக்கையுடன் இருத்தல் நல்லது. தந்தைக்கு ஏற்பட்டுவந்த மருத்துவச் செலவுகள் சற்றுக் குறைவதற்கு வாய்ப்பு உள்ளது. குடும்பத்தில் தடைப்பட்ட திருமண காரியங்களில் நண்பர்களின் உதவியால் நடைபெறலாம். அரசியல்வாதிகளால் ஆதாயம் இல்லை. தேவையற்ற மனச்சஞ்சலம் தவிர்த்து ஆலயங்களுக்குச் சென்றுவருவது நல்லது. வெளிநாடு சென்றுவருவதற்கான புதிய முயற்சிகளில் நல்ல செய்திகள் கிடைக்கும். கல்வித்துறை ஆசிரியர்கள் இவற்றில் பணிபுரிவோர்கள். மாணவர்கள் கல்வியில் சில தடைகள் வந்துவிலகும்.

### மீனம்

தந்தை - மகன் உறவில் சுமூகமான சூழல் உருவாகும். தாயின் உடல்நிலை பாதிப்புக்களால் ஏற்பட்டுவந்த மருத்துவச்செலவுகள் சற்றுக்குறைய வாய்ப்புகள் உள்ளது. குலதெய்வ ஆலய வழிபாடு செய்துவர எண்ணுவீர்கள். உடம்பில் வாயு வாதம் போன்ற தொல்லைகள் வந்துநீங்கும். வீடுகளைத் திருத்திக் கட்டவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் மிகுந்த கவனமுடன் பேசிப் பழகுதல் நல்லது. நீண்டகாலமாக வரவேண்டிய பணம் கை வந்துசேரும் காலமாகும். கணவன், மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். இருந்த கடன்தொகைகள் கிடைக்கும்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)


# தேசிய சேமிப்பு வங்கி மூலம்

## மனதில் உருவான கனவு இல்லத்தை நனவாக்கிக்கொள்ள




# வீட்டுக் கடன்!

அருகிலுள்ள NSB கிளைக்கு இன்றே விரையுங்கள்!

துரித அழைப்பு 0112379379

Fitch Rating AAA (lka)

NSB




இப்பத்திரிகை 373, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் உள்ள அற்புதன் அச்சகத்தில் டிடி என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ஜூலை 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Registered as a News Paper in Sri lanka

இலவச இணைப்பு

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆடி 08 வியாழக்கிழமை (24.07.2014) பக்கங்கள் IV ஓசை - 296

## மேற்குலகின் அடிமையாக இருந்தால் தீர்மானத்தை தடுக்கலாம் மகிந்த

### பேராசிரியர் மாதவ் நலபாட் தெரிவிப்பு

(கொழும்பு)

மேற்குலகின் அடிமையாக ஜனாதிபதி மகிந்த இருந்திருப்பாரேயானால் அவர் எந்தவொரு தீர்மானத்தையும் எதிர்கொண்டிருக்கமாட்டாரென பா.ஜ.க.வைச் சேர்ந்த பேராசிரியர் மாதவ் நலபாட் தெரிவித்துள்ளார்.

மோடி ஆட்சியின் கீழ் இந்தியா என்ற தலைப்பில், கொழும்பில் நடந்த கருத்தரங்கில் உரையாற்றியபோதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புவிசார் அரசியல் மற்றும் அனைத்துலக உறவுகளுக்கான பணிப்பாளரான, பேராசிரியர் மாதவ் நலபாட், யுனெஸ்கோவின் வன்முறையற்ற, அமைதிக் கலாசார ஊக்குவிப்பு அமைப்பின் தலைவராகவும் பணியாற்றுகிறார்.

அவர் தனது உரையில், ஐ.நா.வின் செயற்பாடுகளைக் கடு

IV ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையை விமர்சிக்கும் பிரிட்டன் ஆயுத விற்பனையில் முதலிடம் பிடித்தது

இலங்கையின் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் பிரித்தானியா கவலைகளை வெளியிட்டு வரும் நிலையில், பிரித்தானியாவில் இருந்து இலங்கைக்கு ஆயுதங்கள் ஏற்றுமதி செய்யப்படுவது அதிகரித்துள்ளதாக பிரித்தானிய நாடாளுமன்றக் குழு கண்டறிந்துள்ளது.

பிரித்தானிய நாடாளுமன்றத்தின் ஆயுத ஏற்றுமதி கட்டுப்பாட்டுக் குழு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தெரியவந்துள்ளது.

இலங்கைக்கான ஆயுத ஏற்றுமதி 614 வீதமாக அதிகரித்துள்ளதாகவும் நடைமுறையில், 49.6 மில்லியன் பவுண்கள் (79 அனுமதிப்பத்திரங்கள்) மற்றும் 8.1 மில்லியன் பவுண்ட்ஸ்களுக்கான (49 அனுமதிப்பத்திரங்கள்) அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அதில் தெரியவந்

IV ஆம் பக்கம் பார்க்க

# ஒரு இனம் மட்டும் உரிமை கோரினால் இலங்கையில் நல்லிணக்கம் மலராது

### ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

பல்லினங்கள் வாழக்கூடிய நாடான இலங்கை ஒரு இனத்துக்கு மட்டும் சொந்தமானதல்ல என்ற அடிப்படையை ஏற்றுக் கொள்வதன் மூலமே இந்த நாட்டில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளரும் சர்வதேச ஆலோசகருமான மொஹான் சமரநாயக்க தெரிவித்தார்.

'சமூக ஒருங்கிணைப்பும் ஊடக பாவனையும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கொன்று நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தின் ஊடக அபிவிருத்தி மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ பிரதம அதிதியாக கலந்து கொண்ட இக்கருத்தரங்கில் சமூக நல்லிணக்கமும் முன்னேற்றமடைந்த நாடுகளும் என்ற தலைப்பில் உரை நிகழ்த்தும் போதே மொஹான் சமரநாயக்க இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது,

மேற்குலக நாடுகள் உலகில்

IV ஆம் பக்கம் பார்க்க

## இராணுவத்திற்கு புதிதாக காணி சுவீகரிக்கவில்லை



### என்கிறார் பிரிகேடியர் வணிகசூரிய

யாழ். குடாநாட்டில் இராணுவ முகாம்கள் 26 ஆயிரம் ஏக்கரில் இருந்ததாகவும் அது தற்போது 6 ஆயிரத்து 500 ஆக குறைக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவ ஊடகப் பணிப்பாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

யாழ்.குடாநாட்டில் புதிதாக இராணுவ முகாம்களோ, முகாம்களுக்கான காணிகளோ சுவீகரிக்கப்படவில்லை.

அச்சுவேலி இராணுவ

IV ஆம் பக்கம் பார்க்க

## ஆலோசனை வழங்க நிபுணர்குழு அரசின் தகுதியில்லாத நடவடிக்கை

### கர்சிக்கிறது ஹெல உறுமய

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் முன்னாள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை நிறுவிய குழுவிற்கு பதிலாக மூன்று நிபுணர்கள் அடங்கிய குழுவை அரசாங்கம் நியமித்தமை அரசாங்கத்தின் தகுதியில்லாத நடவடிக்கை என்று ஜாதிக ஹெல உறுமய குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த செயற்பாட்டின் ஊடாக, இதுவரையிலும் கொண்டிருந்த நிலைப்பாடு, கொள்கை ஆகியவற்றை அரசாங்கம் மீறியுள்ளது என்றும் அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில், ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய

IV ஆம் பக்கம் பார்க்க

### பயங்கரவாத செயற்பாடுகளால்

## அசையாச் சொத்தை இழந்தவர்கள் மீளப் பெறுவதற்கு புதிய சட்ட மூலம்

பயங்கரவாத செயற்பாடுகள் காரணமாக 1983 தொடக்கம் 2009 வரையிலான காலப்பகுதியில் காணி போன்ற அசையாத சொத்துக்களை இழந்தவர்கள் அவற்றை மீளப்பெற வழி செய்யும் புதிய சட்ட மூலமொன்றை நேற்று அரசாங்கம் கொண்டுவந்தது.

ஆட்சியுரிமை (விஷேட ஏற்பாடுகள்) எனப்படும் இந்த சட்ட மூலத்தை அரசாங்கம் நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பித்தது.

இந்த சட்ட மூலம் தொடர்பிலான விவாதம் கட்சித் தலைவர்கள் தீர்மானிக்கும் ஒரு திகதியில் விவாதிக்கப்பட்டு சட்டமாக்கப்படும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயங்கரவாத செயல்கள் காரணமாக பலர் தமது காணிகளின் உரிமையை நிலைநாட்ட முடியாது போயிற்று.

IV ஆம் பக்கம் பார்க்க

## தொண்டு நிறுவனங்களுக்கு கட்டுப்பாடு; ஐரோப்பிய ஒன்றியம் கவலை

இலங்கையில் சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் முறையான பொது செயற்பாடுகளை கட்டுப்படுத்த அரசாங்கம் அண்மையில் மேற்கொண்ட முயற்சி தொடர்பில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் தூதுவர்களும், நோர்வே மற்றும் சுவிட்சர்லாந்து தூதுவர்களும் மிகவும் கவலையடைவதாக கூறியுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றிய தூதுவர்களும், ஏனைய இரு நாடுகளின் தூதுவர்களும் இணைந்து கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய அலுவலகத்தில் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் இதனைக் கூறியுள்ளனர்.

தனிநபர்கள் தமது கருத்தை வெளியிடும் சுதந்திரம், ஒன்று கூடும் சுதந்திரம், பேச்சுரிமை, கருத்து சுதந்திரம் என்பன

IV ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.மாநகரசபை ஆட்சிக்காலம் ஆகஸ்ட் 31 ஆம் திகதி நிறைவு

### முதல்வர் தெரிவிப்பு

யாழ்.மாநகர சபையின் ஆட்சிக்காலம் எதிர்வரும் ஆகஸ்ட் 31 ஆம் திகதியுடன் நிறைவடைவதாக யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா நேற்று தெரிவித்தார்.

யாழ். மாநகர சபையில் மாதாந்த விசேட பொதுக்கூட்டத்தின் பின்னர் பத்திரிகையாளர்களைச் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

யாழ்.மாநகர சபையின் ஆட்சிக்காலம் தன்னிச்சையாக நிறைவடைகிறது என்றும் சட்டத்திற்கு அமைவாக ஆட்சிக் காலம் மாற்றமடையுமென்றும் அவர்

IV ஆம் பக்கம் பார்க்க



வருகின்ற வருமானம் போதாதா?

20,000/= - 38,000/= க்கும் மேற்பட்ட சம்பளத்துக்கு நிரந்தரமான தொழிற்சாலைகளான ஜேம், பிஸ்கட், சொக்லேட், ஐஸ்கிறீம், கிளவுஸ், சிமெந்து, சீட், டயர் ஆகிய நூர் உற்பத்திக்கு பொருட்கள் பெக்கிங் பழுதுபார்த்தல், ஸ்டோர்ஸ் ஆகிய பிரிவுக்கு 18 - 55 வயதான ஆண், பெண் தேவை. சாப்பாடு, பாதுகாப்பான தங்குமிட வசதி உண்டு. சிங்களம் கட்டாயம் இல்லை. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா முன்னுரிமை. தம்பதிகள், நண்பர்கள் ஒரே இடத்தில் குழுக்களாக வருகின்ற தினமே சேர்த்துக்கொள்ளப்படுவர். (0775964299) (C/3735)



## தூக்கில் தொங்கிய நிலையில் பல்கலை மாணவன் சடலமாக மீட்பு

யாழ். பல்கலைக்கழக முதலாம் வருட மாணவன் ஒருவர் தெல்லிப்பளை மாலுசந்தி அத்தாய் கிராமத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றுக்காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அதேயிடத்தை சேர்ந்த நாகராசா சுதாகரன் (வயது - 21) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலம் மரண விசாரணைக்காக மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டது(13)


அனைவருக்கும் பகிரப்பட்ட, விஸ்தரிக்கப்பட்ட, சமனான பரிசமைப்பு

**நியத்த ஜய**
உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் - 275
திகதி - 2014.07.22
வர்ணம் - மஞ்சள்

வெற்றி இலக்கங்கள் / ஆங்கில எழுத்து

**15 39 54 57 T**

பரிசுத் தொகை ரூபா. **23,829,360/-** வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை ரூ. | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 01 | 1,000,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 06 | 300,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 217 | 217,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 349 | 349,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 9611 | 576,660/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4979 | 199,160/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 125595 | 2,511,900/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 18366 | 367,320/- |
| நான்கு இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துவதன் மூலம் | 23,829,360/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 5,521,040/- |

எதிர்வரும் வெள்ளிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. **24,075,460/-**

2014.07.25ம் திகதி வெள்ளிகிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது நீல வர்ண டிக்கட்களாகும்
வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02.
தொ.பே: 011 2333546/47
web : www.dlb.lk
(C/3722)


# மிருக பாதுகாப்புத் திட்டம் யாழ்ப்பாணத்தில் நடைமுறை




(யாழ்ப்பாணம்)

யாழ்பாணத்தில் மிருக பாதுகாப்புத் திட்டத்தை ஒடேல் நிறுவனம் யாழ். மாநகரசபையுடன் இணைந்து நேற்று முதல் ஆரம்பித்துள்ளது.

கட்டாக்காலி நாய்களின் இனப்பெருக்கத்தை மனிதாபிமான முறையில் கட்டுப்படுத்துவது மற்றும் அவற்றால் ஏற்படும் விசர் நாய்க்கடி போன்ற தீங்குகளிலிருந்து மக்களைப் பாதுகாப்பது என்பவற்றை இலக்காகக் கொண்ட நீடித்து நிலைக்கும் ஒரு சமூக நலத்திட்டமாக இது முன்னெடுக்கப்படுகின்றது.

இதில் டோக்ஸ்டார் மன்றம் மற்றும் சுனாமி மனித மிருக கூட்டமைப்பு என்பன இணைந்து வீதி நாய்களைப் பிடித்து அவற்றின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்துதல், தடுப்பு மருந்து ஏற்றுதல் இந்தத் திட்டமாகும்.

இதற்கமைய யாழ். நகரில் மதிப்பிடப்பட்ட சுமார் 4300 தெருநாய்களுள் 3500 நாய்களை இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வும் செய்தியாளர் சந்திப்பும் நேற்றுக்காலை யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அத்துடன் இது குறித்த செய்முறையும் காண்பிக்கப்பட்டது. (இ,25)

## பரிசளிப்பு விழா

கொமர்ஷல் வங்கியின் சாவகச்சேரி கிளையினரின் அருணலு பரிசளிப்புவிழா நாளை பி.ப 4.30 மணிக்கு வங்கி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் வங்கிகிளையில் அருணலு கணக்கில் இணைந்துள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அதியுச்ச புள்ளிகள் பெற்ற 20 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (11)


**சிறு விளம்பரம்**

**டயானா பிளாஸ்ரிக்**
***ரீசைக்கிள் (மீள் சுழற்சி)***

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன். என்பன விலைக்கு [illegible]கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.
(C/3395)



# முதலாம் ஆண்டு நினைவலைகள்

## அமரர் திருமதி மாணிக்கம் இராசலட்சுமி



(வேலணை மேற்கை பிறப்பிடமாகவும், நல்லூரை வதிப்பிடமாகவும் கொண்டவர்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13 - 11 - 1927 | 03 - 08 - 2013 |

திதி: 24.07.2014

பாசத்தையும் பண்பையும் நேசத்தையும்
நிலைநிறுத்தப் பிறப்பெடுத்த என்தாயை
பாசக்கயிற்றினால் பறித்திட்டு ஓராண்டு
நிறைவுற்ற நிலையில் உங்களை
நேசித்த எம் நெஞ்சங்கள் நெக்குருகி நிற்குதம்மா
நிலைகுலைந்து வாழ்கின்றோம்.
என்றும் - என்றென்றும் - உங்கள் ஆத்மா
இறைவன் பூங்கழல்களில் பூக்களாய்
நல்லூர் கந்தன் பாதத்தில் மலர்ந்திருக்கும்.
உங்கள் ஆத்மா சாந்தி அடைய - இறைவனை
பிரார்த்திக்கும் பிள்ளைகள் மர்மஜோதி,
மனோரஞ்சிதம் குடும்பங்கள்.

தகவல்:-
செல்ல மகள் வவா, செல்லா
மர்மஜோதி (நல்லூர்)
0775641794

(C/3747)

# மீண்டும் ஒரு கறுப்பு யூலை வேண்டாம் யாழ்.நகரில் கையெழுத்து வேட்டை




(யாழ்ப்பாணம்)


'மீண்டும் ஒரு கறுப்பு யூலை வேண்டாம்' என்ற தொனியில் சமஉரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுக்காலை யாழ்.நகரில் கையெழுத்து பெறும் நிகழ்வு இடம்பெற்றது.

யாழ்.பஸ்தரிப்பு நிலையப் பகுதியில் இக்கையெழுத்துப் போடும் நடவடிக்கை இடம்பெற்றது. இதில் குறிப்பிட்டளவு மக்களே கையொப்பம் இட்டனர்.

1983 ஆம் ஆண்டு யூலை 23 ஆம் திகதி இடம்பெற்ற கறுப்பு யூலைக் கலவரத்தை நினைவுபடுத்துவதும், மீண்டும் அதே போன்றதொரு நிகழ்வு வேண்டாம் என்ற விழிப்புணர்வைக் கொண்டுவரும் வகையில் இந்தக் கையெழுத்துப் போடும் நடவடிக்கை இடம்பெற்றது. (இ,25)

# புதூர் சந்தியில் தடம்புரண்டது கன்ரர்

## சாரதி உட்பட இருவர் காயம்



மட்டக்களப்பு கல்முனையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற கன்ரர் வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து புளியங்குளம் புதூர்ச் சந்திப் பகுதியில் தடம்புரண்டு இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

தவிடு மற்றும் அரிசி ஆகியவற்றை ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற கன்ரர் வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து புளியங்குளம் புதூர் பகுதியில் தடம்புரண்டுள்ளது. இச்சம்பவத்தில் வாகனச் சாரதி உட்பட இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக புளியங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த இருவருக்கும் தலை, கால் போன்ற பகுதிகளில் காயம் ஏற்பட்டுள்ளதாக வவுனியா வைத்தியசாலை பணிப்பாளர் கே.அகிலேந்திரன் தெரிவித்துள்ளார். (70)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

உயர் அழுத்த தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை இளவாலை, மாதகல், பண்டத்தரிப்பு, பண்ணா[illegible] சுழிபுரம், வடலியடைப்பு, இடும்பன், தொல்புரம், சில்லாலை, சாந்தை, சுன்னாகம், கந்தரோடை, மல்லாகம், கல்லாரை, ஏழாலை, அளவெட்டி, தெல்லிப்பளை, பன்னாலை, சிறுவிளான் பிரதேசத்திலும்,

27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை கொத்தியாலடி சுடலையிலிருந்து சுன்னாகம் சந்திவரை, மலப்பை, சூறாவத்தை, சுன்னாகம் சிவன் கோவிலடி, சங்கானை நகரப் பகுதி, தொட்டிலடி, மாகியப்பிட்டி, விளான், பண்டத்தரிப்பு, அளவெட்டி மேற்கு, தெற்கு, சண்டிலிப்பாய் இரட்டையப்புல வைரவர் கோவிலடி, தலங்காவில், திருநெல்வேலி, பரமேஸ்வரா சந்தி, கந்தர்மடம், இலுப்பையடி, ஆரியகுளம், ஸ்ரான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதியின் ஒரு பகுதி, பருத்தித்துறை வீதியின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும்

29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை பளை, எழுதுமட்டுவாள், ஆசைப்பிள்ளை ஏற்றம், படித்த மகளிர் குடியேற்றத்திட்டம், கரம்பகம், முகமாலை ஆகிய இடங்களிலும்,

மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சாரசபை யாழ்.அலுவலகம் அறிவித்துள்ளது.

# தேசிய சுனாமி ஒத்திகை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள நாவற்குழி ஜே/297 கிராம அலுவலர் பிரிவை மட்டும் உள்ளடக்கி இன்று பிற்பகல் 3.00 மணிக்கு அனர்த்த முகாமைத்துவப் பிரிவினரால் முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும், ஒத்திகைப் பயிற்சிச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பில் பொதுமக்கள் அமைதியாக இருக்குமாறும், இது ஒரு ஒத்திகைச் செயறபாடு என்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது.

# சங்காபிஷேக பெருவிழா

ஆவரங்கால் மேற்கு சர்வோதய வீதி திருவருள்மிகு ஞானவைரவர் சுவாமி திருக்கோவில் சங்காபிஷேகப் பெருவிழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி முதல் 1008 சங்குகளால் சங்காபிஷேகம் நடைபெற்று மாலை 4.00 மணிக்கு வைரவப் பெருமானுக்கு விசேட பூசைகள், கிராமியக் கலை நடனத்தோடு மங்கள வாத்தியம் சகிதம் முத்துச் சப்பறத்தில் கிராம வீதி வலம் வரும் காட்சி இடம்பெற்று இரவு 7.00 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம், வசந்த மண்டபப் பூசை இடம்பெறவுள்ளன.

விசேட நிகழ்வுகளாக இலங்கை - இந்திய தலைசிறந்த தவில் நாதஸ்வர வித்துவான்களோடு இணைந்து முப்பது வயதுடைய இந்திய நாட்டுப் பெண்மணி ஐஸ்வர்யாவும் தவில் வித்துவானாகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (08)

# மக்கள் வங்கி அறிவித்தல்


மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும், சேவை நிலையங்களிலும் 30.06.2013 வரையும் அடகுவைத்து மீட்கப்படாத நகைகள் 11.08.2014 இலிருந்து காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.பிராந்திய தலைமையகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ்.ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | -- |
| நெல்லியடி | -- |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (C/3431)

சாவகச்சேரி - விளைவேலி ஸ்ரீ துர்க்கா தேவியின்
எட்டாம் நாள் உற்சவம் இன்று



வருவாய் வருவாய் வருவாய் அம்மா
திருவே உருவாய் வருவாய் அம்மா
இருளை நீக்கிட வருவாய் அம்மா
உன்தன் அருளை பொழிந்திடும் தாயே அம்மா

மங்காத ஒளியே அம்மா
மலர்ப்பாதம் சரணம் அம்மா
என்னாளும் உனையே அம்மா
இதயத்தில் வைப்போம் அம்மா

ச.ஆர்த்தியா
கல்வயல்

கருணாகரனின் மூன்று நூல்கள்



வெளியீட்டு நிகழ்வும்
உரைகளும் உரையாடலும்
இன்று மாலை 3.00 - 4.30 மணிவரை

கிளிநொச்சி மகாவித்தியாலய கேட்போர் கூடத்தில்
கரைச்சி பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரனின் தலைமையில்
கவிஞர் சோ. பத்மநாதன்
ஊடகவியலாளர் சிதம்பரப்பிள்ளை சிவகுமார்
ஆய்வாளர் யதீந்திரா
ஆகியோரின் விமர்சன உரைகள் இடம்பெறும்
தங்களைப் பேரன்போடு அழைக்கிறோம்
கலாசாரப்பேரவை, கரைச்சி
கருணாகரன்
மகிழ் வெளியீட்டகம்



# இலங்கையில் முஸ்லிம் இராணுவம் விரைவில் உருவாகும் அபாயம்

## எச்சரிக்கின்றது பொதுபலசேனா

முஸ்லிம் தீவிரவாதம் நாட்டில் வேகமாகப் பரவி வருகின்றது. இன்று இங்கு முஸ்லிம்களுக்கென்று இராணுவம் மட்டுமே இல்லாதுள்ளது. இன்னும் சிறிது காலத்தில் அதனையும் உருவாக்கி விடுவார்கள் என பொதுபல சேனவின் பொதுச் செயலாளர் வண. கலகொட அத்தே ஞான சார தேரர் தெரிவித்தார்.

பொதுபல சேனா அமைப்பினால் நேற்று முன்தினம் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் முஸ்லிம் தீவிரவாதம் மிக வேகமாக பரவி வருகின்றது. பௌத்த, சிங்கள மக்களைக் குறி வைத்துத் தாக்குவதில் முஸ்லிம் தீவிரவாதிகள் மும்முரமாகவே உள்ளனர். இலங்கையில் பௌத்த மக்களுக்கு எதிராக முஸ்லிம் தீவிரவாதம் பரவி வருகின்றமையைச் சுட்டிக் காட்டினால் அது முஸ்லிம் மக்களுக்கு வலிக்கின்றது.

எமது கைகளில் இரத்தம் படவில்லை. முஸ்லிம் மக்களுக்கு எதிராக பொதுபலசேனா ஒருபோதும் செயற்படவில்லை. எம்மை ஆதரிக்கும் பல முஸ்லிம்கள் இன்றும் எம்முடன் இருக்கின்றனர். எமது கைகள் இரத்தக்கறை படாத புனிதமான கைகள். இவை வன்முறைகளை ஆதரிக்காத கைகள்.

பௌத்தர்கள் எப்போதும் பொறுமையைக் கடைப்பிடிப்பவர்கள். எமது பொறுமை நாட்டில் அமைதியை ஏற்படுத்த வித்திட்டுள்ளது. இலங்கையில் பெரும்பான்மையாக பௌத்தர்கள் இருக கின்றனர். ஆனால் ஏனைய இனங்களுக்கும் சம உரிமை வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாக கொண்ட நாடுகளில் ஒரு நாட்டிலேனும் அமைதியான சூழல் நிலவவில்லை. அதேபோல் சிறுபான்மை இனத்தவர் அங்கு சுதந்திரமாகவும் இல்லை. அதே நிலைமையை இலங்கையிலும் ஏற்படுத்தவே முஸ்லிம் மதவாதிகள் முயற்சிக்கின்றனர்.

ஆரம்ப காலங்களில் இருந்த இறுக்கமான, கொடூரமான மத விடயங்களை இன்றும் பின்பற்றிக் கொண்டு அதற்கேற்பவே இவர்கள் வாழ்கின்றனர். இன்று சமூகம் மாற்றமடைந்து கொண்டு செலகின்றது. ஆனால் இன்னமும் இவர்கள் இஸ்லாமியக் கொள்கைகளில் ஒடுக்கப்பட்ட மற்றைய சமூகங்களையும் அதில் திணிக்க முயற்சிக்கின்றனர் என்றார்.

### கிரிக்கெட் அணி தாக்கப்பட்டதன் எதிரொலி

## இளைஞர் நாடாளுமன்ற அமர்வை புறக்கணிக்கத் தீர்மானம்

யாழ். மாவட்டத்தினைச் சேர்ந்த இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள இளைஞர் நாடாளுமன்ற 9 ஆவது அமர்வைப் புறக்கணிக்கவுள்ளனர்.

கம்பகாவில் இடம்பெற்ற 26 ஆவது இளைஞர் விளையாட்டுப் போட்டிகளின் ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் யாழ். மாவட்ட அணியினர் தாக்கப்பட்டமை வீரர்களுக்கு இடையூறு விளைவித்தமை கீழ்த்தரமாக அம்பாந்தோட்டை மாவட்ட அணி நடந்து கொண்டமைக்கு கண்டனம் தெரிவித்தும் தாக்கியவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரியுமே இளைஞர் நாடாளுமன்ற அமர்வுகளைப் புறக்கணிக்கவுள்ளனர்.

நேற்று யாழ்ப்பாணக் காரியாலயத்தில் இடம்பெற்ற கூட்டத்தின் படியே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான கடிதங்கள் இளைஞர் விவகார திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும, தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பணிப்பாளர் நாயகம் லலித பியூம் பெரேரா உள்ளிட்டவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர். (48)

### இராணுவத்திற்கு...

'முகாமை' விரிவுபடுத்த காணிகள் சுவீகரிக்கப்படுவதாக சில தரப்பினர் மேற்கொண்டு வரும் பிரசாரம் உண்மைக்கு புறம்பானது.

காணி உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்கும் நோக்கிலேயே காணிகளை அளவை யீட முயற்சித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

காணி உரிமையாளர்கள் எவரும் அந்த இடத்தில் வாழ்வதில்லை என்வும் அவர்கள் வேறு இடங்களில் வாழ்ந்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அரசியல் ரீதியான உள்நோக்கத்துடன் காணி உரிமையாளர்கள் தூண்டிவிடப்பட்டு எதிர்ப்பு போராட்டங்கள் நடத்தப்படுவதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

### மேற்குலகின்....

மையாக விமர்சித்திருந்தார். நேட்டோவின் பொதுசனத் தொடர்பாடல் நிலையமாக ஐ.நா. மாறிவருகிறது. ஐ.நா.வில் ஒன்றுமில்லை. அது நேட்டோவின் ஒரு பிரிவு. நேட்டோ என்ன செய்ய வேண்டும் என்று கருதுகிறதோ அதையே ஐ.நா. செய்கிறது.

இந்தியாவின் புதிய அரசாங்கம் யதார்த்தமான, முற்போக்கான அரசாங்கம் என்பதால், ஜெனிவாவில் இலங்கை விவகாரத்தில் சரியான நிலைப்பாட்டை எடுக்கும். ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையில் தீவிர கவனம் எடுக்காது போனால், அது ஒரு அனைத்துலக நகைச்சுவையாக மாறிவிடும். சில விடயங்களைப் புறக்கணிப்பதும் வேறு சில விடயங்களை தூக்கிப் பிடிப்பதும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் வழக்கமான நடைமுறை.

மேற்குலகின் செல்வாக்கு உள்ள நாடுகளா, இல்லையா என்பதைப் பொறுத்தே, அதன் உறுப்பினர்கள் தெரிவாகின்றனர்.

மேற்கு நாடுகளின் அடிமையாக இலங்கையின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இருந்திருந்தால், இலங்கை எந்தவொரு தீர்மானத்தையும் எதிர்கொள்ள வேண்டி வந்திருக்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### ஆலோசனை...

அமைப்பாளரும் மேல் மாகாண சபையின் உறுப்பினருமான நிஷாநத ஸ்ரீ வர்ணசிங்க தெரிவிக்கையில்.

மனித உரிமைகள் மீறப்பட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக வெளியார் தலையிடுவதற்கு அனுமதியளித்தல் அவ்வாறு இல்லாவிடின் வெளிநபர்களை அழைத்து விசாரணைகளை முன்னெடுத்தல் ஆகியவற்றுக்கு இடமளிக்காது இருப்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாக இருந்தது.

இவ்வாறான விடயங்களை ஆராய்வதற்காக சட்டரீதியான மற்றும் நீதிமன்ற பொறிமுறை தம்மிடம் இருப்பதனால் வெளியாரின் தலையீடு அவசியமற்றது என்று அரசாங்கம் தொடர்ச்சியாக தெரிவித்துவந்தது.

இந்நிலையில், வெளிநாடுகளைச்சேர்ந்த நிபுணர்களை நியமித்ததன் ஊடாக அரசாங்கம் இதுவரை யிலும் கடைப்பிடித்து வந்த கொள்கை மற்றும் நிலைப்பாட்டை மீறியுள்ளது. இந்த நியமனம் தொடர்பில் அரசாங்கத்தின் பங்காளியான எங்களுடைய கட்சிக்கு எவ்விதத்திலும் தெளிவுபடுத்தவில்லை.

பாதுகாப்பு படையினருக்கு எதிராக விசாரணைகளை மேற்கொண்டு அவர்களுக்கு தண்டனை வழங்குவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமாயின் அவற்றை ஜாதிக ஹெல உறுமய கடுமையாக எதிர்க்கும்.

அதேபோல, ஆலோசனை வழங்குவதற்காக வெளிநாட்டு நிபுணர்கள் மூவரை நியமித்த மைக்கு ஜாதிக ஹெல உறுமய தம்முடைய கண்டனத்தையும் எதிர்ப்பையும் தெரிவித்துள்ளது என்றார்.

ஆலோசனை வழங்குவதற்காக இந்த நிபுணர்கள் குழுவை நியமித்தமைக்கு அர சாங்கமே பொறுப்பு கூறவேண்டும் என அவர் கூறினார்.

### தொண்டு...

பொது விவகாரங்களின் பகுதி, அதில் தேவையற்ற தலையீடுகளை தவிர்த்து அந்த உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும் என இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துவதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சிவில் சமூகத்தினர் தடையின்றி பாதுகாப்பாக சுதந்திரமாக செயற்படுவதற்கான சூழலை ஏற்படுத்துமாறும் இலங்கை அதிகாரிகளுக்கு தாம் அழைப்பு விடுப்பதாக அவர்கள் கூறியுள்ளனர்.

ஜனநாயக சமூகத்தில் சுதந்திரமான, வேறுபட்ட, பன்மைவாதம், அமைதி மற்றும் ஜனநாயகத்தை கட்டிக்காப்பது அவசியம் எனவும் அந்த கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### இலங்கையை...

துள்ளது. ஏனைய நாடுகளை விட இலங்கைக்கு அதிகளவில் ஆயுதங்களை ஏற்றுமதி செய்துள்ளமை தொடர்பில் குறித்த நாடாளுமன்றக் குழு பிரித்தானிய அரசாங்கத்திடம் பதிலைப் பெற முயற்சித்து வருகிறது.

### யாழ்.மாநகரசபை...

கூறினார். இந்நிலையில், 2009 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்துடன், மாநகர சபையின் ஆட்சிக் காலம் நிறைவடைந்த நிலையில், உள்ளூராட்சி அமைச்சினால், ஒரு வருடத்திற்கான நீடிப்பு காலம் வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (25)



சூடாநாட்டு குடிமகன் நேற்று நண்பகல் சுட்டெரிக்கும் வெய்யிலில் இயற்கைக் கடன் கூட போனது தெரியாது உறங்குகிறார்.

## கோண்டாவிலில் விபத்து: இருவர் படுகாயம்

கோண்டாவிலில் நேற்று நண்பகல் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர். கோண்டாவில் டிப்போ சந்திக்கருகில் ஹையேஸ் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் அச்செழு, நீர்வேலியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான இராசையா லசிதரன் (வயது - 28) என்ற இளம் குடும்பஸ்தரும், அச்செழு வடக்கைச் சேர்ந்த வாகீசன் (வயது - 28) என்ற இளைஞரும் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து குறித்து கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ)

### அசையாச்...

அந்தக் காலத்தில் இவ்வாறான பிரச்சினையில் சிக்கிக்கொண்டவர்களுக்கு அவ்ர்களின் (காணி, வீடு) உரிமைகளை இந்தச் சட்டத்தின் மூலம் மீளப்பெற்றுக் கொடுக்க முடியும்.

வடக்கு, கிழக்கில் யுத்தம் காரணமாக தமது காணிகளை கைவி[illegible] பலர் உள்ளனர். இவர்களால் அந்தக் காலப் பகுதியில் தமது சொத்துகள் இருந்த இடத்துக்கு போக முடியாமையாலும் தமது உரிமைகளை கோர முடியவில்லை.

சாதாரண சட்டத்தின் படி குறிப்பிட்ட காலமாக ஒருவர் தனது சொத்துக்களை பயன்படுத்தாது விடுவாராயின் அவர் தமது சொத்துக்களை இழந்துவிடுவார். இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பின்னர் பயங்கரவாதம் காரணமாக தமது சொத்துக்களை பயன்படுத்த முடியாது போனவர்களுக்கு மேற்படி சாதாரண சட்டத்தில் இருந்து விலக்களிக்கப்படும். இதனால், இவர்கள் தாம் இல்லாத காலத்தில் தமது காணிகளை பிடித்து வைத்திருப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

### ஒரு இனம் மட்டும்...

முன்னேற்றமடைந்த நாடுகளாகக் கருதப்படுகின்றன. ஆனால் அவை அவற்றின் உயரிய கலாசாரத்தாலோ அல்லது சிறந்த பண்புகளாலோ முன்னேற்றம் காணவில்லை. திட்டமிட்ட வன்முறைகள் மூலமே அவை முன்னேற்றம் கண்டுள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஈராக், ஆப்கானிஸ்தான் மற்றும் சிரியா போன்ற நாடுகளில் ஏற்பட்ட மோதல்களுக்கும் அழிவுகளுக்கும் இவ்வாறான திட்டமிடப்பட்ட வன்முறைகளே காரணமாகும்.

எமது நாட்டில் இன வன்முறைகளை ஏற்படுத்தி அதனால் இலாபம் பெற ஒரு சாரார் காத்திருக்கின்றனர்.

நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இலங்கை பல்லினங்கள் வாழக்கூடியதொரு நாடு என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இது புத்தரின் தேசம் என்ற கருத்துக்களை பரப்புவதாலோ மலைக்குன்றுகள் மீது அதி உயரமான புத்தர் சிலைகளை வைப்பதாலோ அல்லது சந்திகளில் சிலுவைகளை நிறுவுவதாலோ அல்லது மத்ரஸாக்களை பள்ளிவாசல்களாக மாற்றுவதாலோ சமூக நல்லிணக்கம் ஏற்பட முடியாது.

இலங்கைக்கு முஸ்லிம்கள் எப்போது வந்தார்கள், தமிழர்கள் எப்போது வந்தார்கள் என்ற ஆராய்ச்சிகள் எமக்குத் தேவையில்லை. இது பல்லினங்கள் வாழக்கூடிய நாடு என்பதனை அனைவரும் ஏற்று ஒருவருக்கொருவர் பரஸ்பர ஒத்துழைப்புடன் வாழ்வதால் மட்டுமே சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்.

இந்தியாவில் 700 கோடி மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் 6 ஆயிரம் மொழிகளைப் பேசுகின்றனர். ஒவ்வொரு மொழி பேசுவோருக்கும் தனி நாடு வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கை ஏற்கமுடியாதது. அதுவும் பல்லினங்கள் வாழக்கூடிய நாடுதான். அங்கும் அடிக்கடி இன வன்முறைகள் இடம்பெறுகின்றன.

ஐக்கிய நாடுகள் அமைப்பில் பதிவாகியுள்ள 193 நாடுகள் உலகில் உள்ளன. இவற்றில் இரண்டே இரண்டு நாடுகளில்தான் இன வன்முறைகள் இடம்பெறுவதில்லை.

அவற்றில் ஒன்று மாலைதீவு. அங்கு 100 வீதம் சுன்னி முஸ்லிம்கள் வாழ்கின்றனர். நாட்டின் சனத்தொகை 3 லட்சத்து 95 ஆயிரமாகும். எனவே இங்கு இன ரீதியான வன்முறைகள் ஏற்பட வழியில்லை.

உலகில் இரண்டொரு நாடுகளில்தான் இந்த நிலை. ஏனைய அனைத்து நாடுகளிலும் பல்லின மக்கள் ஒன்றிணைந்து வாழ்கின்றனர்.

மனிதர்களுக்கு மத்தியில் பிறப்பால், வளர்ப்பால், உணவு முறைகளால் மற்றும் தேவைகளால் அனேக ஒற்றுமைகள் உள்ளன.

அதேபோன்று தோற்றத்தால், குணநலன்களால் மற்றும் பின்பற்றும் சமயங்களினால் வேறுபாடுகளும் காணப்படுகின்றன.

உலகின் அதிகாரத்தை தம்வசம் வைத்துக்கொள்ள விரும்பும் நாடுகள் இவ்வாறான பேதங்களை மேலும் வளர்த்து இன மோதல்களை ஏற்படுத்தி அதனால் இலாபம் அடைய முயற்சிக்கின்றன.

சமூக நல்லிணக்கத்துக்கு ஊடகங்கள் சிறப்பான பங்காற்ற முடியும் அனால் இன்று ஊடகங்கள் பணம் சம்பாதிப்பதையே முழு நோக்காகக் கொண்டு செயற்படுகின்றன. இந்த நிலை மாறவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புகன் அச்சகத்தில் 2014 யூலை 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.